# கலைமோகினி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 DEC 1938
MADRAS

ஆசிரியை :
வை.மு.கோதைநாயகி அம்மாள்



*1330

பசு, பக்ஷி ஜாதி முதல்
எத்தகையோரையும்
தன்வயப்படுத்தும்
அபூர்வசக்தி
வாய்ந்த

**கஸ்தூரி திலகம் அல்லது காணும்ருதம்**

"மோகினி"ச்
செல்வியின் அடுத்த
இதழில் (16-வது ஆண்டு
ஆரம்பம். ஜனவரி 1939)
உங்களை மகிழ்விக்கத் தேடி வருகிறது.

*

## வத்ஸகுமார்

ஹாஸ்ய ரஸத்தையே பிரதானமாகவும்,
பல விசித்திரமான சம்பவங்களும்
நிறைந்த புதிய நாவல்

அணு 8. சந்தா நேயர்களுக்கு அணு 6.

டிசம்பர்
1938

**மாலதி** (முடிவு)

அணு
2

12-வதாண்டில் "மங்களபாரதி" ஆரம்பம் முதல் சந்தாதாரராய்ச் சேர்ந்து, இதுவரை தொடர்ச்சியாக ஆதரித்து, புது வருஷ சந்தாவை டிசம்பர் 20-ந் தேதிக்குள் அனுப்புகிறவர்களுக்கு

## தனிப்பரிசு

16-வது ஆண்டுச் சந்தாவை அனுப்புகையில் உங்களது சந்தா நம்பரைக் குறித்து, நமது நாவல்களில் முழுவிலை ரூ. 2 (சந்தா நேயர்களுக்குக் குறைந்த விலையல்ல.) பெறுமான நாவல்களின் பெயரை எழுதி இனாமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். ரூ. 2-க்கு மேற்பட்ட விலையுள்ள நாவல்கள் வேண்டுமாயின், அதிகமாகும் பணத்தை அனுப்பவேண்டும். இனாம் நாவல்களின் தபாற் செலவுக்காக(ரிஜிஸ்டிரேஷன் செலவு உள்பட)உள்நாட்டினர் அணா ஆறும், வெளிநாட்டினர் அணா எட்டும் சேர்த்து அனுப்பவும்.

குறிப்பு :—10, 11-வதாண்டு முதல் 14, 15-ஆண்டு வரையில் சந்தாதாரராயிருந்ததற்காக ஏற்கெனவே இனாம் நாவல் பெற்றவர்கள் மறுபடியும் 16-வதாண்டுக்கும் பெற முடியாதென்பதைக் கவனிக்கவும்.

---

# 16-வது ஆண்டுப் பரிசுகளின் விவரம்

புதுவருஷச் சந்தாவை டிசம்பர் மாதம் 20-ந் தேதிக்குள் அனுப்பும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு, 6 பிரைஸ் சீட்டுகள் எடுத்து அவற்றிற்குக் கீழே கண்டபடி பரிசுகள் கொடுக்கப்படும்.

**முதல் பரிசு ரூ. 20, 2-வது பரிசு ரூ. 15, 3-வது பரிசு ரூ. 10.**

**3 பரிசுகள் ரூ. 5 விகிதம்**

மூன்று சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் நேயர்கட்கு 16-வது ஆண்டின் சஞ்சிகையை இனாமாக அனுப்புவதுடன் அவர்களும் ஷை பரிசுப் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

தயவுசெய்து புது வருஷச் சந்தாவை முன்பணமாக உடனே அனுப்புங்கள். உங்களது சந்தா நம்பரை மறக்காமல் எழுதவும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், 26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 DEC 1938
MADRAS

ஸ்ரீராமஜெயம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீரராகவ கவி.

| மலர் 15 | பகுதான்ய ௵ கார்த்திகை ௴<br>டிஸம்பர் 1938 | இதழ் 12 |
|---|---|---|

## திருமால் துதி

மருணீங்கி மாண்பய னெய்து மருணீங்கா
அன்பன் தனதடியார்க் காங்கு. 1

பையரவின் மேனடித்த பங்கயத்தா ளென்மனத்து
ளையவினி நீக்கா தருள். 2

கருமாக் கதமொழித்த கார்முகிலை நங்கள்
பெருமானை யெப்பொழுதும் பேசு. 3

நளினத் திருவுந்தி நாயக னுறுந்
நளினத் திருவடியை நாடு. 4

பனிமாக் கடலுட் பயிலும் பரமன்
தனிமாக் கழலிணையிற் றழ். 5

விளவின் கனியுகுத்த விண்ணோர் பெருமான்
துளவி னடியே துணை. 6

ஆநிரையை முன்மேய்த்த வாயனைநீ மாமனமே !
தீநிபய நீக்கிடுவான் தேர். 7

—ஸ்ரீ வீரராகவ கவி.

# முஸ்டபா கெமால்

ஸ்ரீ. எம். ஸி. ஸ்ரீநிவாஸன், எம். ஏ., பி. எல்.

உலகில், பிறந்தால் இறந்துதான் ஆகவேண்டுமென்ற தத்வத்தை அறியாதவர்கள் யாரும் இல்லையாயினும், விருப்பத்துடன் மரணத்தை வரவழைப்பவர்கள் சிலரே யாவர். சிலர் விஷயத்தில் உலகமே அன்புகொண்டு அம்மாதிரியான மனிதர்களின் மறைவைக் கண்டு துக்கிக்கிறது. மகான்கள் இறந்த பின்னும் இருக்கிறார்களென்று சொல்லுவார்கள். அவர்களின்பொருட்டு, நாம் வடிக்கும் கண்ணீர் என்றும் வற்றா ஏரியாகி, அவர்களின் நினைவை நம் மனத்தில் பச்சை பசேலென்று வைத்துக்கொண்டிருக்கிறது. கெமாலின் மரணத்தைக் குறித்து உலகமே வருந்துகிறது.

கெமால், டர்க்கியில் 1880-ம் வருஷம் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். தகப்பனாரை வெகு சீக்கிரத்திலேயே இழந்தார். தனது புத்தியினாலும் திறமையினாலும் விடா முயற்சியினாலும் டர்க்கி தேசத்தின் சர்வாதிகாரியானார். டர்க்கி சுல்தானை, சிம்மாசனத்திலிருந்து இறக்கி, தூங்கிக்கொண்டிருந்த ஜனங்களைத் தட்டி எழுப்பி, அவர்களை ஐரோப்பியர்களின் முன்னணியில் தோள் தட்டி நிற்குமாறு செய்தார். பழங்காலத்து மூட பழக்க வழக்கங்களைக் குழிதோண்டிப் புதைத்தார். தனது சீர்திருத்தங்களுக்கு முட்டுக்கட்டை போட வருபவர்களைக் கொஞ்சங்கூட, ஈவு இரக்கமின்றி, அக் குழியிலேயே புதைத்துவிட்டார். போர்க்களத்தில் பல வெற்றி மாலைகள் அடைந்து, பலஹீனமான நாகரிக மற்ற நாடுகளை அபகரிப்பதிலேயே கண் வைத்து, ஆயுதபலத்தால் வெறிகொண்டு, ராக்ஷஸப் பசியோடிருந்த ஐரோப்பிய வல்லரசுகளை, நடுங்க வைத்துவிட்டார். கெமால், அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பு டர்க்கியை, 'வியாதி மனிதன்' என்று ஏளனம் செய்து வந்தார்கள். கெமால் அந் நாட்டை, தற்சமயம் தேவலோகம்

12828.

1898

போலாக்கி யிருக்கிறார். கண்ணுக்கு ஆபாசமான உடைகளைக் களைந்து எறிந்து, அங்கு அனைவரும் ஒரேமாதிரியான ஐரோப்பிய உடை யணியும்படிச் செய்தார். பெண்மணிகளை வதைத்துக் கொண்டிருந்த முகமூடிகளைப் (பர்தா) பிடுங்கி நெருப்பில் போட்டார். டர்க்கியின் சுதந்திரத்தை எவரும் பறிக்க முடியாமல், லக்ஷக் கணக்கில் போர் வீரர்களைத் திரட்டினார். நல்ல வீரர்களாகவும் செய்துவிட்டார். தேசத்தின் பாதுகாப்புக்குப் படைகள் மாத்திரம் போதாது; பொது ஜனங்களின் இடைவிடா ஆதரவும், அன்பும் அவசியமென்பதை யுணர்ந்து, பொக்கிஷத்தை அறிவு வளர்ச்சிக்காக, கல்வியின்பொருட்டு ஏராளமாகச் செலவழித்தார். ரஷியாவிலும் டர்க்கியிலுந்தான் பொதுஜனக் கல்வி அபிவிருத்தி வெகு துரிதத்தில் ஏற்பட்டிருக்கிறது என்கிறார்கள். டர்க்கியில் அவருக்கு ஜனங்கள், 'தகப்பனார்' என்றே பெயரிட்டிருக்கிறார்கள்.

மகான்களின் வாழ்நாட்களைப்பற்றியும் ஜீவிய சரித்திரங்களையும் படிப்பது இன்றியமையாதது. கெமால், ஒரு மகான் என்பதில் ஐயமில்லை. ஜாதிச் சண்டைகளாலும் அறிவின்மையினாலும் ஒற்றுமையில்லாமலிருக்கும் நமது நாட்டு ஜனங்கள், கெமாலின் சரித்திரத்தைப் படித்தால், மிகுந்த நன்மை யடையக் கூடும். 'சனாதனம், சனாதனம்' என்று சொல்லி, ராஜீய சீர்திருத்தங்களுக்கு முட்டுக்கட்டைப் போடும் சில அறிவில்லா ஹிந்துக்களுக்கும், 'இஸ்லாம், இஸ்லாம்' என்று மதத்தின் பேரைச் சொல்லிக்கொண்டு, மிகவும் நேர்த்தியாகவுள்ள ஒரு மதத்தைத் தப்பாக பாமர ஜனங்கள் நினைக்கும்படி நடந்து கொள்ளும் சில முஸ்லீம் சகோதரர்களுக்கும் ராஜீயத்திற்கும் மதத்திற்கும் சம்பந்தம் இல்லையெனக் காட்டிய கெமாலின் வாழ்நாள் ஒரு வழி காட்டியாகவும் அணையா விளக்காகவும் இருக்கக்கூடும். கெமால், மதகுரு அல்ல; சுதந்திரத் தாயைப் பூஜிக்க வந்த தேசகுரு. சுதந்திரத்திற்காகப் பாடுபடும் நாமும் அம் மகானைப் போற்றுவோம். இனி, அவர் டர்க்கியின் புதல்வன் மாத்திரமல்ல; உலகத்தினர் யாவராலும் போற்றப்படும் உத்தமப் புதல்வர் ஆவர். கெமால், சுதந்தர ஆர்வமுள்ள எல்லா தேசத்தினர் மனத்திலும் சிரஞ்சீவியாக இருந்து, வழிகாட்டும் பெரியார் ஆவர்.

# வெளிநாட்டுச் செய்திகள்

## பிரிட்டிஷ் முனிஸிபல் தேர்தல்கள்

இங்கிலாந்திலும் வேல்ஸிலுமுள்ள 383 நகரங்களில் தேர்தல்கள் நடைபெற்றன. கட்சிகளின் லாப நஷ்டங்கள். கன்ஸர்வேடிவ்கள்; 57 லாபம், 37 நஷ்டம். லிபரல்கள்: 14 லாபம், 16 நஷ்டம். தொழிற்கக்ஷி 62 லாபம், 79 நஷ்டம். சுயேச்சை: 40 லாபம், 41 நஷ்டம்.

போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுள்பட கக்ஷிகளின் பலா பலம் பின் வருமாறு:—தொழிற்கக்ஷி 407, கன்ஸர்வேடிவ் 406, லிபரல்கள் 85, சுயேச்சை 203, இதரர்கள் 84.

## பிரிட்டனில் இந்திய மேயர்

டாக்டர் சி. எல். காடியால் என்ற இந்தியர், பின்ஸ்பரி மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு இந்தியருக்கு இத்தகைய கௌரவம் கிடைப்பது இதுதான் முதல் தடவை.

## அமெரிக்காவில் கடுமையான குளிர்

அமெரிக்காவின் வட கிழக்கு மாகாணங்களில் கடுங் குளிரும், பனிப் புயலும் வாட்டுகின்றன. இதுவரை 40 பேர் மாண்டதாகத் தெரிகிறது. நியூயார்க்கில் பல தெருவுகளில் 5 முதல் 6 அடி பனி சேர்ந்து விட்டது. மோட்டார் விபத்துகள் நூற்றுக்கணக்கில் ஏற்பட்டன. 40,000 தொழிலாளர் தெருக்களிலிருந்து பனியை அப்புறப்படுத்தும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். ஒரு வீட்டில் குளிர்காய ஒரு தாயும் 5 குழந்தைகளும் அடுப்பங்கரைக்குச் சென்றனர். ஸ்டவ் வெடித்ததால் அவர்கள் வெந்து மாண்டனர்.

## 4 பிரிட்டிஷ் கப்பல்கள் தாக்கப்பட்டன

நவம்பர் 25-ந்தேதி வேலன்ஷியா மீது கலக விமானங்கள் குண்டுகளை வீசுகையில், நான்கு பிரிட்டிஷ் கப்பல்கள் தாக்கப் பட்டன. கப்பல்கள் பழுதடைந்தனவே ஒழிய அதிலிருந்தோர் காயமடையவில்லை.

## போப் அசௌக்கியம்

சோர்வடைந்ததால், போப்புக்கு ஆஸ்த்மா கண்டிருக்கிறது. அவருக்கு பிராணவாயு அவசியமானால் செலுத்தப்படும். அவருடைய ஹ்ருதயம் ரொம்பவும் பலவீனமாயிருக்கிறது. இரண்டு டாக்டர்கள் சிகிச்சை செய்து வருகின்றனர்.

## பிரிட்டன், பிரான்ஸுக்கு ஜெர்மன் கேள்வி

### எதற்காக புதிய விமானப்படை ?

"பிரிட்டிஷ்-பிரெஞ்சு சம்பாஷணைகளில் ராணுவ விஷயங்கள் தான் அதிகமாய் அடிபட்டன. சம்பாஷணைகளுடன் கூட, ராணுவப் பேரிரைச்சல்கள் கேட்பது வருந்தத்தக்கது. பிரிட்டனும், பிரான்ஸும் கூட்டாகவே விமான விஸ்தரிப்பில் இறங்கும் என்று பிரெஞ்சு பத்திரிகைகள் கூறுகின்றனவே ?

அந்த விமானப் படைகள் எதற்காக? அட்லாண்டிக் சமுத்திரதிலுள்ள அலைகளைச் சுடுவதற்காகவா? இல்லை. இந்த இரண்டு நாடுகளுக்கும் கிழக்கேயுள்ள தேசங்கள் மீது திருப்பும் ஒரே நோக்கத்துடன் அவை தயாரிக்கப்படுகின்றன" என்று "நாக்டஸ்கேப்" என்ற நாஜிப் பத்திரிகை எழுதுகிறது.

## ஆப்ரிக சுதேசிகளுக்கு சுயாட்சி

உள்நாட்டு மந்திரி சர். சாமுவேல் ஹோர், கேம்பிரிட்ஜில் பேசுகையில் கூறியதன் சாரமாவது : "ஐரோப்பாவை சாந்தப்படுத்தும் வேலை தடைபட்டிருக்கிறது. தடைகள், தாமதம், ஏமாற்றம் எல்லாவற்றிற்கும் தயாராகத்தானிருக்கவேண்டும். பெரிய தடையிருப்பது கண்டு நம்பிக்கை இழக்கக்கூடாது. யூதர்களின் வெளியேற்றம் ஒவ்வொரு பிரிட்டிஷ் மனதையும் கலக்கியுள்ளது. ஜெர்மனியும் நாமும் தீர்த்துக்கொள்ள வேண்டிய பல பிரச்னைகளைப்பற்றி விவாதம் நடத்துவதையும் அது கஷ்டமாக்கி விட்டது.

ஆப்ரிக மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த, கட்டுப்பாடாய் முயற்சிக்க வேண்டும். அவர்களுக்குக் கல்வி வசதியளித்து, அவர்களே தங்கள் ஸ்தாபனங்களின்மூலம் ஆட்சிபுரியும்படி செய்யவேண்டும். இது மகத்தான வேலை. சுதந்திரம், நம்பகம், சகிப்புத்தன்மை, சுயாக்ஷி இவற்றை ஏகாதிபத்தியமெங்கும் பரப்புவது நம்முடைய பொறுப்பு என்பதை உலகிற்கு நிரூபிப்போம்"

## ஜப்பானின் எச்சரிக்கை

"கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டு வரும் புதிய நிலைமையை அயல் நாட்டு வல்லரசுகள் நன்கு அறிந்து கொள்ளவேண்டும்." கடந்த காலத்தில் அயல் நாட்டு வல்லரசுகளின் ஏகாதிபத்திய பேராசை மூலம் சீனாவில் ஜப்பானுக்கு அனுகூலங்கள் இல்லாதபடி செய்யப்பட்டதைக் குறிப்பிட்டு, பிரதம மந்திரி அறிவித்ததாவது :—"இனிமேல் அவ்வித நிலைமையை அடியோடு மாற்ற வேண்டியதன் அவசியத்தை ஜப்பான் உணர்ந்துவிட்டது. அயல் நாட்டு வல்லரசுகளின் ஒத்துழைப்பை நிராகரிக்கவோ அல்லது சீனாவில் அந்த வல்லரசுகளின் சட்ட ரீதியான உரிமைகளையும் நன்மைகளையும் பங்கப்படுத்தவோ ஜப்பானுக்கு உத்தேசமில்லை.

—பிரதம மந்திரி கோனோயி,

## இரும்பெடுத்தவர் கை சும்மா இருக்குமா ?

உலகிலுள்ள எல்லா வல்லரசுகளும் இப்போது யுத்த தளவாடங்களைப் பண்ணிக் குவிப்பதில் மும்முரமாயிருக்கின்றன. 1932-33-ம் வருஷத்தில் ஒவ்வொரு அரசாங்கமும் யுத்த முஸ்தீபுக்குச் செலவழித்த தொகையையும் இப்போது செலவழிக்கும் தொகையையும கோடி பவுன்கள் கணக்கில் கீழே தரப்படுகிறது.

| | 1933 | 1938 | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ரஷியா | 6 | 100 | ஜப்பான் | 5 | 35 | பிரான்சு | 13½ | 25 |
| ஜெர்மனி | 5 | 80 | பிரிட்டன் | 10 | 35 | அமெரிக்கா | 10 | 12 |

## இத்தாலியில் மூலதன வரி

இத்தாலிய மந்திரி சபை 7½ சதவிகிதம் மூலதன வரியை விதிப்பதென்று தீர்மானித்தது. இந்த வரியைத் தவணைகளாகச் செலுத்தலாம். வருஷத்துக்கு 10,000 லயருக்குமேல் வருமானமுள்ள கம்பெனிகளும் இதர ஸ்தாபனங்களும் வரி செலுத்தவேண்டும். சொந்தக்காரரின் சொந்த உழைப்பின் மூலம் கிடைக்கும் சில வருவாய்களுக்கு விலக்கு உண்டு.

வரி சுலபமாய் வசூலாவதற்குப் பாங்குகள் கடன் கொடுக்கவும் வசதிகள் செய்திருக்கிறார்கள். இந்த வரியின் மூலம் சர்க்காருக்கு 120 லக்ஷம் பவுன் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த வருஷத்திலிருந்து மோட்டார் வரி ரத்தாகிறது. ஆனால், வர்த்தக மோட்டார்களுக்குப் பழையபடியே வரி விதிக்கப்படும்.

## பாஸிஸத்தினால் சமாதான நிலையா ?

பாஸிஸம் வெற்றி பெற்ற இருபது வருஷங்களுக்குப் பிறகு எல்லோருக்கும் உண்மையான சமாதான நிலைமை ஏற்பட ஆரம்பித்திருக்கிறது. ஐரோப்பிய அரசியல் வானத்தில் தெளிவான நீல மேகங்கள் பரவ ஆரம்பிக்கின்றன. பொறுப்பு வாய்ந்தவர்கள் இதற்காக வேலை செய்கிறார்கள்.

ஆனால், இதை அளவுக்கு மீறி நம்புவதும் புத்திசாலித்தனமாகாது. ரோம் - பர்லின் அச்சின் கொள்கை நியாய புத்தியையும், உண்மையான சமாதானத்தையும் அடிப்படையாகக் கொண்டது. அதனிடம் தாங்கள் ஏதோ விசேஷ தோல்வியடைந்து விட்டதாக நினைப்பவர்களும் இருக்கிறார்கள். கண்ணைத் திறந்து கொண்டே அவர்கள், தெளிவில்லாததும் அசாத்தியமானதுமான பழிக்குப் பழி வாங்குவதைப்பற்றி ஏதோ பேசுகிறார்கள். ஆயுத மூட்டைகளைத் தலையில் வைத்துக்கொண்டுதான் நாம் இன்னமும் தூங்கமுடியும் '' என்று ஸினர் முஸோலினி கூறினார்.

## நிகராகுவா யூதரின் பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரம்

பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் அனுஷ்டித்துவரும் கொள்கையை ஆக்ஷேபித்து, பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்கரிப்பதென்று, நிகராகுவா வெங்குமுள்ள யூத வியாபாரிகள் தீர்மானம் செய்திருக்கின்றனர். ஏற்கனவே கொடுத்துள்ள ஆர்டர்களையும் ரத்து செய்துவிட்டார்கள்,

# உள்நாட்டுச் செய்திகள்

---

## பறிமுதல் நிலங்கள் வாபஸ் மசோதா

### கவர்னர், வைசிராய் அங்கீகாரம்

பம்பாய் சட்ட சபைகளில் சென்ற பூனு செஷனில் நிறைவேறிய 'பம்பாய் பறிமுதல் நிலங்கள் வாபஸ் மசோதாவுக்கு கவர்னர், வைசிராய் இருவரும் 'சம்மதம்' அளித்து விட்டதாகத் தெரிகிறது. மசோதாவி லுள்ள ஷரத்துகள்படி, எந்தெந்த நிலங்கள் வாபஸ் செய்யப்படும் என்ற ஜாப்தா இன்னம் இரு வாரங்களில் சர்க்காரால் வெளியிடப்படும்.

## ரோட் அமைக்க சர்க்கரைக் கழிவு

இந்தியாவில் இப்பொழுது கிடைக்கும் 394099 டன் சர்க்கரைக் கழிவை ரோட்டு அமைக்க உபயோகப்படுத்த முடியும் என்று டாக்டர் சென், கான்பூர் ஏழாவது சர்க்கரை நிபுணர் சங்கத்தில் பேசுகையில் கூறி னூர். செலவும் சதுர கெஜத்திற்கு 10 அணுவே ஆகுமாம். தார் ரோட் அமைக்க இப்பொழுது சதுர கெஜத்திற்கு 15 அணுவும், செமன்ட் ரோடு களுக்கு, சதுர கெஜத்திற்கு 3-10-0 அணுகவும் செலவாகிறதாம்.

## தொழிலாளருக்கு பம்பாய் பிரதம மந்திரியின் செய்தி

"ஸ்டிரைக் செய்வதில் தொழிலாளருக்குள்ள உரிமை இம் மசோதா வால் பாதிக்கப்படவில்லை. மசோதாவில் கூறப்பட்டுள்ள முறைகளை யெல்லாம் பயன்படுத்திச் சமரசத்துக்காக முயற்சி செய்த பிறகு காரியம் நிறைவேருதிருக்குமாயின், நீங்கள் ஸ்டிரைக் செய்யும்போது எந்த முத லாளியும் உங்கள் கோரிக்கையை நிராகரிக்கத் துணியமாட்டான்."

"பம்பாய் காங்கிரஸ் மந்திரி சபை பதவியேற்றது முதல் செய்துள்ள பல காரியங்களையும் நன்கு கவனியுங்கள். தொழிலாளரின் நிலைமையை முன்னேற்றுவதும், அவர்களிடையே சரியான ஸ்தாபன பலம் ஏற்படு வதுமே காங்கிரஸின் நோக்கம். அநாவசியமாக தொழிலாளரை ஸ்டிரைக் செய்யும்படி நிர்ப்பந்தப்படுத்துவோருக்குத் தொழிலாளர் பயந்து விடக் கூடாது. தொழிலாளரின் க்ஷேமத்தையே நான் பெரிதும் விரும்புகிறேன். தொழிலாளரின் உரிமைகளை இந்திய தேசிய காங்கிரஸ் நன்கு காப் பாற்றும்."

## காங்கிரஸ் வெற்றிகள்

சென்றமாதம் பல ஜில்லா போர்டுகளுக்கு நடந்த தேர்தல்களில், பின் வருமாறு காங்கிரஸ் கட்சியினர் ஸ்தானங்கள் பெற்றிருக்கின்றனர் :—

| | மொத்தம் | காங்கிரஸ் | | | |
|---|---|---|---|---|---|
| கர்நூல் | 52 | 42 | தென்னாற்காடு | 52 | 46 |
| மேலக் கோதாவரி | 43 | 38 | அனந்தபூர் | 52 | 45 |

தமிழ் கலைக்கு விமோசனமளிக்கும்

# விமோசனம்

இம்மாத முடிவிற்குள் "விமோசனம்" என்னும் தமிழ்ப்படம் முடிவடைந்து காட்சிக்குத் தயாராகிவிடும். மதுவிலக்கு பிரசாரத்தை அடிப்படையாகக்கொண்ட இப்படம் நாடகமாக நடித்தபொழுது பிரபல தினசரிகளாலும், பத்திரிகைகளாலும், சென்னை பிரதம மந்திரி கனம். ஸ்ரீ. ராஜகோபாலாசாரியாராலும் புகழப்பட்ட அதே கதைதான், இப்பொழுது தமிழ்ப் பேசும் படரூபமாக வெளிவருகின்றது. ஏராளமான பொருட்செலவில், அனுபவமுள்ள ஸ்ரீ. டி. மார்க்கோனியால் டைரக்ட் செய்யப்படுகின்றது. திருச்செங்கோட்டிலுள்ள காந்தி ஆச்ரமக் காட்சியும், சேலத்துக் காட்சிகளும் படத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. கிராம வாழ்க்கை, குடியின் கெடுதிகள், உண்மையின் உயர்வு, சட்டசபையில், மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வருதல். அதன் வெற்றி முதலிய காட்சிகள் இப்படத்தில் படம் பிடிக்கப்பட்டிருக்கின்றன. இப்படத்தின் பாட்டுகள் நூதன முறையில் அமைந்திருப்பதால், மக்கள் மனதை உருக்குவதில் ஐயமில்லை. சில வெளிக்காட்சிகளைத் தவிர, படப்பிடிப்பு முடிவடையுந் தறுவாயிலிருக்கின்றது.

நூற்றுக்கணக்கான தொண்டர்கள் அணிவகுத்து கள்ளுக் கடைக்குச் செல்லும் காட்சியும் சிறைச்சாலை முதலிய காட்சிகளும் அதிக பணச் செலவில் தயாரித்துப் படத்தில் காண்பிப்பதனுல் படத்திற்கு ஒரு தனி அழகு. அதனுல் படத்தை ரஸிக்கலாம்.

சங்கீதசாலை சிறுமாணவிகள் இப்படத்தில் தங்கள் பாகத்தை நன்கு உணர்ந்து நடிப்பதனுல், மேல் நாட்டு நடிகை, நடிகர்களை விடச் சிறந்த கீர்த்தி அடைவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. பேபி ஜயா தமிழ்ப்பட உலகிற்கு கிடைத்துள்ள ஒரு மணியென்றே கூறலாம். அழியாப் புகழை சினிமா உலகில் அடைவாளென்பது திண்ணம்.

ஓடியன் கம்பெனியாரால் 'விமோசனம்' படத்தின் பாட்டுகள் பதிவு செய்யப்படுகின்றன.

# மகாத்மாவின் மணிவாக்கு

## ஆயுதப் போட்டியின் ஆபத்து

"பைத்தியக்காரத்தனமான இந்த ஆயுதப் போட்டி இப்படியே நீடித்துக்கொண்டு போனால், இதுவரையில் சரித்திரத்திலேயே சம்பவித்திராத அவ்வளவு பெரிய மனிதவர்க்கத்தின் அழிவு நேர்ந்துதான் தீரும்" என்று "ஹரிஜன்" பத்திரிகையில், மகாத்மா காந்தி எழுதியிருக்கிறார். செக்கோஸ்லவேகியாவைப்பற்றி மகாத்மா காந்தி எழுதியிருந்த அபிப்பிராயங்களைச் சிலர் ஆக்ஷேபித்திருந்தார்கள். அவைகளுக்கு, காந்திஜி பதில் எழுதி இருக்கிறார்.

செக்கோவியர்களுக்கு, காந்திஜி சொன்ன அஹிம்ஸை யோசனை பலஹீனர்களுக்குத்தா னென்றும், இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற பெரிய வல்லரசுகளுக்கு அல்லவென்றும் அவர்கள் எழுதி இருந்தார்கள். காந்திஜி எழுதி இருக்கும் பதிலின் வாசகம் பின் வருமாறு:—

### மீண்டும் வாசித்துப் பாருங்கள்

"என்மீது குறை கூறுபவர்கள், என்னுடைய வியாசத்தை மறுபடியும் ஒருமுறை வாசித்தார்களானால், அந்த யோசனையை நான் பெரிய வல்லரசுகளுக்குச் சொல்லாமல் இருந்தது பயத்தினலல்லவென்பதை அறிவார்கள். அவர்களுக்கு நான் யோசனை சொல்லாமலிருந்ததற்கு வேறு காரணம் இருந்தது. அவர்களுக்கு ஒன்றும் கஷ்டமில்லை. ஆகவே, அவர்களுக்குப் பரிகாரத்திற்கும் அவசியமில்லை. அதாவது, செக்கோஸ்லவேகியாவைப் போல் அவர்கள் பீடிக்கப்பட்டிருக்கவில்லை. செக்கோஸ்லவேகியாவின் வாழ்க்கைக்கே ஆபத்து வந்திருந்தது. பெரிய வல்லரசுகளுக்கு அத்தகைய ஆபத்து ஒன்றும் இல்லை. ஆகையால், பெரிய வல்லரசுகளுக்கு நான் எதுவும் யோசனை சொல்லுவது அனவசியமான, தேவை இல்லாத உபதேசமாய் இருந்திருக்கும்.

### இரண்டு வழிகள்தான் இருந்தன

அவசியத்தை முன்னிட்டு மனிதர்கள் நல்லவர்களாகத் திரும்பி விடுவது ரொம்ப சொல்ப மென்பதை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். சந்தர்ப்ப விசேஷங்களால் மனிதன் நல்லவனாகத் திரும்புவதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால், நல்லவனாக வேண்டும் என்பதற்காக, ஒருவன் நல்லவனாவது அதிகம் விரும்பத்தக்கது. செக்கோவியர்களுக்கு இரண்டே வழிகள்தான் இருந்தன. ஒன்று ஜெர்மனியின் வலிமையின் முன் சமாதானமாக சரணாகதி அடையவேண்டும்; அல்லது தன்னந்தனி

யாக நின்று சண்டை போடவேண்டும். அப்படிச் செய்திருந்தால், அநேக மாக நிச்சயம் நசித்துப் போயிருக்கக்கூடும்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான், நான் வேறு வழி ஒன்று சொல்ல வேண்டியது அவசியமாய் இருந்தது. சற்றேறக் குறைய இதே மாதிரி யான சந்தர்ப்பத்தில் இது வெற்றி பெற்றிருக்கிறது. செக்கோவியர்களுக்கு நான் சொன்ன யோசனை பொருத்தமானதென்றே நினைக்கிறேன். வல்லரசுகள் விஷயத்தில் அது பொருத்தமாய் இருந்திராது.

## உங்களுக்கேன் இந்த விவகாரம்?

'நீங்கள்தான் ஒரு கட்டுப்பாடு விதித்துக்கொண்டிருக்கிறீர்களே! அதைமீறி ஒரு வெளிநாட்டுக்கு ஏன் நீங்கள் யோசனை சொல்லவேண்டும்? இந்தியாவில் அஹிம்ஸையின் பரிபூர்ண வெற்றியை நீங்கள் ஸ்தாபிக்க முடியவில்லை. அதுவும் இப்போது காங்கிரஸ்காரர்கள் உண்மையாகவே அஹிம்ஸைக் கொள்கையைப் பின்பற்றுகிறார்களா வென்று சந்தேகிக்க ஆரம்பித்திருக்கிறீர்கள். இந்தச் சமயத்தில் ஏன் இப்படி ஆலோசனை சொல்லவேண்டும்?' என்று கேட்கலாம். என்னுடைய கட்டுப்பாடும், காங்கிரஸ் நிலைமையின் இப்போதைய நிலையற்ற தன்மையும் எனக்கு ஞாபகம் இருந்தன. ஆனால், அஹிம்ஸையில் எனக்குள்ள சொந்த நம் பிக்கை கொஞ்சங்கூட குறையவே இல்லை. மகத்தான இந்த சோதனை காலத்தில், இந்த அஹிம்ஸா பரிகாரத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று செக்கோவியர்களுக்கு யோசனை சொல்லாமல் இருப்பது பயந்தாங் கொள்ளித்தனமாய் இருந்திருக்குமென்று நான் கருதினேன்.

கட்டுப்பாடு இல்லாத, சமீபகாலம் வரையில் ஏகோபித்த கஷ்டத்தை அனுபவித்துப் பழக்கமில்லாத கோடிக்கணக்கான ஜனங்களால் ஒப்புக் கொள்ள முடியாததை, கட்டுப்பாடும், கஷ்டப்படும் பழக்கமும், சிறியது மான ஒரு தேசம் ஏற்றுக்கொள்வது சாத்தியமாய் இருக்கக்கூடும்.

## அஹிம்ஸைக்கு ஏற்ற இந்தியா

இந்தியாவைத் தவிர, வேறு எந்த நாடும், அஹிம்ஸைக்கு லாயக்கில்லை என்று சொல்லிக் கொள்ளுவதற்கு எனக்கு உரிமையில்லை. மீண்டும் சுதந் திரத்தைப் பெறுவதற்கு அஹிம்ஸா வழிகளை அனுஷ்டிக்க இந்தியாதான் மிகவும் லாயக்கான தேசம் என்று நான் நம்பி வந்திருக்கிறேன்; இன்னும் நம்பி வருகிறேன்.

இதற்கு மாறான அறிகுறிகள் தென்பட்ட போதிலும், காங்கிரஸைவிட அதிகமான இந்திய ஜனசமூகம், அஹிம்ஸா வழிகளைத்தான் ஆதரிக்கு மென்ற நம்பிக்கை எனக்கு உண்டு. உலகத்திலுள்ள மற்றெல்லா நாடுகளையும் விட, அஹிம்ஸைக்கு அதிகம் தயாராயிருப்பது இந்தியாதான். இதை

உடனே அனுஷ்டானத்திற் கொண்டுவரக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்ட போது செக்கோவியர்களுக்கு அதை நான் சொல்லாமலிருக்க முடியவில்லை.

## ஒரு புரட்சி ஏற்பட வேண்டும்.

ஆனால், பெரிய வல்லரசுகளும் எந்தச் சமயத்திலும் இதை ஏற்றுக் கொண்டு, எதிர்காலத்தின் அழியா நன்றியைப் பெறலாம். அவர்கள் ஆயுதப் பரிஹாரணம் செய்தால், அதன்மூலம் மற்றவர்களும் சித்த ஸ்வாதீனம் பெறுவதற்கு உதவி செய்தவர்களாவார்கள்.

ஆனால், இந்தப் பெரிய வல்லரசுகள், தங்கள் ஏகாதிபத்திய ஆசைகளை விட்டொழித்தாக வேண்டும். உலகத்தில் அதிக நாகரிகம் பெருதவர் களென்று சொல்லப்படுபவர்களின் வாழ்க்கையை மாற்றி அமைக்கும் கைங் கரியத்தையும், அவர்களைச் சுரண்டுவதையும் விட்டுவிடவேண்டும்.

அதாவது, ஒரு பரிபூர்ணமானபுரட்சி ஏற்படவேண்டும். பெரிய நாடுகள் தாமாகவே, இதுவரையில் தாம் பின்பற்றிவந்துள்ள கொள்கைக்கு நேர் மாறுன கொள்கையை அனுஷ்டிக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனால், இதற்குமுன் எவ்வளவோ அற்புதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்த யுகத்திலும் அற்புதங்கள் நிகழக்கூடும்.

தவறைத் திருத்துவதற்குக் கடவுளுக்குள்ள சக்திக்கு ஒரு அளவு விதிக்க முடியுமா? ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். பைத்தியக்காரத்தனமான இந்த ஆயுதப் போட்டி நீடித்துக் கொண்டே போனுல், சரித்திரத்திலேயே கேள்விப்பட்டிராத அளவுக்கு அவ்வளவு பெரிய அழிவு ஏற்படப்போவது நிச்சயம்.

வெற்றி பெற்ற தேசம் என்று ஒன்று பாக்கி இருந்தால், அந்த வெற்றியே அதற்கு மரண அனுபவத்துக்குச் சமமான வாழ்க்கையாயிருக்கும். மகா உன்னதமான அஹிம்ஸா தத்துவத்தைத் தைரியமாக ஏற்றுக்கொள்வதைத் தவிர வரப்போகும் விபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வேறு வழி கிடையாது.

## நேர் முரணுன இரண்டு தத்துவங்கள்

ஜனநாயகமும், பலாத்காரமும் சேர்ந்து வாழமுடியாது. இப்போது ஜனநாயகங்களென்று சொல்லப்படும் நாடுகள் சர்வாதிகார நாடுகளாக வேண்டும்; அல்லது அவைகள் உண்மையாகவே ஜனநாயகத் தன்மை பெற வேண்டுமானுல், தைரியமாக அஹிம்ஸையைப் பின்பற்றவேண்டும். தனிப்பட்டவர்கள்தான் அஹிம்ஸையைப் பின்பற்றலாமேயொழிய தனிப் பட்டவர்கள் பலர் அடங்கிய தேசங்கள் அதைப் பின்பற்ற முடியாதென்று சொல்லுவது அடாத பேச்சாகும்."

## வக்கீல்களின் கடமை

**பெஷாவர் வக்கீல்கள் சங்கத்தார் அளித்த உபசாரப் பத்திரத்திற்குப் பதில் அளிக்கையில், காந்திஜி பின்வருமாறு கூறினர்.**

"பணத்திற்காக வேலை செய்யாமல், கடமையாகக் கருதி வேலை செய்கிறவர்களே உண்மையான வக்கீல்கள். உங்களில் அதைப்போல வக்கீல்கள், யாரேனும் இருந்தால் அவர்களுடைய பாதங்களை நான் முத்தமிடுவேன். அதைப்போல வக்கீல்கள் இல்லையென்றால், அப்பேர்ப்பட்ட பேர்வழிகளை உற்பத்தி செய்து சுயராஜ்ய வக்கீல்களாகுங்கள்.

உங்களிடத்தில் அந்தக் குறையிருப்பதாக கான் அப்துல் கபார்கான் என்னிடம் புகார் செய்திருக்கிறார். இந்த பத்திரத்திற்கு ஏதேனும் அர்த்த புஷ்டி யிருக்குமானல், நீங்கள் கௌரவ சுயராஜ்ய வக்கீல்களாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்களிடமிருந்து இந்தப் பிச்சைக் கேட்கிறேன்.

உபசாரப் பத்திரங்கள் அளிப்பதையும் பெற்றுக் கொள்வதையும் இப்பொழுது அநேகமாக மறந்துவிட்டேன். இந்தப் பழக்கம் நிற்கவேண்டுமென விரும்புகிறேன். இதைக் கொடுக்கிறவர்களுக்கோ அல்லது புகழப்பட்டுப் பெற்றுக் கொள்கிறவர்களுக்கோ இதனல் என்ன நன்மை ஏற்படுகிறதென்று எனக்குப் புரியவில்லை.

என்னைச் சகோதரர் என்று நீங்கள் அழைத்திருப்பதைக் குறித்துச் சந்தோஷப்படுகிறேன். ஆனல், நான் சட்டத்தை மறந்துவிட்டதால், நமக்குள் இருந்த தொடர்பும் அறுந்துவிட்டது. வக்கீல்களையும், டாக்டர்களையும் பற்றி எனக்குள்ள அபிப்பிராயத்தை 1908-ல் நான் எழுதிய புஸ்தகத்தில் தெரிவித்திருக்கிறேன். அதை இப்பொழுது மாற்றிக் கொள்ளத் தயாராயில்லை."

---

## "தேசியக் கொடி"

இந்தத் தேசியக் கொடியின் கருத்தை நிர்ணயித்தவனுகிய நான், இக்கொடியானது பல தடவைகளில் துர்வினியோகமாவதையும் சில சமயங்களில் பலாத்காரத்தை மறைப்பதற்குக்கூட இக்கொடி பயன்படுத்தப்படுவதையும் கண்டு மிகவும் துக்கமடைகிறேன். வகுப்பு ஒற்றுமை, பலாத்காரமற்ற உழைப்பு இவ்விரண்டின் மூலம் பிரதிபலிப்பதாகிய அஹிம்சைக்குப் பிரதிநிதியாகவே இந்தக் கொடி தயாரிக்கப்பட்டது. பரம ஏழைகளும், செல்வவந்தர்களும் செய்யக்கூடியதான, அதே சமயத்தில் தேசியச்

செல்வ வளர்ச்சிக்கும் உதவுவதான பலாத்காரமற்ற தொழிலின் சின்னம் (கைராட்டினம்) அக்கொடியின் அம்சமாக இருக்கிறது.

பல இடங்களில் காணும் கொடி வெறும் மூன்று-வர்ணத் துணி யாகவே இருக்கிறது. சில சமயங்களில் அந்தத் துணி கதராகக்கூட இருப்ப தில்லை. வகுப்பு ஒற்றுமைக்கும், ஏழை பணக்காரரிடையே சம உணர்ச்சி ஏற்படுவதற்கும் கருவியான கைராட்டை அதில் இருப்பதில்லை. கைராட்டை இப்போது பல ஆயிரக் கணக்கான குடிசைகளில் சுழலத்தான் செய்கிறதென்றாலும் நாம் எதிர்பார்க்கும் லட்சியத்துடன் ஒப்பிட்டால், இப்போது நடந்திருப்பது மிகவும் சொற்பமே.

## அஹிம்சையும் அடக்கமும்

தவிரவும் தேசீயக் கொடியானது உண்மையில் அஹிம்சையின் சின்ன மாக விளங்கவேண்டுமாயின் அடக்கமும் பணிவும் அதன் அம்சமாக மதிக் கப்படவேண்டும். என் இஷ்டப்படி நடப்பதாயின், காங்கிரஸ் கூட்டங் களைத் தவிர வேறெவ்விடத்திலும், ஒருவன் ஆக்ஷேபித்தாலும் நான் அந்தக் கொடியை பறக்கவிட விரும்பமாட்டேன்.

காங்கிரஸ் கூட்டமல்லாத கூட்டத்தில் ஒரே ஒருவர் எதிர்த்தாலும், அவருடைய எதிர்ப்புக்காக விட்டுக் கொடுப்பதன் மூலம் தேசீயக்கொடியின் கண்ணியத்துக்குக் குறைவு ஒன்றும்ஏற்பட்டு விடாது. நாம் எந்த அதிக் கத்தை ஒழிக்க விரும்புகிறேமோ அதன் பலாத்காரத்துக்குப் பயந்து கொடியை இறக்கினேமென்றல்தான் கொடியின் கௌரவம் குறையும். வகுப்பு ஒற்றுமையிலும், கைராட்டினத்திலும் இவற்றின் அடிப்படை தத்துவங்களிலும் நமக்கு நம்பிக்கை இல்லாமல், பொதுக் கூட்டங்களிலும் காங்கிரஸ் காரியாலயங்களிலும் அதைப் பறக்க விடும்போதுதான், அதன் கௌரவம் இன்னும் குறைவுபடுகிறது.

இந்தக் கொடி ஒரு மதச் சின்னமல்ல ; எல்லா மதங்களையும் சமரசப் படுத்தும் சின்னம். கோயில்களிலும் மத சம்பந்தமான கூட்டங்களிலும் இதற்கு 'இடம்' கிடையாது.

தங்கக் கட்டியும், பாங்க் நோட்டுகளும் ஸஹாரா பாலைவனத்தில் எவ் வித மதிப்பும் அற்றவையே. இப்போதுள்ள மார்ச்சரியங்களினிடையே, சர்க்கார் கட்டிடங்களிலும் முனிசிபாலிட்டிகளிலும் நான் கொடியை உயர்த்தவிரும்புவதாயின், பெரும்பான்மையோரது ஆதரவு இருந்தால்கூட போதாது ; எல்லோரும் ஏகமனதாக ஆதரித்தால்தான், நான் சர்க்கார் கட்டிடங்களிலும் முனிசிபாலிட்டிகளிலும் இக் கொடியைப் பறக்கவிட விரும்புவேன். விஷமத்துக்காகவேனும், ஒருவர் எதிராக வோட்டுச் செய் தாலும் போதும். அந்த வோட்டை நான் மதித்தே நடப்பேன். அப் போதுதான் அந்தக் கொடி அஹிம்சைக்கும் பொறுமைக்கும் சின்னமாகும்.

## பெண்களின் அஹிம்சைத்தன்மை

அஹிம்சையை அதன் முழுச் சிறப்புடன் வெளிப்படுத்தும் தொண்டை பெண்கள் மிக நன்ருக நிறைவேற்ற முடியும் என்று நான் நம்புகிறேன். அவர்களது ஹிருதயத்தைத் தூண்டிவிட ஒரு ஆண்மகன் எதற்கு? நான் ஒரு ஆண்மகன் என்ற ஹோதாவிலல்லாது, பெருவாரியான மக்கள் அஹிம்சையைக் கைக்கொள்ளும் ஒரு தத்துவத்தைப் பிரசாரஞ்செய்பவன் என்ற ஹோதாவில் எனக்கு எழுதுவதாயிருக்கலாம். அப்படியாளுலும், தற்சமயம் பெண்களிடையே அஹிம்சைப் பிரசாரம் செய்வதற்காக பெரு முயற்சியெடுத்துக் கொள்ளும்படி என் மனதில் பெரிய தூண்டுதல் ஏற்படவில்லே. விருப்பமோ, ஆவலோ இல்லே யென்று அர்த்தமில்லே.

எனக்கு இப்போது தோன்றுவது யாதெனில், காங்கிரஸிலுள்ள ஆண்கள் அஹிம்சையில் நம்பிக்கை வைத்து அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட வேலேத் திட்டத்தில் சிரத்தையுடன் ஈடுபடுவார்களாளுல், பெண்களும் அஹிம்சை வழியில் தானே திரும்பிவிடுவார்கள்.

பெண்களிடையே யாராவது ஒருவர் தோன்றி, வெளிவந்து இத்துறையில் நான் நம்புவதைவிட அதிகமாக சாதித்துவிடுவதாகவுமிருக்கலாம். ஏனென்ருல், அஹிம்சைப்பாதையில் ஆண்களேவிட பெண்கள் அதிக துணிவுடன் ஆராய்ந்து வெற்றிபெற லாயக்குள்ளவர்கள். தன்னலத் தியாகத்துக்கான தைரியத்தில் பெண்கள் ஆண்களேவிட எப்போதும் பெரியவர்கள்; மிருக பலத்தில் ஆண்கள் பெரியவர்களாக இருப்பதுபோல."

---

## அஹிம்ஸா ஆயுதத்தின் அரிய சக்தி

அஹிம்சை பயந்தாங்கொள்ளிகளின் ஆயுதமல்ல. உலகத்திலுள்ள மிகப் பெரிய சாம்ராஜ்யங்கள் அனைத்தையும் ஒரே சமயத்தில் அன்பிளுல் ஜெயிக்க முடியும். இந்த மாகாணத்திலுள்ள ஒரு லக்ஷம் செஞ்சட்டையினரில், ஒரு சிலர் அஹிம்ஸையின் உண்மை தத்துவத்தைக் கிரஹித்துக் கொண்டால், சீக்கிரத்தில் சுயராஜ்யத்தை அடையலாம். ஒரு குதாய் கித்மத்கார் மிருகத்தனமான பலாத்காரத்திற்குத் தலே வணங்கக் கூடாது; ஆளுல், விரோதிகளே அன்பிளுல் ஜெயிக்கவேண்டும். சிலர் கொள்கைக்காக சாத்வீக முறைப்படி நடந்துகொள்கிருர்கள். இதளுல், சுதந்திரத்தைச் சீக்கிரத்தில் பெற்றுவிட முடியாது.

---

# மனிதர்கள் மிருகங்களானல்...

செக்கோஸ்லவேகியாவிலுள்ள ஒரு நண்பருக்கு டாக்டர் ரவீந்திரநாத் தாகூர் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதியிருக்கிருர்.

"உங்கள் நாட்டு ஜனங்களின் கஷ்டம் எனக்கு மிகுந்த மனோவேதனை அளிக்கிறது. நான் உங்கள் நாட்டுக்காரனுய் இருந்தால், எவ்வளவு துக்கப் படுவேனே அவ்வளவு துக்கப்படுகிறேன். ஏனெனில், உங்களுக்கு ஏற்பட்டிருப்பது வெறும் உள்ளூர் துரதிர்ஷ்டமல்ல.

மனிதவர்க்கத்தின் சில கொள்கைகளுக்காக, மேல் நாட்டினர் மூன்று நூற்றுண்டுகள் சர்வபரித்தியாகம் செய்திருக்கின்றனர். அந்தக் கொள்கைகளுக்கு இன்று சுத்த பயந்தாங்கொள்ளிகள் கார்டியன்களாயிருக்கிருர்கள். தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அந்தக் கொள்கைகளை பேரம் செய்கிருர்கள். முரடர்கள் கூட ஒருவரையொருவர் ஆதரிக்கும்போது, ஜன நாயகங்கள் தம் இனத்தவரையே காட்டிக் கொடுப்பதைப் பார்க்கும்போது, நம்பிக்கைக்கே இடமில்லாமல் போகிறது.

தற்கால நாகரிகத்திற்கு மதிப்பளிக்கும் கொள்கைகளெல்லாம் இப்படி ஒன்றன்பின் ஒன்ருகக் கைவிடப்பட்டு, காட்டிக் கொடுக்கப்படுவதைப் பார்க்கும்போது மனக்கஷ்டம் தாங்கமுடியவில்லை. ஆனல், நாம் என்ன செய்யமுடியும்? அதைத் தடுக்க நமக்குச் சக்தியில்லை.

எங்கள் நாடும் இந்தத் தவறுகளுக்குப் பலியான நாடுதான். இந்த வெறியர்களின் போக்கைத் தடுக்க என் வார்த்தைகளுக்குச் சக்தி இல்லை. இதுவரையில் மனிதவர்க்கத்தின் ரக்ஷகர்கள் என்று பாசாங்கு செய்து கொண்டிருந்தவர்களின் ஓட்டத்தை நிறுத்துவதற்கும் எனக்குச் சக்தியில்லை. இன்னும் அடியோடு கேவலமாய்ப் போய்விடாதவர்களுக்கு ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மனிதர்கள் மிருகங்களாய் மாறும்போது, இப்போதோ, இன்னும் கொஞ்சம் பொறுத்தோ, எப்போதாவது ஒருவரையொருவர் அடித்துத் தின்ன ஆரம்பித்துவிடுவார்கள். உங்கள் நாடு சம்பந்தப்பட்டவரையில் இருப்பதை வைத்துக்கொண்டு முன்பிருந்ததைவிட அதிக பலம் பெறுவீர்களென்று நம்புகிறேன்."

---

# வீண் புரளி

## பஸ்லுல் ஹக்கிற்கு ராஜாஜியின் சாட்டை

காங்கிரஸ் சர்க்கார் நடக்கும் மாகாணங்களில் முஸ்லீம்களுக்குப் பல குறைகள் இருப்பதாக சமீபத்தில், வங்க பிரதம மந்திரி ஸ்ரீ. ஹக் கூறியது

தினசரி பத்திரிகைகளில் படித்திருக்கலாம். இது சம்பந்தமாகச் சென்னை பிரதமமந்திரி, ஸ்ரீ. ஸி. ஆர்., ஸ்ரீ. சரத்சந்திர போஸிற்கு எழுதிய கடித மொன்று பத்திரிகைகளுக்குப் பிரசுரத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :—

'அன்புள்ள சரத்பாபு!

வங்க மாகாணக் காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி உங்களுக்கு அனுப்பிய கடிதத்தின் நகலை அக்டோபர் 26-ந் தேதியன்று நீங்கள் எனக்கு அனுப்பியதும், அத்துடன் உங்கள் கடிதமும் கிடைக்கப்பெற்றேன். அவை விஷயமாக நான் கூறுவது இதுதான் :—

காங்கிரஸ் மந்திரி சபைகளின் நற்பெயரைக் கெடுக்கவும், ஜனங்கள் மனத்தில் துவேஷம் உண்டாகும்படிச் செய்யவும், ஏதோ கூறப்பட்டதாகச் சொல்லப்படும் பிரசங்கத்தில் உண்மை எதுவும் இல்லை.

சென்னை மாகாணத்தில், (1) எந்த காரியத்திற்கும் பசுவைக்கொல்லும் விஷயம் தடுக்கப்படவில்லை (2) எந்த மசூதியும் அழிக்கப்படவுமில்லை, அசுத்தப்படுத்தப்படவு மில்லை. (3) தங்கள் விஷயமாகக் குற்றம் இழைக்கப் பட்டதாக எந்த முஸ்லீம் மாதர்களும் புகார் கூறவில்லை. (4) எந்த முஸ்லீம் மாணவரும் சரஸ்வதி தேவியை நமஸ்கரிக்க வேண்டுமென்றோ அல்லது அவர்கள் விரும்பாத வகையில் யாரையாவது வணங்க வேண்டு மென்றோ கேட்கப்படவில்லை. இவைகளை யாரும் மறுக்க முடியாது. பட்டவர்த்தனமாக எல்லா புகார்களுக்கும் நான் பதில் கூறிவிட்டேன்.

இப்படிக்கு,
அன்புள்ள
ஸி. ராஜகோபாலாசாரி.

---

## தமிழ்நாட்டில் காங்கிரஸ் கமிட்டிகள் தேர்தல்

காங்கிரஸ் கமிட்டிகள் தேர்தல் நடக்கவேண்டியது பற்றிய திட்டம் வருமாறு:—காங்கிரஸ் மகாசபை பிரதிநிதிகள் தேர்தல் ஜனவரி மாதம் 8-ந் தேதி நடக்கவேண்டும். பிரதம நகர, தாலூகா கமிட்டிகள் நிர்வாக மெம்பர்கள் தேர்தல் ஜனவரி 1-ந் தேதி முதல் 15-ந் தேதி வரை நடக்க வேண்டும்.

பிரதம கமிட்டிகள் ஜில்லா கமிட்டிகள் நிர்வாக அதிகாரிகள் தேர்தல் ஜனவரி 16-ந் தேதி முதல் 20-ந் தேதி வரையில் நடக்க வேண்டும். காங்கிரஸ் மகாசபை அக்கிராசனர் அ. இ. கா. க. மெம்பர்கள் தேர்தல் ஜனவரி மாதம் 29-ந் தேதி நடக்கவேண்டும்.

# மந்திரி டாக்டர் ராஜன் திக்விஜயம்

## மந்திரிசபை கொள்கை விளக்கம்

நவம்பர் 9-ந் தேதியன்று கனம் மந்திரி டாக்டர் ராஜன் உத்தமபாளையத்துக்கு விஜயம் செய்தார். அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட உபசாரப் பத்திரங்களுக்குப் பதில் அளிக்கையில் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு :—

### உபசாரப் பத்திரங்கள் ஏன் ?

சர்க்காருக்கு ஜனங்களிடமிருந்து பணம் வருகிறது. அந்தப் பணந் தான் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுகிறது, ஜனங்கள் லக்ஷக் கணக்காகப் பணம் கொடுத்தால், அதை அவர்களுக்காகச் செலவு செய்ய ஆக்ஷேபனை ஒன்றுமில்லை. அவர்களுடைய உபசாரப் பத்திரங்களை மாற்றினால், லக்ஷக்கணக்கான பணம் கிடைப்பதாக இருந்தாலாவது பத்திரங்களை ஏற்றுக்கொள்ளத் தடையில்லை. ஆனால், 'அனாவசியமாக இப் பத்திரத்திற்காக பணம் செலவழித்ததைப் பற்றித்தான் வருந்துகிறேன். நீங்கள் கையால் எழுதிக் கொடுத்திருந்தால் கூட போதும்.

### படிப்பைவிடத் தேகாரோக்கியம் அவசியம்

பள்ளிக்கூட கட்டிடத்திற்குத் தம்மை அவர்கள் வரும்படி அழைத்ததற்குப் பதிலளிக்கையில், அந்த இலாகா தன்னைச் சேர்ந்ததில்லை எனக் கூறி, "பள்ளிக் கூடம் கட்டுவதற்காக 45 ஏக்கர்கள் இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதில் நிழல் தரக்கூடிய மரங்களை உற்பத்தி செய்யும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன். முக்கியமாக புத்தகங்கள், மற்றும் சாஸ்திர ஆராய்ச்சி சம்பந்தமான கருவிகளை அமைப்பதற்கு மட்டும் கட்டிடத்தை கட்டிக்கொள்ளுங்கள். மரத்தினடியில் காலையில் 3 மணி நேரமும் மாலையில் 2 மணி நேரமும் பாடம் கற்பித்துக் கொடுக்கலாம். நல்ல காற்றுள்ளதாயும் சூரிய வெளிச்சம் படும் பழக்கமுள்ள இடத்திலும் இளம் பையன்கள் கற்பிக்கப்பட்டுவந்தால், அவர்கள் மிகவும் புத்திசாலிகளாகவும் தங்களுடைய படிப்பை உபயோகமாகவும் செய்துகொள்வார்கள்" என்று கூறினர்.

### மந்திரிகள் சாதிக்கக்கூடியவை என்ன ?

'மந்திரிகளுக்கு அதிக பணம் வேண்டுமென்றால் வரியை அதிகப்படுத்த வேண்டும். நமக்கோ வியாபாரத்தாலோ அல்லது மற்றொரு தேசத்தைக் கொள்ளையடித்தோ பணம் கொண்டு வரமுடியாது. நமக்குச் சைனியம் ஒன்றும் கிடையாது. நமக்குக் கிடைக்கும் வருவாயைக் கொண்டு செலவழிக்கத்தான் அதிகாரம் இருக்கிறது. நம் தேசத்தில் ஒருவரும் நன்கொடை கொடுக்கச் சக்தியில்லாமல் இருக்கும்பொழுது என்ன செய்ய

முடியும்! ஏழைகளுக்கு உதவி செய்யத் தயாராக ஒரு பெரிய மனிதரும் இல்லை. கொஞ்ச பணம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் பணக்காரர்களாகக் கருதப்படுகிறார்கள். இதற்குக் காரணம் நம்முடைய தரித்திர நிலைமை. நீங்கள் தேசத்தின் பொறுப்பை அறிந்திருந்தால், மந்திரிகளுடைய நிலைமையை அறிந்து கேட்க வேண்டும். ஏழை மந்திரிகளையும், ஏழை வருமானத்தையும் வைத்துக்கொண்டு முடியாத காரியத்தை மந்திர வித்தை போல் செய்யச் சொன்னால் எப்படிச் செய்ய இயலும்?

தற்போது வருவாய்க்கு மேல் செலவாகிறதென்றும், மதுவிலக்கினாலும் விவசாய நிவாரணச் சட்டத்தாலும் வருமானம் குறைந்திருக்கிறதென்றும் கடன் நிவாரணச் சட்டத்தால் ஸ்டாம்பு விற்பனைகள் குறைந்து அதனால் வருமானம் குறைந்து விட்டதெனவும் அக்கிரமமாகச் சம்பாதித்த பணம் கவர்ன்மெண்டிற்குத் தொலைந்துவிட்டதென்பதை அவர்கள் அறியவேண்டுமென்றும், நம்முடைய தேசம் புனருத்தாரணம் செய்யப்பட்டாலொழிய நம்முடைய தேசத்திற்கு க்ஷேமமில்லையென்றார்.

## சுத்தமும் ஒற்றுமையும் வேண்டும்.

பணக்கார அரசாங்கம் வேண்டுமென்றால், ஜனங்களும் கோடீஸ்வரர்களாகவேண்டும். ஏழை சர்க்காருக்கு ஏழை பள்ளிக்கூடம்தான் இருக்க வேண்டும், பள்ளிக்கூடகட்டிடத்திலிருந்து படிப்பு வரவில்லை. ஆஸ்பத்திரி கட்டிடங்களினால் வியாதிகள் போவது மில்லை. பழக்க வழக்கங்களை மறந்ததால் வியாதிகள் வருகின்றன. எனவே எவ்வளவு ஆஸ்பத்திரிகள் கட்டினாலும் போதாது. சுத்தமாகவும் சமூக ஒற்றுமையுடனும் இருத்தல் அவசியம்.

## உண்மை சத்தியாக்கிரஹி யார்?

சின்னமனூரில் ஒரு வாலிபன் சத்தியாக்ரஹிகளைக் கைது செய்யக் கூடாதென்று எழுதிக் கொடுத்த கடிதத்திற்கு, மந்திரி டாக்டர் ராஜன் அளித்த பதிலின் சாரம் வருமாறு:—

"உண்மைசத்தியாக்ரஹி தன் உயிரைக் கொடுத்தாகிலும் தான்நினைத்த காரியத்தைச் சத்தியத்தைப் பின்பற்றி நிறைவேற்றுவான். தன்னைக் கைது செய்யவேண்டாமென்று சொல்லமாட்டான். காங்கிரஸ் சத்தியாகிரஹம் செய்யும்பொழுது தங்களைக் கைது செய்ய வேண்டுமென்று போலீஸைக் கேட்டது. சத்யாக்ரஹிமீது சட்டம் உபயோகப்படுத்த வேண்டாமென்று சொல்லவில்லை. உண்மையான சத்யாக்ரஹி போலீஸ் அடியைப் பொருட்படுத்த மாட்டான். இவ்விஷயத்தில் திருப்பூர் குமாரசாமியை ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும்; அம்மாதிரியானவர்களால் உலகம் உஜ்ஜீவிக்கும். சத்திய நெறியை வரம்புகடக்காமல் எவன் ஒருவன் தேசத்திற்காக உழைக்

இன்றுனே அவன் கைது, தண்டனை முதலியவற்றைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்ளுவான். அம்மாதிரி செய்ததால்தான் தற்பொழுது காங்கிரஸ் அரசாட்சி ஏற்பட்டிருக்கிறது; ஆகையால்தான் ஆயிரக்கணக்கான வோட்டுகள் கிடைத்தன. அன்பின்மூலம் யாரையும் கட்டுப்படுத்திவிடலாம்'' என்றார்.

### காங்கிரஸ் மந்திரி சபையின் சிறந்த கொள்கை

“காந்திஜியினுடைய தத்துவத்தால்தான் இன்று நமக்கு இவ்வளவாவது கிடைத்திருக்கின்றது. புரட்சி சம்பந்தமான கக்ஷிகளுக்குக் காந்திஜியின் தத்துவத்தைப் பின்பற்றும் தொண்டர்கள் இடங்கொடுக்கக்கூடாது. ஒவ்வொருவரும் தங்களுடைய உயிரைக் கொடுத்தாவது காந்திஜியின் தத்துவத்தைக் காப்பாற்ற வேண்டும். தர்மத்தைக் கொலைசெய்வதக்குக் காங்கிரஸ் மந்திரிசபை, அழிந்து போயினும் இடம் கொடுக்காது. மனிதனை மனிதன் கொலைசெய்யும் ஜனநாயகம் நமக்கு வேண்டவே வேண்டாம், இந்தத் தத்துவத்தை நிலைநாட்டுவதுதான் காங்கிரஸ்மந்திரிசபையின் கொள்கை'' என்றார்.

---

## ஜனங்களைக் கொல்வது நாகரிகமா?

“தெய்வத்தின் பெயராலும், நாகரிகத்தின் பெயராலும் மனிதனை மனிதன் கொல்லும்படியான இயக்கம் உலகத்தில் நடந்து கொண்டு வருகிறதென்றும் ஸ்பெயின், சைனு, அரேபியா முதலிய நாடுகளில் நடக்கும் அட்டூழியங்களைப் பற்றியும் எடுத்துக் கூறிவிட்டு, “உலகத்தில் சண்டை கூடாதென்று நினைக்கும் அமெரிக்காகூட ஆகாய விமானப் படைக்காக 30 கோடி ரூபாய் செலவழிப்பதென்று முடிவு செய்திருக்கிறது. இவ்விதமான ஆகாயப்படைகள் ஏழைகளுக்கு உதவி செய்யும்படி ஹேதுவாக இருந்தால் நாகரிகத்திற்கு அழகாக இருக்கும். ஆனல், இப்பொழுது மேல்நாடுகள் எந்த தேசத்தை விழுங்கி விடலாமென்று நினைக்கின்றன. அதற்காக இவைகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. அக்கிரமம் செய்யும் சமூகம் அந்தச் சமூகத்தாலேயே அழிக்கப்படும். இந்தியாவைக் கொள்ளையடித்த மேனுட்டார்கள், இங்கிருந்து எடுத்துப்போன பணத்தை இங்கு கஷ்டப்படும் ஏழைகளுக்கு உபயோகப்படுத்தாமல், விஷப்புகை குண்டுகளுக்காக உபயோகப்படுத்துகின்றனர். மேனுட்டாருடைய நாசம் அந்தக் குண்டுகளால்தான். இப்படிச் செய்யும் இக்காலத்தில் ஜனங்களைக்கொல்லுவதில் பிரயோஜனமில்லை யென்றும், தேசங்களையும் ஜனங்களையும் நாகரிகபடுத்த ஓர் புனிதமான சிறந்த கொள்கை இருக்கிறதென்றும் நிராயுதபாணியான மகாத்மா காந்தி, உலகத்திற்கே இன்றியமையாத ஓர் தத்துவத்தைக் காண்பித்து விட்டார்,''

## ஆண் நர்ஸுகள் அவசியம்

### மிஸ். டி. ஹார்ட்லியின் விளக்கம்

பயிற்சி பெற்ற நர்ஸுகள் சங்க (இந்தியா) காரியதரிசியும், "இந்திய நர்ஸிங்" பத்திரிகையின் (குன்னூர்) ஆசிரியையுமான மிஸ். டி. ஹார்ட்லி, பத்திரிகைகளுக்கு எழுதியிருக்கும் கடிதமொன்றில், ஆஸ்பத்திரிகளில் ஆண் நர்ஸுகளை நியமிப்பதால், வேலை எந்த விதத்திலும் பாதகம் அடையாதென்பதை வற்புறுத்தியிருக்கிறார்:—

"ஆண் நோயாளிகள் இருக்கும் வார்டுகளில் ஆண் நர்ஸுகளைத் தவிர, பெண்களை நியமிப்பதில்லையென்றால், அது தவறான செய்கை என்று எங்கள் சங்கம் கருதுகிறது.

ஆண் நர்ஸுகளையும் நியமிக்க வேண்டுமென்று, நாங்கள் வெகு காலமாகச் சொல்லி வந்திருக்கிறோம். ஸ்திரீ ரோக இலாகாவில் முத்திரக் கோளாறு சப்பந்தமான வியாதியஸ்தர்களுக்கு, ஆண் நர்ஸுகளின் தொண்டு, மிக அவசியமானது. மேலும், க்ஷயரோக ஆஸ்பத்திரிகளிலும், பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளிலும், சில சுகாதார இலாக்காக்களிலும், ஆண் நர்ஸுகள் ரொம்ப அவசியம்.

ஆண் நர்ஸுகளுடைய வேலைகளும் பெண் நர்ஸுகளுடைய வேலைகளும் ஒன்றுக்கொன்று உதவியாயிருக்கக் கூடியது. சம அந்தஸ்தில் இருவரும் சேர்ந்து வேலை செய்யும்போது நல்ல பலன் கிடைக்கிறது.

உலகத்தில் இதர பாகங்களில் ஆண் நர்ஸுகளை நான் பார்த்திருக்கிறேன். இந்தியாவில் ஏற்கனவே பயிற்சி பெற்றுள்ள சில ஆண் நர்ஸுகள் அற்புதமாக வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு அந்த வேலையில், ஒரு இயற்கையான ஆர்வமும், உயர்ந்த லக்ஷியங்களும் இருக்கின்றன.

விசேஷ ஆண்கள் வார்டிலும், க்ஷயரோக ஆஸ்பத்திரி, பைத்தியக்கார ஆஸ்பத்திரி போன்ற இடங்களிலும் ஆண் நர்ஸுகள் இருப்பது பொதுஜனங்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாயிருப்பதோடு, பெண் நர்சுகளுக்கும், சுகாதார விஸிட்டர்களுக்கும் ஒரு பாதுகாப்பாயிருக்கும்."

## சமையல் பாத்திரங்கள்

### எதை உபயோகிக்கலாம்

வீடுகளில் சமையல் பாத்திரங்களை எப்படி உபயோகிக்க வேண்டுமென்பது பற்றிச் சென்னை சர்க்கார் ஒரு அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

மற்றெல்லாவற்றையும் விட மண் பாத்திரங்கள் மிகவும் சிரேஷ்டமானவை. அத்துடன் அவை மலிவாயுமிருக்கின்றன. அவைகளை உபயோகித்த பிறகு, வெய்யிலில் காயவைத்துவிட வேண்டும். சாத்தியமான வரையில், மிகவும் குறைவாகவே பித்தளை உபயோகிக்க வேண்டும். இவைகள் சுலபமாக அரிக்கப்பட்டுவிடும். இவைகளை அடுப்பில் வைத்துச் சமைப்பதால், உலோகமே உருகி உணவு பதார்த்தங்களில் கலந்து விடக்கூடும். இது உடம்புக்குக் கெடுதல்.

அடுப்பில் வைப்பதற்குமுன் மண்ணைப் போட்டுத் தேய்த்து, பிறகு புளியையும், சாம்பலையும் மேலே பூசுவது, சுகாதாரத்திற்கு நல்லது. இந்த முறையைப் பின்பற்றவேண்டும். ஈயம் கலந்த பாத்திரங்களில்தான் விஷமதிகம். இவைகளை உபயோகிக்கவே கூடாது. தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி போன்ற தென் ஜில்லாக்களில், ஸ்திரீகள் போட்டி போட்டுக் கொண்டு, ஈயச் செம்புகள் வாங்குகிறார்கள். இதனுடைய சத்து கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ந்து, ரத்த சோகை, மலக்கட்டு, வயிற்றுவலி முதலியவைகளை உண்டாக்கும்.

பித்தளை, செம்பு, தகரப் பாத்திரங்களில் சாமான் வைக்கலாம். பித்தளை, செம்பு பாத்திரங்களில் சமையல் செய்வது நல்லதல்ல. ஜலம், பால், காய்ச்சுவதற்கு அலுமினியம் பாத்திரங்களை உபயோகிக்கலாம். சுத்தமாக வைத்துக்கொண்டிருந்தால், கற்சட்டிகளும் நல்லது.

## பிரயாணச் சீட்டு மறுக்கப்படுகிறது

பாஞ்சால எம். எல். ஏ. யான மாஸ்டர் காபூல்சிங்குக்கு, கானடாவுக்குச் செல்ல பிரயாண அநுமதிச் சீட்டு மறுக்கப் படுகிறது. காலமான தமது சகோதரரின் குடும்பத்தை அழைத்து வருவதற்காக அவர் அங்கு செல்ல விரும்பினர்.

# ஸினிமா விமர்சனம்

# ஸ்வர்ணலதா

ஸினிமாப் படங்கள் வெற்றிகரமாக அமைவதற்கு முக்கிய மான அம்சங்கள் கதை, டைரெக்ஷன் நுணுக்கங்கள், நடிப்பு, சம் பாஷணை, பாட்டு, ஒலி, ஒளி, காக்ஷி ஜோடனை முதலிய பலவாகும். மேற்குறித்தவைகளில் ஒன்றிரண்டு அம்சமாவது மிகத் திறமை யுடன் அமைந்து விடுமாயின், அந்த படத்திற்கு ஓரளவு வெற்றியே கொடுத்து வருகிறது. முற்றிலும் திறமையுடன் அமையுமாயின், வெற்றிற்குக் கூறவே வேண்டாம். ஆனல், நம் தமிழ் டாக்கிகள் அவ்வளவு தூரம் அந்தப் பாக்கிய எல்லையை இன்னும் எட்டவில்லை. ஒரு காலத்தில் எட்டியே தீரும் என்ற நம்பிக்கை அலைகளும் மனக் கடலைவிட்டு ஓயவில்லை. ஸ்வர்ணலதாவைப் பொருந்திய மட்டில், நடிப்பின் உயர்வினல் படம் நன்ருக இருக்கிறதென்று சொல்வதை யாரும் மறுக்க முடியாது. கதையோ பார்த்தும், கேட்டும், படித்தும், புளித்துப்போன கதைதான். ஆனல், அதில் ஸ்ரீமான் ஒய். வி. ராவ், தம் நடிப்பையே ஜீவநாடியாக அமைத்திருக்கிருர். ஸ்ரீமான் ராவின் நடிப்பின் திறமையை ஏற்கெனவே கண்டு களித் துள்ள நமக்கு அவர் இப் படத்தில் தம் நடிப்பின் திறனை முற்றிலும் காட்டி, வெகு எளிதில் மக்களின் மனத்தைக் கவர்ந்துவிட்டார் என்று கூறத் தடையில்லை.

அவருடைய நடிப்பு பல இடங்களில் தத்ரூபமாகவே இருப்ப தால், பார்ப்போருக்குப் பிரமிப்பைக் கொடுக்கிறது. ஸ்ரீமான் எல். நாராயணராவுக்கு, ("சிந்தாமணி" ஆள்வார் செட்டியார்) இக் கதையில், இந்தர்மல் சேட்ஜியாக புனர் ஜென்மங் கொடுத்திருப் பினும், தேவடியாள் வீடு வருதல், ஸ்ரீமான் ராவ் தாத்தி யடித்தல் முதலிய காட்சிகள் மட்டும் பழயபடியே இருப்பது சுகப்படவில்லை. ஸ்ரீமான் சோமயாஜுலு ராகவனுகத் தோன்றி, தம் தர்மபத்தினி யினிடம் சம்பாஷிப்பதும், திட்டுவதும் வெகு பொருத்தமாயிருக் கிறது. ரங்கநாயகியின் நடிப்பு உணர்ச்சியுடன் அமைந்திருக்குமாயின், ஒருவாறு திருப்தி யளிக்கும். சில ஆபாச சீன்களுக்கு இதில் இடங் கொடுக்காமலிருந்திருந்தால், மிகவும் நன்ருக இருந்திருக்கும். மொத்தத்தில் இப்படத்தில் ஸ்ரீமான் ஒய். வி. ராவ், நடிப்பில் முதல் பரிசு அடித்துவிட்டார் என்ருல் மிகையாகாது.

# அனாதைப் பெண்

சென்னை, கிரௌன் டாக்கீஸில் நவம்பர் 25-ந் தேதி வெள்ளிக் கிழமையன்று காலையில் 9 மணிக்கு சென்னை நகர் மேயர் வெங்கட சாமி நாயுடு அவர்களின் தலைமையில், முதன்முதலாக இந் நகர பிர முகர்களுக்கும், பத்திரிகை நிருபர், ஸினிமா ரஸிகர்கள் முதலி யோருக்கும் "அனாதைப் பெண்"ணின் பிரத்தியேகக் காட்சி யொன்று நடைபெற்றது.

"அனாதைப் பெண்" படம் 1938-ம் வருடத்திய படங்களில் சிறந்ததெனச் சொல்லத் தடையில்லை. தமிழ்ப் படங்களில் சாதா ரணமாகக் காணப்படும் ஆபாஸங்கள் இதில் ஒரு சிறிதும் கிடை யாது. தமிழ்ப் படங்களும் உயர்ந்த முறையில் எடுக்க முடியும் என்பதை இப்படத்தைக் காணும் ஒவ்வொருவரும் கூறுது இரார்.

ஸ்ரீ. எம். கே. ராதா, தன் பாகத்தை மிகத் திறமையாக நடித் திருக்கிறார். ஸ்ரீமதி. டி. ஏ. சுந்தராம்பாள், அனாதைப் பெண்ணாக முதன் முதலாக ஸினிமாத் துறையில் தோன்றியபோதிலும் வெகு இயற்கையாக நடித்துள்ளார். ஸ்ரீ. பி. யூ. சின்னப்பா, ஸ்ரீ. எல். நாராயணராவ், ஸ்ரீமதி பி. ஆர். மங்களம், ஸ்ரீமதி கிருஷ்ணவேணி முதலியோர் தம் தம் பாகத்தைச் சமயத்துக்குத் தக்கபடி ஜனங்கள் நன்கு ரஸிக்குமாறு நடித்துள்ளனர். செட்டியாராக வரும் கொத்தமங்கலம் சுப்புவின் நடிப்பு ஒண்ணு நம்பர் என்று தயங் காமல் கூறலாம். தத்ரூபம் செட்டியாரைப் போலவே அவர் பேசி யும் நடித்துமிருப்பது குறிப்பிடத்தக்கது.

தாசில்தார் வீட்டின் ஜோடனை நன்றாக இருக்கிறது. எல்லா சீன் ஜோடிப்பும் அழகாகவே இருக்கின்றது. துரைராஜாவாக நடிக்கும் ராதா, ஹாக்கி ஸ்டிக்கை கையில் மாத்திரம் பிடித்துக் கொண்டிராமல், இங்கிலாந்தில் இரண்டொரு ஆட்டத்தில் ஹாக்கி ஆடியதாகக் காட்டியிருந்தால், "ஹாக்கி வீரர் இங்கிலாந்து பிரயாணம்," "ஹாக்கி வீரர் மணம்" என்று சிறப்பாக வெளி யிட்ட பத்திரிகைச் செய்திக்கு, சிறப்புத் தந்ததாக இருக்கும். தாசில்தார் வீட்டுக் குழந்தைகள், அனாதைப் பெண்ணைத் தங்கள்

தாயார் வெளியில் போ என்று சொல்லி வெளியேற்றுகையில், "நீ போகாதே! இங்கேயே இரு!" என்று குழந்தைகளின் இயற்கைப்படி அழுதுகொண்டே கூறுவதைப் பார்ப்போர், கண்களிலிருந்து தம்மை அறியாமலேயே கண்ணீர் விடாதிரார்.

ஜூபிடர் பிக்சர்ஸார், ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியுள்ள, "அனுதைப் பெண்" நாவலை ஏறக்குறைய தழுவியே படம் எடுத்துள்ளார்கள். அனுதைப் பெண் புத்தகத்திலுள்ளபடியே கூடுமானவரையில் முடிவையும் எடுத்திருந்தால் மிகவும் ரஸமாக இருந்திருக்கும். இது சென்னையில் வெற்றிகரமாக பல வாரங்கள் ஓடும் என்பது இதில் நடித்துள்ள சிறந்த நடிகர்களின் நடிப்பே நிரூபித்துக் காட்டும்.

இதிலும் சிற்சில குறைகள் இல்லாமலில்லை. கூடிய சீக்கிரம் குறைகள் இல்லாத படத்தைக் கண்டு களிக்கும் காலத்தை பகவான் அளிப்பாராக.

—ஜி. ஆர்.

## மதிப்புரை

# துர்க்கேசநந்தினி

[ஸ்ரீ. பங்கிம் சந்த்ர சட்டோபாத்தியாயர் எழுதியதன் மொழி பெயர்ப்பு. அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை ரூபா 1/4.]

ஓர் உண்மைச் சரித்திரத்தை நிழலாகக் கொண்டு இக்கதையை எழுதியிருக்கிறார். கதை வெகு ரஸமாயும், படிக்க இனிப்பாயும் இருக்கிறது. கதாநாயகனின் சோதனையும், அவனுடைய உறுதியான காதலின் வலிமையும் வெகு அழகாகச் சித்தரித்திருக்கிறார். இக் கதையில் அயேஷா என்கிற மாதரசியின் மாசற்ற குணத்தையும், காதலின் மேன்மையையும் ஆசிரியர் வெகு உயர்ந்த முறையில் எழுதி யிருப்பதானது குறிப்பிடத்தக்கது.

இந்த நாவலும், அல்லயன்ஸ் கம்பெனியாரின் இதர புத்தகங்களும் "ஜகன்மோகினி" ஆபீஸில் கிடைக்கும்.

# 7

பெரிய பட்டணமாகவிருந்தால் எதிர்வீட்டிலோ பக்கத்து வீட்டிலோ என்ன நடந்தாலும் ஒன்றும் தெரியாது. கிராமாந்திரமாக இருந்தால், ஒரு நல்லதோ கெட்டதோ எது நேர்ந்தாலும் கட்டுப்பாடாகக் கூட்டம் கூடி விடுவார்கள். மாதவனுக்கு ஆகாயமும் பூமியும் ஒன்ருகச் சுற்றுவதுபோல் தோன்றுகின்றது. அன்னையின் மறைவுக்குப் பின் தன் கதி என்னவாகும் என்று நினைப்பதற்குள் பெரிய பயங்கரமான மலையே அவன் தலைமீது விழுந்து இருத்துவதுபோல் தோன்றி, பயங்கரத்தை உண்டாக்கியது.

பகவானை அன்னைக்கு உயிர்ப்பிச்சை அளிக்கவேண்டுமென வேண்டிக் கதறினுன். தாயாரின் இரு கரங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, " அம்மா ! அம்மா ! என்னைப் பாரு ! கண்ணைத் திறந்துப் பாரேன். அம்மா ! அம்மா ! உன் மனத்தில் கவலை என்பதே கொள்ளாதே ! உனக்கு ஒரு குறைவும் இல்லை. கடவுள் உன் உயிர்ப் பிச்சையை எனக்கு அளிப்பார். கவலைப்படாதே அம்மா !" என்று பேசமாட்டாது பேசித் தாயாரின் முகத்தோடு முகம் பதித்துக்கொண்டான்.

பாலாம்பாள் என்றுமில்லாத தைரியத்துடன் கட கடவென்று ஒரு சோகச் சிரிப்பு சிரித்தாள். அச் சிரிப்பில் ஒரு தனித்த நம்பிக்கையும், கவலையற்றத் தன்மையும், ஏக்கமும் ஒருங்கே குடிகொண்டிருந்தன. " ஆமாம். உயிர்ப் பிச்சை ! உயிர்ப் பிச்சையா அளிக்கப் போகிருர் ? மாதவா ! உன் தாய் உனக்கு வைத்தபொருள்கள் ஒரு டஜனுக்கு மேல்பட்ட ஆத்மாக்கள் தான்; தெரிந்ததா !

நஞ்சானும் குஞ்சானுமாக விட்டுவிட்டுப் பாவி தொலைந்தாள். மூத்தமகன் இருந்தும் அவர்களைச் சரியாகக் கவனிக்கவில்லை. அதனல் அது இறந்துவிட்டது—அல்லது இது கெட்டுவிட்டது—அன்றி நோயாளியாகிவிட்டது—என்று ஊரார் ஒருபேச்சு உன்னைப் பற்றிப் பேசும்படி நடக்காதே ! கால் வயிறு கஞ்சியாவது வார்த்து

அவர்களைக் காப்பாற்று. கூலி வேலையாவது செய்து உன் கடமையை நிறைவேற்று. மாதவா! இனி என்னிடம் நீ நம்பிக்கை வைக்காதே! உன்னுடைய நம்பிக்கையை மாற்றிக் கொள். எந்த விதமான பாடாவது பட்டு, முதலில் உன் தங்கைகள் இருவருக்கும் கல்யாணத்தைச் செய்துவிடு.

ஏனெனில், நீயோ அறியாப் பாலகன்; வீட்டில் பெரிய திக்கு அற்றவன்; பக்குவகாலமடைந்துள்ள பெண்களைக் கட்டிக்காப்பது உன்னால் ஆகாத காரியம். அவர்களையோர் காப்பாளியினிடத்தில் சீக்கிரத்தில் ஒப்புவித்துவிடு. பெந்திப் பாட்டியை உனக்குத் துணையாக வைத்துக்கொள். உன் தமக்கையை அவள் புருஷனிடம் அனுப்பிவிடு. அவளை நீ இங்கு வைத்துக்கொண்டால், அவள் மூலம் நாலு பிராணிகளை நீ காக்கும் கஷ்டம் அமையும். ஆதலின், அந்தத் தொல்லைவேண்டாம். உன் தகப்பனார் மறு விவாகம் செய்து கொள்ளாதபடி பார்த்துக்கொள். அவர் கல்யாணப்பித்து பிடித்தவர் என்பதை நான் அறிவேன். ஐயோ! பேச முடியவில்லையே!....

மாதவா! மகா உத்தமனாகிய உன்னை நான் மகனாக அடைந்தும் உனக்கு ஓர் கல்யாணத்தைச் செய்து கண்குளிரப் பார்த்து உன் கூடவிருந்து உலகத்தவர்களைப்போல் சந்தோஷத்தை அடையாத கொடிய பாவியாகிவிட்டேன். என்னால் நீ கண்ட பலன் இதுதான். ஹா! மாதவா! மாதவா! என்னைப் பிடித்துக்கொள். என்னைப் பிடித்துக்கொள். ஹா! ........என்ன!........என்ன! என் இத்தனை பட படப்பு. ஹா........குழந்தைகளே! இனி உங்களுக்கு அண்ணன் தான் கதி; அவனுக்கு அடங்கி ஒடுங்கி பயபக்தியுடன் அவன் சொல்படி கேட்டு நடவுங்கள். அவனை விட்டால் வேறு திக்கில்லை. ஜாக்கிரதை" என்று எச்சரித்து முடிப்பதற்குள்ளேயே ஆயாசத்தினால் அயர்ந்துவிட்டாள்.

உம். இனியும் ஏன் வீணாகக் கூறுவானேன். அன்றிரவே பாலாம்பாள் நிச்சலனமான நித்திரையில் ஆழ்ந்துவிட்டாள். ஒரு விநாடிப் பொழுதில் மின்னல்போல அவ் வுத்தமியின் ஆவி பறந்து போய்விடவே அவ்விடம் கரிய மேகம் சூழ்ந்ததுபோல் இருண்டு விட்டது. தக்ஷணமே பேரிடி முழக்கம்போல் ஏக காலத்தில்

"அம்மா! அம்மா!" வென்று அலறும் சப்தம் அச் சிறிய ஊரையே சூழ்ந்து கொண்டு விட்டது.

சற்று புத்தி தெரிந்த குழந்தைகளும் பெரிய பசங்களும் "அண்ணா! அண்ணா! அம்மா போய்விட்டாளே! இனிமே நாங்கள் என்ன செய்வோம்; அண்ணா!" என்று கதறுகிறார்கள். இந்தக் கோரமையைக் காணக் காண மாதவனின் இதயம் துடி துடித்துக் கரைந்து போகிறது. அவர்களை எல்லாம் வாரி அணைத்துத் தேற்று கிறான். தாயாரின்மீது விழுந்து கதறுகிறான்.

புத்தி அறியாத சிறு குழந்தைகளுக்கு இந்தத் துக்ககரமான சம்பவத்தின் விபரீதம் என்ன தெரியும்? எப்போதும்போல் ஓடி ஆடி விளையாடுவதும் விளையாட்டில் வரும் குட்டிச் சண்டை போடுவதும் அதைத் தன் தாயாரிடம் கூற ஓடி வருவதும் 'எம்மா படுத்துண் டிருக்கே. என்னை அடிச்ச பய்யனை அடிக்க வாம்மா!' என்று கூப் பிடுவதும் பார்க்கப் பார்க்க மாதவனால் இந்தச் சங்கடத்தைத் தாங்கவே முடியவில்லை. இத்தனை பெரிய மலையைத் தான் எவ்விதம் தாங்க முடியும் என்று நினைக்கும்போது அப்படியே தன்னைத் தற் கொலை செய்து கொள்ளலாமா வென்ற எண்ணமும் உண்டாகியது.

இம்மாதிரியான சமயத்திலும் மாதவனின் பிதா கதறும் குழந்தைகளை ஆதரித்து அணைத்துத் தேற்றவோ பிணத்தின்மீது விழுந்து கதறவோ இல்லாது தூர உட்கார்ந்து புலம்பிக்கொண் டிருப்பதோடு, "ஐயோ! மகராஜி வந்த நாள் முதல் சாகும் நாள் வரையில் மெஷின்போல் குழந்தைகளைப் பெற்றுத் தள்ளி சோதனை போல் விட்டுச் சென்றுவிட்டாளே! போகும் மகராஜி எல்லாவற் றையும் கையோடு அழைத்துக் கதவைச் சாத்திக்கொண்டு போயி ருக்கக் கூடாதா? இந்த வேதனையை யார் அனுபவிப்பது" என்று வாய்விட்டும் சொல்லும்போது, மாதவனின் வயிறு எரிந்தது. 'இப்படிப்பட்ட தகப்பனை இந்த உலகில் பார்த்ததுண்டா?' என்று மனங் கலங்கினான்.

சாகிறவர்கள் செத்தாலும் உபசாரத்திற்கு வரும் மனிதர்கள் பேசும் கொடுமையும் வேடிக்கையும் ஒரு தனிப் போராட்ட மல்லவா! ஆனந்தமாய் பட்டின வாசத்தில் படித்துக்கொண்டு காலங்

தள்ளிய மாதவன் இவைகளை யெல்லாம் பார்த்ததில்லை யாதலால், அது ஒரு பெரிய ட்ராமாவைப்போல் அவனுக்குத் தோன்றியது.

உபசாரத்திற்கு வந்த ஒரு பாட்டியம்மாள் பிணத்தருகில் அடித்துக்கொண்டு, 'மல்லிகைப்பூ முடிச்சு என்னும்மாடீ நீ மகிழ்ந்திருக்கும் நாளையில் என்செல்லமடீ மாதவனையும் மக்களையும்விட்டுப் போகலாமோடீ, எவ! எவ!' என்று ஒப்பாரிவைத்து பாடி அழுதாள். அதே கிழவி மாதவனை நோக்கி, 'அப்பா! என்செல்லமே! உனக்குக் கல்யாணத்தைப் பண்ணிப் பார்க்காமலும் இந்தப் பொட்டை கட்டைகளை கட்டிக் கொடுக்காமலும் இப்படி போகலாமாடா?' என்று கூறிவிட்டு, மாதவனின் பிதாவிடம் ஓடினாள்.

"ஏண்டாப்பா! ஒன்னே அவ மோசம் பண்ணிப்புட்டாளே! ஒன்னே பாத்தா இன்னும் சின்னபிள்ளைமாதிரி இருக்கே! ஒம்முகத்திலே பால்வழியரது. நீ என்ன கிழமா கிட்டா? நோயாளியா! நொடியாளியா! கல்யாண மாப்பிள்ளைமாதிரி இருக்கே. ஒனக்கூன்னு ஆதரவா ஒரு வாய் தண்ணீர் வார்க்க ஒரு கனிகரப்பட்ட மனுஷி வாண்டாமா? அப்பா! அடேய்! கல்யாணத்தே பண்ணிக்கோடா! அவ நல்ல மகாராஜி; அவளண்டே விளக்கேத்தி வாங்கிக்கோ! மறந்துபூடப் போரே; உனக்கென்ன குறைச்சல்; நானு நீ என்று பெண்ணைக் கொடுப்பார்கள். பரதேசியா போகாதேடாப்பா" என்று ஹிதோபதேசம் செய்தாள்.

அதே சமயம் ஒரு கல்யாணத்தரகன் உபசாரத்துக்கு வந்தான். பாட்டி சொல்வதைக் கேட்டு, 'பாட்டீ! நன்னு சொல்லுங்கோ! இவருக்கா பொண்ணுக்குக் கொரச்சல். கணக்கத்த பெண்கள் கிடக்கிறது. போரபாவி ஒரு எழவும் இல்லாமே செத்திருக்கப் படாதோ! சாணியிலே புழுக்கரமாதிரி இத்தனை சனியனேவிட்டு செத்தா என்ன பண்றது. அதுக்காக அவர் கஷ்டப்பட முடியுமா?' என்று அந்த ப்ரோக்கரும் கிழவியும் கூறும்போது மாதவனுக்குக் கோபம் பீறிக்கொண்டு வந்துவிட்டது.

ஆத்திரப்பட்ட தொனியில் அவன் அழுதுக்கொண்டே "எந்த மகானுபாவாக்களும் எங்கள் குடும்பத்தைப்பற்றி விசாரப்பட வேண்டாம். உங்கள் நெஞ்சு துணிந்து எங்களுக்குச் சாவைக்

கோரவேண்டாம். மரம் வைத்த வள்ளல் தண்ணீர் வார்க்காது போகமாட்டான். அப்படி அவனே தண்ணீர் விடாமல் மரங்கள் பாழாகவேண்டுமென்று பிரியப்பட்டால், அதைப்பற்றி விதி விட்டவழி நடக்கட்டும் என்று தேறுகிறேம்; பிணங் கிடப்பதைக் கூட மறந்து கல்யாணப் பேச்சுப் பேசும் உங்கள் ஹிதோபதேசம் போரும்; போங்கள்" என்று கடிந்து கூறினன்.

உடனே பெருத்த குழப்பமும் கலவரமுமாய் முடிந்தது. பிறகு ஒருவழியாய் சவச்சடங்குகள் முடிந்தன. மாதவனின் அன்பு பொக்கிஷம் எரிந்துகொண்டிருக்கிறது. மாதவனின் வயிறும் எரி கிறது. புலம்பிப் புலம்பி கண்களும் தீப்பிடிக்காமலே தீப்பிடித்தது போல் எரிகிறது. கேட்பாரற்றக் கட்டைகள்போல் இரண்டு தூளியில் படுத்திருக்கும் இளங் குழந்தைகளைப் பார்க்கும்போது அவன் தேகமே பற்றி எரிகிறது. என்ன செய்வான் பாவம்!

தகப்பனரின் கையிலும் காலணு இல்லை. தன் கையிலும் ஒன்று மில்லை. ரயில் செலவுக்கே கடன் வாங்கிக் கொண்டு வந்திருக்கி ருன். எப்படி குடும்பம் நடப்பது? 'ஐயோ! இச் சங்கடமான நிலைமையில் நம் எஜமானரின் உதவியைக் கோருவதற்குக்கூட இல்லாத வீணை படாப் பழி யொன்றை அப் புண்யவான் ராம பிரஸாத் உண்டாக்கி இருக்கிருனே! ஒருவேளை அதை எஜமானர் வரைக்கும் எட்டவைத்து விபரீத கற்பனையே செய்திருப்பானே? அப்படி ஏதேனும் நடந்திருக்குமாயின், என்னை விஷமாகவன்றே அவர் மதிப்பார். நான் கேட்பதற்கும் வாயில்லாத நிலைமையிலிருக் கிறேனே! என்ன செய்வேன்?" என்று விசாரத்துடன் இடிந்து போய்விட்டான்.

வீட்டிலுள்ள சங்கடம் போதாதென்று சாவு விசாரிக்க வரும் கூட்டத்தின் கலபையோ சொல்ல முடியாது. எப்படி அவர் களுக்குச் சாப்பாடு போட்டு உபசரிப்பது என்ற கவலையொருபுறம் கொன்று தின்னுகிறது. இந் நிலைமையில் அவன் தகப்பனர் வீதித் திண்ணையில் உட்கார்ந்து வருவோர் போவோரிடம் எல்லாம் கல்யாணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்கையில், இன்னும் மாதவனைச் சித்திரவதை செய்கிறது.

மூத்த பெண் தகப்பனாரிடம் சென்று 'அரிசி இல்லையே, எப்படி சமையல் செய்வது?' என்று கேட்டதற்கு அவர் சிள்ளென்று சீறி விழுந்து, 'அரிசி இல்லை என்றால் மண்ணைத் தின்னுங்கள்' என்று சொல்லியதைக் கேட்டுக்கொண்டே கண்ணீருடன் மாதவன் எதிரில் வந்து மூக்கைச் சிந்தினாள். தகப்பனார் சொல்லியதையும் மாதவன் கேட்டுக்கொண்டுதான் இருந்தானாகையினால், அவன் என்ன பதில் சொல்வான் பாவம்! தந்தியைக் கண்டு ஓடிவந்த அவசர அதிர்ச்சியில் தான் எழுதியுள்ள சித்திரம் எதையும் அவன் கொண்டு வரவில்லை. அவைகளையாவது விற்றுப் பணமாக்கலாமே யென்று எண்ணினான். "ஏதோ கடன் வாங்கியாவது இன்றைய காரியத்தை முடித்துவிடு. நான் பகல் வண்டிக்கு ஊருக்குப்போய் விடியற்காலை வந்து விடுகிறேன். குழந்தைகளைப் பார்த்துக்கொள்" என்று கூறிவிட்டு, அன்றே மறுபடியும் பிரயாணமானான்.

## 8

மாதவன் கண்ணீரும் கம்பலையுமாய்த் துடித்துக் கொண்டே தாயார் இறந்த விசனம் ஒருபுறம்; தனக்கு இவ்விடத்தில் என்ன செய்தி கிடைக்குமோ என்கிற பயமும் கவலையும் மற்றொருபுறம் பாதித்தவாறு, மெல்ல அவ்வீட்டை யடைந்தான். நேரே தான் வசித்து வந்த அறைப்பக்கம் போனான். உடனே அவனைத் தூக்கி வாரிப் போட்டது; "நோ அட்மிஷன், விதௌட் பர்மிஷன்" என்ற ஆங்கில எழுத்துக்கள் பொறித்த பலகை தொங்கிக் கொண்டிருப்பதை அவன் பார்த்ததுதான் காரணம்.

தனக்கு ஏதோ பெருத்த அவமானம் நேர்ந்திருக்கிறது என்று அதைப் பார்க்கும்போதே தெரிந்துகொண்டான். இனி என்ன செய்வது என்று அக் கதவின் அருகிலேயே சில விநாடிகள்

தயங்கி நின்றான். உள்ளே யிருந்து பலமாகப் பேசுங்குரல் கேட்ட தால், மெல்ல தன்னைச் சமாதானம் செய்துகொண்டு, 'சார்! சார்!' என்று கூப்பிட்டான்.

உள்ளே யிருந்து 'யாரது?' என்று சிறிது அதிகார தோரணையி லேயே ஒரு குரல் வந்தது. மாதவன், 'சார்! தயவுசெய்து சற்று இப்படி வாருங்கள்' என்றான். ஒருவன், மிகுந்த அட்ட காஸமும் மைனர்களுக்குரிய அலங்கார தோரணையிலும் வெளியில் வந்து, 'வாட்டியூ வாண்ட்! ஹூ ஆர் யூ....?' என்று அப்போதே கப்பலிலிருந்து இறங்கிய ஆங்கிலேயனைப்போல் கேட்டான்.

மாதவன் தாழ்ந்த குரலில், "ஐயா! எனக்கு ஒன்றும் வேண் டாம். இவ்வறையில்தான் முன்பு நான் இருந்தேன். இங்கு இப் போது தாங்கள் இருப்பதால், என் சாமான்கள் எங்கே? உமக்கு இவ் வறையை யார் கொடுத்தார்கள்?" என்று கேட்கவே கூப்பிட் டேன்" என்றான்.

இதற்குள் அந்த ஷோக் வாலிபன், 'ஓ! இதெல்லாம் எனக்குத் தெரியாது. ராம் பிரஸாத் இவ்வறை காலியா யிருப்பதாய் மாதம் 10 ரூபாய்க்கு வாடகைக்கு என்னை இருக்கும்படிக் கொடுத்தார். நான் நேற்றுதான் இங்கு வந்தேன். நான் வரும்போது இது முற்றிலும் காலியா யிருந்தது. உங்கள் சாமான் விஷயம் எனக்குத் தெரியாது' என்று கூறிவிட்டு, உள்ளே போய் விட்டான்.

'ராம் பிரஸாத்தின் செய்கைதான் இந்தமாதிரியாகிவிட்டது' என்று மாதவனுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டதால், இனி யாரைக் கேட்பது; என்ன செய்வது? இன்னும் சொல்லவறியாத வேதனை மனத்தைப் பிளக்கிறது. தான் வரும் இந்தச் சாக்கிலாவது லதா வைக் கண்ணாரக் கண்டு களித்துத் தன் துன்பத்தைச் சற்று ஆற் றிக்கொள்ளலாம் என்று வந்ததற்கு முற்றிலும் ஏமாற்றமாகி விட்டதானது அவன் நெஞ்சைப்பற்றி வதைத்தது.

நேரே வீதிக்கு வந்தான். வீடு கூட்டும் கிழவி உள்ளே யிருந்து வந்தாள். அவளை நோக்கி, மாதவன் 'வீட்டில் யாருமில்லையா என்ன? எஜமான் இன்னும் ஊரிலிருந்து வரவில்லையா?' என்றான். கிழவி முனகிக்கொண்டே "இல்லீங்க. அம்மாளுக்கு ஒடம்பு சுகமில்லீங்க

ளாம். அதுக்காவ இன்னும் ரெண்டு மாசம் நாட்டுப் புறத்தி லேயே இருந்து மருந்து துண்ணணுமின்னு வைத்தியகாரு சொன் னுங்களாம். அவுங்க இன்னும் ரெண்டு மாசங் கயிச்சுத்தா வரு வாங்களாம். ஒங்க பொட்டி சாமான் அல்லாத்தையும் அதோ அந்தப் பக்கம் போட்டிக்கிது. நீங்க வந்து கேட்டா குடுக்கச் சொல்லி ராமய்யரு சொன்னுரு” என்று அவள் கூறி முடிக்குமுன், மாதவன் தன் சாமானைக் காட்டிய இடத்திற்கு ஓடினுன்.

அவ்விடம் ஒரு ஒதுக்குப் புறமான இடம். வீட்டில் உபயோக மற்ற சாமான்கள் எல்லாம் அங்கே அடுக்கி வைப்பது வழக்கம் என்பது மாதவனுக்குத் தெரியுமாதலால், அங்கு தன் சாமான்கள் கிடக்கிறதென்று சொல்லிய உடனே மாதவன் இதயம் துடி துடித்தவாறு போய்ப் பார்த்தான்.

அந்தோ! என்னே அவன் கண்ட காக்ஷி. அவன் பெட்டியும் மற்ற சாமான்களும் அலங்கோலமாகப் போடப் பட்டிருந்ததைக் கண்ட உடனே அவன் உயிர் நீத்துச் சவமாகத் தாயைக் கண்ட கோர சம்பவத்தை விட — வயிற்றெரிச்சலை விட விபரீதமான விசனத்தை விட-தன் உயிருக்கு உயிராய் எண்ணியிருந்த சித்திரப் படங்கள் சிதறிப்போய் சின்ன பின்னமாகக் கிடப்பதைக் கண்டது பதினுயிரம் மடங்கு அதிகரித்த மன அதிர்ச்சியையும் துக்கத்தையும் சகிக்க வியலாத வேதனையையுங் கொடுத்தது.

ஹா வென்று வாய்விட்டு அலறும்போது அவன் இதயம் இரு பிளவாகப் பிளந்து விட்டதுபோலத் தோன்றியது. வெயிலில் காய்ந்தும், மழையில் நனைந்தும் சில சித்திரங்கள் உருக் குலைந்து போய்விட்டன. சில காகிதங்கள் கிழிந்துபோய் துண்டு துண் டாகக் கிடந்தன. பெட்டி திறந்த பெட்டியாகையால், எல்லா வர் ணங்களும் வைத்தமாதிரி இல்லாது கலந்து தாறுமாருக விருந்தன.

மாதவன் தன்னுருயிர்க் காதலிக்காக அவள் இஷ்டப்படியே எழுதிவரும் சித்திரம் (முன்பொரு அத்தியாயத்தில் லதா இவனைக் கேட்ட படம்) அவன் காகிதத்தில் சுற்றிவைத்ததுபோல் இராமல் பிரித்துக் கசக்கி அழுக்குப் படிந்து கிடப்பதைப் பார்க்கப் பார்க்க அவன் மனத்தில் உண்டாகும் வேதனைக்கு ஓர் எல்லையே இல்லை.

எந்தத்தொழில்காரனுக்கும் அவனவன் தொழிலின்மீதுதான் அவனுக்குப் பரம ப்ரீதி. அவன் கஷ்டப்பட்டு உழைத்துச் செய்திருக்கும் பொருள்தான் அவன் உயிரினும் இனிக்கும் மேன்மையுடன் விளங்கும். தொழிலின் இன்பம் முற்றும் அது உருப்படியான பிறகு, ப்ரதிபலிக்கும் சொர்க்கப் பொக்கிஷம்போல் தோன்றும். அத்தகைய பொருளுக்கு ஏதேனும் ஹானியோ, தடையோ உண்டாகும்போது அத் தொழிலாளி தன் பிராணனுக்கே ஹானி சேர்ந்தது போன்ற சங்கடத்தை அடைவான். தொழிலின் மேன்மை யறியாதவர்களுக்கோ எல்லாம் வெறும் தோற்றமாகத் தோன்றும்.

மாதவனின் மனம் படும் பாட்டைக் கூறத் திறமா! எத்தனை சித்திரங்கள் சிதறிப் பாழாகிக் கிடக்கின்றனவோ அத்தனையும் அத்தனை குழந்தைகள் அவனுக்குப் பிறந்து இறந்து விட்டதாகத் தோன்றியது. எத்தனை சிரமப்பட்டு மூளையைச் செலவிட்டு இந்தச் சித்திரங்களை எழுதி இருப்பான். அவைகளை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு, மார்புறத் தழுவி பெருமூச்சு விடுகிறான். கண்ணிலிருந்து அணைகடந்த வெள்ளம்போல் ஜலம் ஓடுகிறது.

“ஹா! என்னுடைய சித்திரங்களுக்கு இக்கதி வருமென்று நான் கனவில் கூடக் கருதவில்லையே! என் அருமையான அமுதம் போன்ற அன்னையின் மறைவைவிட எனக்கு இது தாங்கமுடியாத துக்கமாக விருக்கிறதே! என் கண்மணி லதா இங்கிருந்திருந்தால், என்னுயிரினும் உயரிய சித்திரங்களுக்கு இக்கதி ஏற்பட்டிருக்குமா? உம். எல்லாம் என் சோதனையின் கூற்று. நான் செய்த பாபத்தின் நிழல்” என்று தனக்குள் எண்ணி, அவைகளைத் தட்டியும் துடைத்தும் சீர்படுத்தி, ஒருங்கு சேர்த்துப் பெட்டியில் வைத்துக் கொண்டான்.

அந்த வேலைக்காரக் கிழவிக்கே சாமான்களைக் காட்டிவிட்டு, ‘இவைகளை நான் எடுத்துக்கொண்டு போகிறேன். இதோ பாரு. வேறு எந்தச் சாமானும் இல்லை. அம்மா வந்தால் சொல்லிவிடு.’ என்று கூறும்போது அவனை மீறி கண்ணீர் பெருகிவிட்டதை வேலைக்காரி கவனிக்காமலில்லை. அவள் என்ன சொல்ல முடியும் பாவம். அவளும் உஸ்ஸ் என்ற பெருமூச்சு ஒன்றை விட்டாள். சாமான்களைக் கொண்டுபோகும்படித் தலையை அசைத்துவிட்டு, ‘உம். இதுவரைக்குந்தான் இந்த ஊட்டு உப்புந் தண்ணியும் இருந்திச்சு. பிரிஞ்சு போற வேளை வந்திடுச்சிங்க. என்ன பண்ணலாம்?’ என்று சில உபசார வார்த்தைகளையும் கூறினாள்.

அவளுடன் நின்று பேசக்கூட அவனால் முடியவில்லை. அவ்விடத்தில் நிற்க நிற்க பழங் காலத்துக் கதைகளெல்லாம் ஞாபகம்

வரத் தொடங்கியதால், அவனுக்கு விசனமும் இன்னும் கலவரமும் ஒன்று கூடி, அவனை வதைத்தன. அவன் அப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு மெல்லக் கிளப்பி விட்டான்.

அவன் இருந்த அறையைக் கடந்து செல்கையில், அவ் வறைக்குப் புதிதாக வந்துள்ள மனிதன் வெளியே வந்து, 'மிஸ்டர்! மிஸ்டர்! கமான் ப்ளீஸ்' என்று கூப்பிட்டான். மாதவன் வியப்பும் திகைப்பும் அடைந்தவனாய்த் திரும்பிப் பார்த்து நின்றான். அவன் 'கமான் ப்ளீஸ் ஸார்!' என்றான். மாதவன், 'என்னையா? ஏன்! என்ன சமாசாரம்' என்று வணக்கமாகத் தாய்ப் பாஷையில் கேட்டான். அந்த மைனர் பேர்வழி "என்ன சார்! இப்படி வாங்கோ சார்! ஏதோ ரொம்ப உன்னிப்பாய்க் கவனித்துக்கொண்டிருந்தீர்களே, அது என்னவென்று கேட்கத்தான் கூப்பிட்டேன். அதை நான் பார்க்கலாமோ!" என்று கேட்டான்.

மாதவன் :—பார்க்கக்கூடாத அத்தனை ரகசியம் எதுவுமில்லை. ஏதோ நான் எழுதிய சில சித்திரங்கள் இருக்கின்றன. அதைப் பார்த்தேன். அது ஒன்றும் அத்தனை பிரமாதமில்லை.

புதிய மனிதன் :—ஓ! நீர் பெரிய ஓவியக்காரரோ! எங்கே உமது சித்திரத்தை எடும் பார்க்கலாம்—என்று கிண்டலான குரலில் கூறினான். மரியாதையின்றி எப்படி மாட்டேனென்பது என்று மாதவன் சித்திரங்களை அவனுக்குக் காட்டினான்.

அதைப் பார்த்த மைனர், "அஹ்ஹஹ்ஹா! இதற்குத்தானா நீர் ஏதோ குடி முழுகிப்போய் விட்டதுபோல் பார்த்ததும், கண்ணீர் விட்டுத் தவித்ததும். பேஷ்! பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள்கூட இதைவிட அழகான ட்ராயிங்கு போடுவார்களே! நான் என்னமோ பிரமாதமென்று பார்த்தேன்" என்று அலக்ஷியமாகக்கூறிச் சிரிக்கும்போது மாதவனால் தாங்க முடியவில்லை. தொண்டையை அடைக்கும் துக்கத்துடன், 'ஐயா! காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பார்கள். அதுபோல் என் சித்திரங்கள் எனக்குச் சொர்க்கமாகத் தோன்றலாம். பிறருக்கு நரகமாக விருப்பதற்கு நான் என்ன செய்யமுடியும்? போய் வருகிறேன்' என்று சாந்தமாகக் கூறிக்கொண்டே தன் சாமானுடன் வீதியில் வந்தான்.

அவன் கையிலோ காலணா இல்லை. செல்வதற்கோ இடமும் இல்லை. கடன் கேட்கவோ அத்தனை தெரிந்த மனிதர்கள் இல்லையெனினும் இருக்கும் இரண்டொருவரிடம் கேட்கவும் கூசி அஞ்சினான். தற்சமயம் எப்படியாவது கெஞ்சிக் கூத்தாடியோ, பிச்சை எடுத்தோ பணத்தைச் சேகரித்துக்கொண்டு போய்த்தானே தீர வேண்டும். இவன் வரும் நேரத்தை அங்கு எல்லோரும் எதிர்

பார்த்துக்கொண்டிருப்பார்களாதலால், உடனே போய்ச்சேருவதற்கோர் மார்க்கந் தேட வேண்டுமென்று முடிவு கட்டிக்கொண்டு தெரிந்தவர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றான்.

வீட்டுக்காரரும் ஆதரவோடு உபசரித்து, "என்னப்பா என்ன சமாசாரம்" என்று கேட்டார். மாதவன், தன் தாயின் மரணத்தையும் தவிப்பையுங் கூறி, தான் ஊருக்குப் போவதற்கும் அங்கு வேண்டிய செலவிற்கும் 25 ரூபாய் கடனாக வேண்டுமென்றும் அதற்கு ஈடு தன் சித்திரங்களை வைத்துக் கொள்வதாயின் கொடுப்பதாகவும் வெகு வணக்கத்துடன் கூறினான்.

இது கேட்ட வீட்டுக்காரர் முகத்தைச் சுளித்தபடியே வண்ணானுக்குத் துணி எண்ணிப் போட்டுக்கொண்டிருந்தார். அவர் மகன், தையல்காரனிடம் பெரிய ஸில்கு நிஜார் முதலியவற்றைக் கொடுத்துக்கொண்டிருந்தான். அவர் மனைவி, தட்டானிடம் ஒட்டியாணத்திற்கும் வளையல் செய்வதற்கும் நிறுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஏக கலபையாக விருந்தது.

எல்லாம் கொடுத்து அனுப்பிய பிறகே அவர் மாதவனை நோக்கி, "ஐயோ பாவம். உன் தாயார் இறந்துவிட்டாளா! பெரிய குடும்பமாயிற்றே! எல்லா பாரமும் உன் தலைமீதுதானே விழுந்துவிட்டது. ஐயோ, பாவம்! உம். என்ன செய்வது? கடவுள் சோதனை செய்கிறார். அப்பா! மாதவா! நான் கண்டிப்பான ஆசாமி என்பது உனக்குத் தெரியும். கடன் வாங்கிவிட்டால், நீ இனி எப்படித் திருப்பிக் கொடுக்கமுடியும்? ஊம்....பொம்மை விளையாட்டுப் போன்றதும் பசங்கள் ட்ராயிங்கு எழுதுவது போன்றதுமான இந்தச் சித்திரங்கள் ஓர் ஈடாகுமா? கொடுக்கும் பணத்திற்கு மேலான மதிப்புள்ள சொத்தை ஈடுசெய்தாலல்லவா பொருந்தும்? பணத்தைக்கொடுத்துவிட்டுப் பின்னர், மனஸ்தாபப்படுவதைவிட கொடுக்காமலேயே கண்டிப்பாய் இல்லையென்று சொல்லிவிடுவது நல்லதல்லவா!" என்றார்.

மாதவனின் மனத்தில் இவ் வார்த்தைகள் சுருக்கென்று தைத்தன. "நான் இனி எப்படி திருப்பிக் கொடுக்கப் போகிறேன் என்ற சந்தேகமல்லவா அவருக்கு உதித்துவிட்டது. அதோடு சித்திரத்தின் அருமை தெரிந்தால் இத்தனை எளிதில் அந்த அருமையான வஸ்துவை ஊதிப் பேசி இருப்பாரா? அந்தோ! அதிர்ஷ்ட தேவதையின் அருள் மட்டும் இருக்குமாயின், இதே சித்திரங்கள் 500 ரூபாய் கொடுக்காதா? அதிர்ஷ்டமற்றவனுக்கும் இது 50 ரூபாயாவது குருடன் கையிலும் கிடைக்குமே! இதுவா 25 ரூபாய்க்கு ஈடாகாது? ஆம்! அருமை தெரிந்தால் ஈடும் தெரியும். அது தெரியாதவரையில், எல்லாம் மட்டமாகத்தான் தோன்றும். மனித

னிடத்திலிருக்கும் நம்பிக்கையும் போய்விட்டதல்லவா!" என்று நினைக்கும்போது அவனை அறியாது கண்ணீர் மளமளவென்று உதிர்ந்துவிட்டது.

இதைக் கண்ட அம் மனிதர் "என்னப்பா! என்மேல் வருத்தப் படுகிருயா? காலம் அப்படி இருக்கிறது. என்ன செய்யலாம். ஈடில்லாது எதுவும் செய்ய முடியாது" என்று மீண்டும் கூறினர். மாதவனின் மனத்தில் ஈட்டியால் குத்துவதுபோல் தோன்றி வேதனை செய்தது. அவர் தன்னை நம்பாவிட்டாலும் அருமையும் எழிலும், புராதன காலம் முதல் அழியாப் புகழும் பெற்றிலகும் சித்திரக் கலையை உதாசீனம் செய்து பேசியதை மட்டும் அவனுல் மறக்க முடியவில்லை.

மெல்லிய குரலால் பேசத் தொடங்கி, "மாமா! நான் என்னுடைய சித்திரங்கள் என்பதற்காகப் பேசவில்லை. இந்தச் சித்திரங்களை எந்தக் குருடனிடம் கொடுத்து இதன் அழகைச் சொன்னுலும் அவன் உடனே ரூபாயை எடுத்துக் கொடுப்பான் என்பதில் ஐயம் இல்லை. என்றுமே அதிர்ஷ்ட தேவதை என்னைப் புறக்கணித்துவிட மாட்டாள். என் வாழ்நாளுக்குள் என்ருவது அவள் கருணையைக் காட்டுவாள் என்ற நம்பிக்கையுடன்தான் நான் இருக்கிறேன்.

மாமா! நன்ருக அறிமுகப்பட்டுத் தெரிந்த மனிதனை நம்பாது ஈடு கேட்கின்றீரே! அதுவும் ஒரு 25 ரூபாய்க்காக! தொழில் முறையில் எள்ளத்தனை ஈடும் இல்லாமல், எதிர்பார்க்காமல், மனத்தினுலும் நினைக்காமல் நூற்றுக் கணக்கில் விலை பெறுமான பொருள்களைக் கொடுத்துவிடுகிறீர்களே! அம் மாத்திரங்கூட என்னிடம் நம்பிக்கை இல்லையா! இப்போது வண்ணுனிடம் நீங்கள் போட்டுள்ள துணிகள் எத்தனை ரூபாய் இருக்கும்? உங்கள் மனைவியின் புடவைகளே நூற்றுக் கணக்கிலாகிவிட்டதே. தையல்காரனிடம் கொடுத்துள்ள துணிகள் எத்தனை ரூபாய் இருக்கும்? தட்டானிடம் கண்ணை மூடிக்கொண்டு 35 சவரனை எண்ணினீர்களே! அவர்களெல்லாம் உமக்கு என்ன ஈடு செய்தார்கள்?

மோசம் செய்யமாட்டார்கள் என்று தொழிலை ஈடாக நம்பி அல்லவோ நீர் பொருளைக் கொடுத்திருக்கின்றீர்? அவர்கள் மோசம் செய்யாத அரிச்சந்திரர்களா! அந்த அளவிலாவது என் தொழிலில் தங்களுக்கு நம்பிக்கை இல்லாதுபோனது என் பாவந்தான். உம்மைக் கூறிப் பயனில்லை" என்று தன்போக்காகக் கூறிக்கொண்டே சித்திரங்களை எடுத்துக்கொண்டு தடதடவென்று போய்விட்டான்.

அந்தோ! அவனுக்கு ரயிலுக்கு நேரமாகும் சமயமாகிவிட்டது. இதற்குள் பணம் எங்கு கிடைக்கும். ஹா! ஈசா! உன் சோதனையின்

திருவிளையாடலே விளையாடல்! தற்சமயம் என் முன்பு இரண்டு பெரிய பிரச்னைகளைக் காட்டி வருத்துகிறாய். என் குடும்பத்தைக் காக்கவேண்டியது முதல் கடமையா; அன்றி, நான் லதாவுக்காக அவள் பிரியப்படி என் மூளை எல்லாம் செலவிட்டு, காதலுருவாய் எழுதியுள்ள சித்திரத்தை என் கண்மணி லதாவுக்கே சேர்ப்பிப்பது முதல் கடமையா? அந்தப் படமாயின் நல்ல பணத்தைக் கொடுக்கும்; மற்றவை உபயோகம் இல்லை. இனி, கடன் கேட்டுப் பிரயோஜனமில்லை. விற்றால்தான் பணம் கிடைக்கும். இந்த இரண்டும் என் அந்தராத்மாவைப்பற்றியனவாக இருக்கின்றன. இப்போது நான் என்ன செய்வேன்? 'ஏ மனமே! உன்னை நீயே தேற்றிக்கொள். உனக்கு நீயே வாத்தியார்' என்று விசனித்தவாறு பித்தன்போல் நடந்தான்.

அவன் மனம் சமுத்திரத்தின் அலைகளைவிட வேகமான நிலையில்லா எண்ணங்களோடு போராடுகிறது. அந்நிலைமையில் குடும்பத்தைக் காப்பதுதான் முதல் கடமை என்று ஒருபுறம் நெஞ்சு கூறுகிறது. அதே நெஞ்சு உன் காதலியைத் திருப்தி செய்வதுதான் முதல் கடமை என்கிறது. இரு செவிகளிலும் இரு சப்தங்கள் தோன்றி, இப்படியும் அப்படியும் திரும்பித் தத்தளிக்கின்றான். கடைசியில், 'நீ உயிரோடிருந்தால், இது போன்ற சித்திரங்கள் பல பல வரைந்து உன் காதலியல்ல; வேறு யாரையும் திருப்தி செய்யலாம். தற்போது உனது குடும்பந்தான் உனக்கு முக்கியம்; அதைக் காப்பாற்று; கைவிடாதே!' என்று கடமையை வற்புறுத்தி, லதாவே தெரிவிப்பது போன்ற ஓர் தோற்றம் உண்டாகியது.

உடனே தெளிவு பெற்றான். அப் படத்தின்மீது கண் வைத்துள்ள ஒரு தனிகரிடம் அதைக் கொண்டுபோய், "ஐயா! அப்போது நீர் கேட்ட படம் இப்போதுதான் பூர்த்தியாயிற்று. கொண்டு வந்தேன்" என்றான். அந்தத் தனிகர் எந்த விதமான கலையையும்விட சித்திரக் கலையில் அபார பித்துக் கொண்டவராதலால், வெகு சந்தோஷத்துடன் படத்தை வாங்கிக் கொண்டார். மாதவன் எத்தனைதான் மனந் தேறிய போதிலும் அவன் ஏதோ ஒரு முக்கியமான உயிருக்குச் சமமான பொருளைக் கொடுப்பது போன்ற துக்கமே உண்டாகியது. வெகு நாட்களாகக் கேட்டுக் கொண்டிருந்த லதாவைத் துரோகம் செய்துவிட்டதுபோலும், ஏமாற்றிவிட்டது போன்றும் ஓர் உணர்ச்சி தோன்றி மனத்தில் பாதித்தது.

அடுத்த நிமிடமே பரிதாபம் நிறைந்த அவனது பெரிய குடும்பம் கண்முன்பு தெரிந்தபோது, இவ் வெண்ணம் சற்றுக் குறைந்தது. இந் நிலைமையில் படத்தைக் கொடுத்துப் பணத்தைப்

183028

பெற்றுக்கொண்டு நேரே ரயிலேறி ஊர் வந்து சேர்ந்தான். "அண்ணா! அண்ணா!" என்று எல்லாக் குழந்தைகளும் காலைக் கட்டிக்கொண்டு, தமது சந்தோஷத்தைத் தெரிவிக்கும்போது மாதவனின் மனம் குழைந்து அணைகடந்த அன்பு வெள்ளத்தில் மிதந்தது. எல்லோரையும் வாரி அணைத்து முத்தமிட்டு, தான் கொண்டுவந்த தின்பண்டத்தைக் கொடுத்து மகிழச் செய்தான்.

## 9

மாதங்களும் ஒன்றிரண்டு கடந்துவிட்டன. மாதவனின் படிப்புக்கும் சமாதி ஏற்பட்டு விட்டது. இத்தனை பெரிய குடும்பத்தை அச் சிறு வாலிபன் எவ்விதந் தான் காப்பாற்றுகிறானோ அது ஈச்வரனுக்கே வெளிச்சம். என்னே உலகம். என்னே அநியாயம். என்னே மனித வாழ்க்கை....வீடு பற்றி எரியும்போது அந்த அனலில் ஒருவன் குளிர் காய்வானேயானால், அவனை முட்டாள் என்பதா, மடையன் என்பதா! திமிர் படைத்த அகம்பாவக் கட்டை என்பதா! சுயநலப் புலி என்பதா! வேண்டுமென்றே தெரிந்து செய்யும் கிராதகன் என்பதா?

மேற்குறித்த ஆசாமியின் கோஷ்டியில் சேர்ந்தவன் மாதவனுடைய பிதா என்பதைத் தாராளமாகச் சொல்லலாம். தன்னை நம்பி யிருக்கும் பெரிய குடும்பத்தையும், தன் கடமையையும் அடியோடு மறந்துபோய் பாலாம்பாளின் கர்மாதிக்குப் பிறகு ஆளே ஒருமாதிரியாகி விட்டான். தலைக்குத் தலைபோன்ற மகனும், கல்யாணத்திற்கு இரண்டு பெண்களும் காத்திருக்கும்போது, தன் பொறுப்பை மறந்துபோய் உலகம் அறியாக் கபோதியைப்போல் ஆகிவிட்டானென்றால் வேறு என்ன கூறவேண்டும்?

மாதவனும் மற்ற குழந்தைகளும் தவிக்கும் தவிப்பைக் கூறத் திறமே யில்லை. இந் நிலைமையில் தன் பிதா அடிக்கடி கல்யாணத் தரகர்களிடம் பேசுவதும், ஏதோ ரகசியம் செய்வதும் மாதவனுக்கு மிகுந்த வெறுப்பையும் அருவருப்பையுங் கொடுத்தன. தகப்

பனார் சாதாரணமாக இவனிடம் பேசுவது கூடக் கிடையாதாகை யினால், அவரிடம் வலுவில் பேசவும் மாதவன் வெறுப்புற்றான். இந் நிலைமையில் தகப்பனார் திடீரென்று வீட்டிற்கு வராது போய் விட்டதால், மாதவனுக்கு மனத்தில் கலவரம் உண்டாகிவிட்டது.

ஒருநாள், இரண்டு நாள், ஒருவாரமும் ஆகிவிட்டது. எங்குச் சென்றார்; எப்படிப் போனார் என்றதே தெரியாது மாதவன் தேடி யலைய வாரம்பித்தான். சுமார் பத்து தினங்கள் வரையில் தகவலே கிடைக்கவில்லை. மாதவனுக்கு உள்ள கவலைகள் போதா தென்று இன்னும் பதின்மடங்கு அதிகரித்த கவலையும் திகிலும் அவனைக் கப்பிக் கொண்டன. குடும்பத்தின் கஷ்டம் தாங்காது தற்கொலை செய்துகொண்டு இறந்திருப்பாரோ என்ற பயமும் உண்டாகி அவனை வதைக்கின்றது.

இந் நிலைமையில் ஒரு தினம் விளக்கு வைத்த பிறகு வீதியில் ஒரு வண்டி வந்து நின்றது. அவ் வண்டியில் யார் வருகிறார்களோ என்று மாதவனும் மற்றவர்களும் வீதியில் வந்து பார்த்தார்கள். வண்டியிலிருந்து முதலில் மாதவனின் பிதா மஞ்சள் வேஷ்டி யுடன் இறங்கினார். அடுத்ததும் ஒரு பெண் சுமார் 15 வயதிருக்கும் அவள் ஜடை குச்சுடனும், பூ சுத்திய தலையுடனும் தலை குனிந்த படியே கீழே இறங்கினாள். அவளுக்குப் பின்னால் இரண்டு பெண் பிள்ளைகளும், ஒரு ஆண்பிள்ளையும் இறங்கினார்கள்.

இத்தனை பேர்களையும், இந்தக் கல்யாண கோலத்தையும் பார்த்த மாதவனுக்குக் குடல் பத்தி எரிந்தது. தன் பிதா மறு விவாகம் செய்துகொண்டு, ஓசை செய்யாமல், சிறிய மாப்பிள்ளை யைப்போல் வந்திறங்கிய கண்றாவியை அவனால் சகிக்கவே முடியவில்லை. அவன் அகத்தில் கோபம் தீப்பொறியுடன் ஜ்வாலை வீசுகிறது. தகப்பனாரின் முகத்திலோ அசடு வழிகிறது. மற்ற குழந்தைகள், குழந்தை சுபாவத்துடன் தகப்பனாரிடம் ஓடிப்போய், "ஏம்பா! இத்தனை நாள் எங்கேப்பா போயிருந்தே! இவாள்ளாம் யாருப்பா? அண்ணா உன்னெ தேடி தேடி அலைஞ்சானேப்பா! எங்கே பூட்டேப்பா!" என்று கேட்டார்கள்.

தகப்பனார் குழந்தைகளுக்குப் பதில் பேசாமல் தலையைமட்டும் அசட்டுத்தனமாக ஆட்டிக்கொண்டே அவர்களை விலக்கிவிட்டு, வண்டியிலிருந்து இறங்கிய பெரியம்மாளை நோக்கி, "மாமீ! எல்லாம் சிறுசுகள். உள்ளேபோய் நீங்கள்தான் ஆலத்தி கரைத் துக்கொண்டு வாருங்கள். சமையல் உள்ளு அலமாரியில் மஞ்சள் பொடி, சுண்ணாம்பு இரண்டு மிருக்கும். தட்டும் அவ்வறையிலேயே இருக்கும். போய் கொண்டு வாருங்கள்" என்று உத்திரவிட்ட தைக் காண மாதவனின் இதயம் துடிக்கிறது.

அந்தம்மாளும் வெகு நாள் பழகியவள்போல் தட தடவென்று உள்ளே சென்றாள். இதற்குள் அக்கம்பக்கம் உள்ளவர்கள் அங்கு வந்து கூடிவிட்டார்கள். "எண்டா! உங்கப்பா கல்யாணமா பண்ணிண்டான்? இதென்ன அக்கிரமம்!" என்று சிலர் மாதவனிடம் உபசாரம் சொல்ல வந்தார்கள். "சிலர், எண்டாப்பா! கல்யாணம் பண்ணிண்டயா ரொம்ப சந்தோஷம்" என்று அவருக்கு வாழ்த்து கூறினார்கள். பின்னும் சிலர் அருகில்கூட வந்து விசாரிக்காமல் "கல்யாணத்தழகைப் பாரு. மலைபோல் பிள்ளையும், பெண்களும் கல்யாணப் பருவத்தில் இருக்கையில், இந்த மனிதன் இப்படி அறிவுகெட்ட காரியம் செய்வானா? வெட்கமில்லையா! பேரனும் பேத்தியும் எடுத்த பிறகு கல்யாணமாமே! கல்யாணம். வீட்டு நிறைய இருக்கும் ஆத்மாக்களை ரக்ஷிக்கச் சக்தியற்ற கட்டை இன்னும் ஒரு டஜன் குட்டிபோட வழி தேடிக்கொண்டானா? மூளை கெட்டவன். ஒரு பெண்ணைப் பார்த்து மாதவனுக்கு விவாகத்தைச் செய்துவைத்து குடும்பத்தை ரக்ஷிக்காமல் இதென்ன கேலிக்கூத்து" என்று பரிகசித்தார்கள்.

உள்ளே சென்ற பெரியம்மாளே, கல்யாண மாப்பிள்ளையின் மாமியார் என்பதைக் கூறவேண்டுமா? தடதடவென்று சமையல் கட்டிற்குச் சென்று, வெகு நாள் பழகியவள்போல், ஆலத்தி கரைத்துக்கொண்டு வந்து, தானே சுத்திக் கொட்டினாள். "லக்ஷ்மீ கல்யாணம் வைபோகமே" என்று தானே பாட்டும் பாடினாள். புதிய கிரகப்பிரவேச தம்பதிகள் வலக்காலால் வாசல்படி தாண்டி உள்ளே செல்வதைப் பார்க்கப் பார்க்க மாதவனின் வயிற்றில் செய்யும் சங்கடம் சகிக்கமுடியவில்லை.

தகப்பனாரைப் பார்த்து வெடுக்கென்று பேசிவிடலாமா என்ற ஆத்திரம் வந்துவிடுகிறது. ஆயினும் தனக்கு அவர் அநுகூலமாக இல்லை எனினும் முன்னறி தெய்வமன்றோ? அதனால் அந்த ஸ்தானத்திற்குக் கொடுக்கவேண்டிய மதிப்பை எண்ணி, தன் சண்டாளக் கோபத்தைக் காட்டாது, குழந்தைகளை அணைத்துக்கொண்டான்.

உள்ளே வந்த மாப்பிள்ளை தன் அறைக்குச் சென்று புது மனைவியை அழைத்து, "இந்த அறையில் உன் சாமான்களை வைத்துக்கொள்" என்று கூறி, தானே சாமான்களை வைத்ததோடு, அவ் வறையிலிருந்த சாமான்களை எல்லாம் தடதடவென்று இழுத்து வெளியில் போட்டார். அவ்வறையில் இரண்டு தூளிகளில் விடப்பட்டிருந்த இரட்டைக் குழந்தைகளைப் பார்த்து, "அடேய் மாதவா! இந்தத் தூளிகளை இனிமேல் வெளியே கட்டு. குழந்தைகளை எடுத்து வெளியில் விடு" என்று கூறிக்கொண்டே, தூங்கும் குழந்தையைத் தூக்கி கூடத்தில் தானே கிடத்தினார்.

அதுவரையில் எத்தனையோ சிரமப்பட்டுப் பொறுமையை வகித்திருந்த மாதவனுக்குச் சாந்தத்தைப் பீறிக்கொண்டு வயிற்றெரிச்சலுடன் ஆத்திரம் பொங்கிவந்துவிட்டது. குறை தூக்கத்தில் எடுத்துவிட்டதால், வற்று வற்று வென்று கத்தும் குழந்தையைத் தூக்கித் தனது தோள்மீது போட்டுக்கொண்டு தட்டியபடியே "ஆமாம். இன்று இவ்வறையை மட்டும் காலி செய்யவேண்டும். நாளை வீட்டையே காலி செய்யவேண்டுமல்லவா! வெட்கங்கெட்டவர்கள் ஊருக்குப் பெரியவர்கள். பசு பக்ஷி ஜாதிகளுக்கு இருக்கும் அறிவும் அன்பும் உமக்கில்லாது சூனியமாகிவிட்ட சமயம் கண்ணு மண்ணு தெரியுமா? என் தாய் என்று சாகப்போகிருள் என்று எதிர்பார்த்திருந்து உமது பிரார்த்தனையைச் செலுத்தினுரா! சீச்சீ! மனிதனும் மனிதன்! இவ் வறையை விடமுடியாது. இத்தனை குழந்தைகளுக்கும் இந்த அறை போதவில்லை. இதை விடமுடியாது" என்று கண்களில் தீப்பொறி பறக்கக் கூறினுன்.

"ஐயோ! கால் வைக்குமுன்னேயே சண்டையையும் பொறுமையையும் காட்டி, இருக்க இடங்கூடக் கொடுக்க முடியாது என்று உபத்திரவிப்பதற்குத்தாஞ எங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு வந்தீர்கள்? அந்தச் சிறிய குழந்தை கண்ட சுகம் இது தானு? என்னம்மாடீ! ஒன் தலே எழுத்து இப்படியாடீ ஆச்சு!" என்று ஒப்பாரி வைத்து, மூக்கைச் சிந்த ஆரம்பித்துவிட்டாள் மாமியார்.

கல்யாண மாப்பிள்ளை என்ன செய்வார் பாவம்! பிள்ளைமீது வரும் கோபம் ஹிரண்யனின் கோபத்தையும் மிஞ்சியது. "சீச்சீ! முட்டாள் பயலே! பட்டண வாஸத்தில் ரெண்டு பரீக்ஷை கொடுத்து விட்ட கர்வமோ இது? அல்லது சின்னஞ் சிறுக்க கிளிபோன்ற பெண்ணை உனக்கு இல்லாமல் அப்பா கல்யாணம் செய்துகொண்டு விட்டானே என்கிற வயித்தெரிச்சலினுல் பொறுமையா? வாயைத் திறக்காது உள்ளே ஒழித்து விடு. சுபமாய் கல்யாணம் செய்து கொண்டு வருகையில், அபசகுனம் போன்று இத்தனை அமர்க்களமா!" என்று கூறிக்கொண்டே இன்னெரு குழந்தையை வீணையுடன் அவிழ்த்துக் கூடத்தில் கொண்டுபோய், மூட்டை போடுவது போல் போட்டார்.

மாதவனின் இதயம் இந்த வார்த்தையாகிய பாணத்தைத் தாங்கமுடியாது துடிக்கிறது. தன் தாயார் ஓர் காளிகாதேவியைப் போல் எதிரில் தோன்றித் தன்னையும், தன் உடன்பிறந்தோர்களையும் அப்படியே விழுங்கிவிடக் கூடாதா! அல்லது தூக்கிக் கொண்டு போய்விடக்கூடாதா வென்ற எண்ணமே உண்டாகியது. மனித சுபாவத்தை மறந்து பேசும் அறிவு கெட்ட தந்தையிடம்

எதிரில் நின்று பேசவும் வெறுத்தான். குழந்தைகளைத் தூக்கி தங்கைகளிடம் கொடுத்தான். அவ்வறையிலிருந்த சாமான்களை வாரி கூடத்தில் போட்டான். "உம். என் தாய் மரணத் தறுவாயில் உமக்குக் கூறிய வார்த்தைகளை அடியோடு மறந்து இறுமாப்புடன் மறு விவாகத்தைச் செய்து கொண்ட நீரும் ஓர் மனிதனா?" என்று தனக்குள் எண்ணியபடியே கண்ணீர் வழிய வெளியே வந்தான்.

அவன் வயிற்றில் செய்யும் சங்கடத்தைச் சகிக்கமுடியாது துடித்தவாறு தன் பெட்டியைத் திறந்து பார்த்தான். ஒரேயடியாக அவனைத் தூக்கிவாரிப்போட்டது. உலகமே சுற்றுவதுபோல் கலக்கம் உண்டாகிவிட்டது. பெட்டியைக் கிளறிக் கிளறிப்பார்த்தான். அவன் உயிருக்கு உயிராக மதித்திருந்த தன்னருமைச் சித்திரங்கள் ஒன்றுகூடக் காணப்படவில்லை. அவனுக்கு இருந்த கவலையில் இது பரியந்தம் அவைகளைப் பார்க்காமலேயே இருந்தான். இச்சித்திரங்கள் எவ்விதம் மாயமாய் போயிருக்கும் என்ற சந்தேகம் அவனுக்கு உண்டாகி விட்டது.

வீட்டிலுள்ள எல்லோரையும் அழைத்துக் கேட்டான். ஒவ்வொருவரும் எனக்குத் தெரியாது, உனக்குத் தெரியாது என்றார்கள். 5 வயதுடைய சிறு பெண் மாதவனின் காலைக் கட்டிக்கொண்டு "அண்ணா! அண்ணா! கொஞ்ச நாளைக்கு முன்னே இதில் இருந்த படத்தையெல்லாம் அப்பா எடுத்துண்டா! நான் பாத்தேன்." என்றது. அதோடு மாதவனின் சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது. அப் படங்களை ஒன்றுக்குப் பாதியாக விற்று, தன் கல்யாணத்தை அவன் நடத்தி இருப்பதாகத் தெரிந்துகொண்டான்.

உடனே இன்னொரு பெட்டியைத் திறந்து பார்த்தான். அதில் இருந்த அவன் தாயாரின் மங்கல்யமும் இன்னும் சில சித்திரங்களும் கூடக் களவுபோயிருந்ததைக் கண்டதும் அவனுக்கு எப்படித்தான் இருக்கும். நெஞ்சம் பற்றி எரிந்தது. வாய் பேசாது மௌனமாகத் தன் தாயை எண்ணிக் கண்ணீர் விட்டபடியே படுத்து விட்டான்.

இத்தனை குழந்தைகளையும் தவிக்கவிட்டு இறந்த வீடாக அவ்வீடு இல்லாது வாஸனையும், புஷ்பங்களும், கொம்யாளமும் அந்த மனிதனின் குதூகலமும் ஊரார் நகைத்துப் பரிகாஸம் செய்யும்படியான நிலைமைக்கு வந்து விட்டது. அத்தனை கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு மாதவன் தன் தாயாரின் வாக்கைப் பரிபாலிப்பதற்காக அவ்விடத்தில் விதியே என்று இருந்தான்.

தங்கைகளுக்காக எத்தனைப் பிரயாசைப்பட்டும் சரியான இடங் கிடைக்காத துக்கம் ஒருபுறம். தகப்பனின் இளைய மனைவியிடத் திலும், அவளுடைய தாயார், பாட்டி இருவரிடத்திலும் தானும் தன் உடன் பிறந்தோர்களும் படும் சீர்கேட்டின் மனக்கொதிப்பு ஒருபுறம். தந்தை புதிய சோபன மாப்பிள்ளையைப்போல் எதையும் லக்ஷ்யம் செய்யாது மனைவியே சொர்க்கமென்று எண்ணித் திரியும் கஷ்டம் ஒருபுறம். தனக்கு வேலை கிடைக்காத விசனம் ஒருபுறம். இவைகள் எல்லாவற்றையும் விடப் பெரும் வேதனையும், திகிலும் அவனைப் புதிதாக வாட்டத் தொடங்கியது யாதெனில், தந்தையின் புதிய—இளைய யௌவன-மனைவி இவனைப் பார்ப்பதும் நகைப்பதும் சற்றும் பிடிக்காது, வெறுப்பும் திகிலும் உண்டாகிவிட்டன. எங்கே சித்திராங்கியின் கதையாகிவிடுமோ என்ற திகில் பிடித்துக் கொண்டது.

அதற்கு ஏத்தாப்போல, தகப்பனுரே அது விஷயமாக மாத வனைக் கடிந்து பேசவும், சந்தேகித்துச் சாட்டிச் சாட்டிக் கூறவும் தலைப்பட்டதை அறிந்ததும், அவனால் தாங்கவே முடியாது போய் விட்டது. "ஒன்று, தான் இத்தனை பெயர்களையும் விட்டு விலகிவிட வேண்டும்; அல்லது தகப்பனுர் தனியே போய்விடவேண்டும்; இவ்விரண்டில் எது நடக்கும் ஈசா! எந்தக் காரணத்தின் மூலம் என்னைக் காப்பாய் என்னப்பனே!" என்று மிகுந்த கவலையுடன் வேண்டுவான்.

மாதவன் செய்த புண்ணியமோ, அவன் தாயார் செய்த புண்ணியமோ இத்தனை வருடங்களாக இல்லாமல் திடீரென்று அவன் பிதாவை வெளியூருக்கு மாற்றிவிட்டார்கள். இரட்டைப் பங்கு சந்தோஷத்துடன் புது மனைவியுடன் மாமியார் சகிதம் புறப் பட்டு, துளிகூட கவலையின்றி வெகு உத்ஸாகத்துடன் அவர் ஊருக்

குப் போய்விட்டார். மாதவனுக்கு இந்தப் பிரயாணத்தினால் வெகு திருப்தியும் சந்தோஷமுமே உண்டாகியது.

அப்போது அவரைக் கண்டவர்கள், "உம். ஐயோ ராமா! இந்த மனிதனுக்கு மூளைதான் கலங்கிவிட்டதென்று தோன்றுகிறது. இந்தப் பெரிய குடும்பத்திற்கும் தனக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லைபோனாலும், மாதவனின் தலையில்தான் அந்த பாரம் பூராவும் விழுந்திருப்பதாகவும் எண்ணி யல்லவோ ஷோக் மாப்பிள்ளையைப் போல் போய்விட்டான். என்ன அநியாயம்! இப்படிக் கூடவா பாச மற்று, பசையற்றுப் பாலைவனம்போல் மனம் இருக்கும்" என்று பரிகஸித்தார்கள்.

ஊருக்குச் சென்ற மனிதன், குடும்பத்தைப்பற்றி ஒரு கடிதங் கூடப் போடவில்லை. மாதவன் தன்னைப் பிடிக்க விருந்த பிசாசு தொலைந்ததாகவே எண்ணி மகிழ்ந்தானே யன்றி, விசனிக்கவே இல்லை. பெந்திப் பாட்டியை வீட்டில் கொண்டு வைத்துக்கொண்டான். வெறும் வாயை மெல்லுகிற ஔவையாருக்கு ஒருவாய் அவல் கிடைத்ததுபோல் கிழவிகளின் தொணப்பே பொறுக்க முடியாதது. அதோடு சதா இராப் பகலாக "மாதவா! இந்தப் பெண்களுக்குக் கல்யாணம் பண்ணவேண்டாமா! நீ கல்யாணம் பண்ணிக் கொள்ளவேண்டாமா? இப்படியா அசட்டுத்தனமாய் இருப்பா?" என்று நச்சுக்கொட்ட ஆரம்பித்துவிட்டாள். இதை எப்படித்தான் சகிப்பான் பாவம்!

மாதவன் :—பாட்டீ! நான் சும்மாவா காலங் கழிக்கிறேன் என்று பார்த்தாய்? எனக்கு அந்தக் கஷ்டம் தெரியாதா! கவலை இல்லையா! எங்கே போனாலும் வரதக்ஷிணையும் சீரும் கொண்டா என்கிறார்கள். நானோ சிறு சிறு சித்திரங்கள் வாரப் பத்திரிகைகளுக்கும், மாதப் பத்திரிகைகளுக்கும் எழுதி, கால் வயிறு கஞ்சியாவது வார்த்துக் குழந்தைகளைச் சாகாது காப்பாற்றினால் போதுமென்று இருக்கிறேன்.

பாட்டீ! நீயோ கர்னாடகம். காலமோ வர வர தலை கீழாகிக் கொண்டிருக்கிறது. எந்தத் தொழிலுக்குப் போனாலும் போட்டி அதிகமாகிவிட்டது. இந்த பிழைப்பின் வாயிலும் மண் விழா திருக்கவேண்டுமேயென்று நான் வாயில் ஈரமில்லாதிருக்கிறேன். இந்நிலைமையில் வேலையும் கிடைக்கவில்லை, அப்பாவின் கதியோ நீ அறிந்ததுதான். நான் என்னதான் செய்வேன் சொல்லேன்?

பாட்டி:—என்டாப்பா! நான் கர்னாடகந்தான். இருந்தாலும் குடும்பத்தின் மான அவமானத்தைப் பார்க்கவேண்டாமா? உங்கம்மா மரணத் தறுவாயில் நீ சொல்லியதை நிறைவேற்ற வேண்

டாமா! எங்கேயோ யாருக்கோ என்னமோ எழுதிக் கொடுக்கிறேன் என்கிருயே! அங்கேதான் போய் கடனைக் கேள். இல்லாவிட்டால், தர்மத்துக்குக் கல்யாணத்தையே அவாளைப் பண்ணி வைத்து விடச் சொல்லேன். அதுவும் இல்லாவிட்டால், அவாளுக்கே சரியாயிருந்தால், கொடுத்துக் கல்யாணத்தை முடித்து விடேன்— என்ருள்.

இந்தக் கிழவியின் வார்த்தை அத்தனை மனப் புண்ணுடனிருக்கும் மாதவனுக்கும் சிரிப்பை உண்டாக்கிவிட்டது. லோகவிவகாரம் தெரியாது பேசும் மனிதர்களை எப்படித்தான் திருப்தி செய்ய முடியும்? "பாட்டீ! நீ சொல்ற யோசனைகளெல்லாம் நம் போன்ற ஏழைகளுக்குப் பலிக்கக்கூடியதல்ல. நானும் பெரிய செல்வச் சீமானாக விருப்பின், அது பலிக்கும். கடன் கேட்பதற்கு ஈடு காட்டக்கூட பொருளில்லாத நான் யாரைக் கேட்டால் பணம் கிடைக்கும்? என்னால் கூடிய வரையில் நமக்குச் சரியான ஏழையைப் பார்க்கிறேன். அவனும் தனக்கு வேண்டிய சொல்ப சீராவது செய்தாக வேண்டு மென்கிருன்.

கண்ட கேட்டை, மூட்டைகளுக்கும் என் தங்கைகளைத் தள்ளிவிட மனமில்லை. என்ன செய்வது? யார் எதை வேண்டுமாயினும் சொல்லட்டும். நான் அவசரப்பட்டு எதையும் செய்துவிட மாட்டேன்" என்று முடிப்பதற்குள், பாட்டி சற்று கோபத்துடன், "ஏண்டாப்பா! இப்படிப்பட்ட துணிச்சலுடன் பேசுகிருயே! இது தகுமா? நாலுபேர் ஒரு சின்ன வார்த்தை சொன்னால், அது உன்னைப் பாதிக்காதா? இத்தனை பெரிய கிழ முண்டை இருந்தும், இப்படியா நடக்கிறதென்று என் மண்டையை வேறு உருட்ட மாட்டார்களா?

மாதவா! இதோ பாரு! நான் உனக்கு இதத்தைத் தான் சொல்கிறேன். அதனால், உனக்கும் நன்மை. உன் குடும்பத்திற்கும் நன்மை. என்றைக் கிருந்தாலும் பணம் அகப்படப் போவதில்லை. உன் அப்பனின் பவிஷோ தெரிந்திருக்கிறது. அவனை இனி நீ எந்த விதத்திலும் எதிர்பார்க்க வேண்டியதில்லை. நம்ப கல்யாண மாமா சுப்புக் குட்டி இருக்கான். பாரு; அவன் எப்படியாவது இரண்டாயிரம் ரூபாய் வரதக்ஷிணையுடன் உனக்கு முதலில் கல்யாணத்தை முடித்து விடுகிருனும். இரண்டாயிரம் ரூபாய் என்ருல், லேசானதா! அதோடு ரெட்டைச் சீர் வேறு கொடுக்கிருனும்.

ரெட்டைச் சீரில் ஆளுக்கு ஒன்ருகப் பிரித்துத் தங்கைகளுக்குச் சீர் கொடுத்து விடலாம். பணத்தைச் சிக்கனமாகச் செலவிட்டுக் கல்யாணத்தை முடித்துவிட்டு மிச்சத்தை மற்ற குடும்ப செலவுக்

கும் வைத்துக்கொள்ளலாம். ஒரே கல்லில் மூன்று பழங்களை அடிக்கலாம். என் முகம் இப்படி மாறுகிறது? நான் சொல்றதைக் கேளு. இம்மாதிரி இடங்கள் தப்பிவிட்டால், பிறகு உனக்கு வெகு கஷ்டமாகிவிடும். நன்றாக யோசித்துச் சொல்லு. வேறு வழியே இல்லை" என்று மெல்ல தன் பிரசங்கத்தை முடித்தாள்.

அந்தோ! கல்யாணம் என்று சொல்லும்போதே அவன் மனத்தில் செய்யும் வேதனையை இந்தக் கர்னாடகக் கிழவி எப்படி அறிவாள்? அறியும் சக்திதான் அவளுக்கு ஏது? மாதவனின் மனம் குழம்பியது. தன் ஆருயிர்க் காதலி லதா, அவனுக்குக் கிட்டாத பொருள் என்பதை அவன் அறிந்திருந்தும், ஆழமாய்ப் பதிந்துபோன அவன் காதலைத் தன்னுடைய இதயக் கோட்டையிலிருந்து அசைக்கவே முடியவில்லை. அதை மறக்க அவன் பகீரத பிரயத்தனம் செய்தாலும் அவனாலும் முடியாது, சதா மனத்திற்குள் எண்ணி எண்ணி ஏங்கித் தவித்துக் கொண்டே தன் கடமைகளை ஓர் மெஷின்போல் செய்து வருகிறான்.

தன்னுடைய கஷ்டங்களை எல்லாம் சகித்துக்கொண்டு தன் உடன்பிறந்தவர்களுக்கு ஒரு குறையுமின்றி விசனமின்றி வளர்ப்பதிலும் தன் தாயின் மரணத் தறுவாயில் கூறிய அமுத மொழியை நிறைவேற்றும் முறையில் எத்தனையோ சாந்தமாக விருக்கிறான். அவனுள் அழுந்திக் கிடக்கும் அணைகடந்த அன்பின் வெள்ளத்தை அவனைப் படைத்த கடவுளையன்றி வேறு யார் அறிவார்கள். மாதவனால் அதற்குமேல் அங்கு நிற்கவும் முடியவில்லை. பழைய விஷயங்களெல்லாம் நினைவில் தோன்ற வாரம்பித்துவிட்டன. உடனே சரேலென்று எழுந்து போய்விட்டான்.

## 11

தன் தாயாருடைய தேக சுகத்தின் நிமித்தம் லதா சில மாதங்கள் கிராமத்திலேயே இருக்கும்படியாகி விட்டது. அவள் நல்ல விவேகி, புத்திசாலி; புத்தியறிந்த வனிதை; காதலின் மகிமையை நன்கு தெரிந்தவள்தான். ஆனால், பெற்றோரின் கீழ் அடங்கி ஒடுங்கி நடக்கும் பருவம் பெற்றவளல்லவா? காதலுக்கு அவள் ஆத்மா அடிமை. பெற்றோருக்கு அடங்கியிருப்பவளாதலால், அவள் சரீரம் அவர்களுக்கு அடிமை. எத்தனைதான் அன்புக்குப் பாத்திரமாகவிருப்

பினும் அவளுடைய வரம்பைமீறி டாம்டும் என்று சென்று, அதிகப் பிரசங்கியாய் நடக்கவும், அதனால் பெரிய அவமானமோ, கஷ்டமோ, ஆபத்தோ பெற்றோருக்குத் தேடிவைக்கவும் அவ் வனிதா மணி இஷ்டப்படவில்லை.

மாதவனை எண்ணி எண்ணி ஏங்காம லிருக்கவோ, அவனை மறக்கவோ அவளால் அடியோடு முடியவில்லை. பெற்ற தாயாயினும் அந்தரங்கத்தை எடுத்துக் கூற லஜ்ஜை குறுக்கிடுவது சகஜமல்லவா? அதோடு சரிக்குச் சரியான யோக்கியதை யுடையவர்களாயின், அதைப்பற்றி ஒருகால் பெற்றோரே நினைக்கக் கூடும். இப்போது மாதவனைப் பற்றியோ பெற்றோரும் முதலே நினைக்கப்போவதில்லை. தான் சொன்னாலும் ஏற்கப் போவது மில்லை. வீணாக ஒருவரும் அறியாது அமுங்கிக் கிடக்கும் ஒரு ரகஸ்யத்தைப் பகிரங்கப்படுத்துவதுதான் மிச்சமாகும். "நமக்குப் பிராப்தம் இருக்குமாயின், நானும் அவரைப்போல் எளிய குடும்பத்தில் பிறந்திருக்க மாட்டேனா? எல்லாம் சோதனைக்காகத்தான் நேர்ந்திருக்கிறது— என்று லதா தனக்குள் எண்ணிக் கண்ணீர் விடுவாள்.

கிராமாந்திர மாகையினால், பொழுதுபோக்கிற்காக ஏராளமான தமிழ்ப்பத்திரிகைகளை அவள் வரவழைத்துப் படித்துவந்தாள். அவ்வப்போது பத்திரிகையில் வரும், மாதவன் எழுதிய சித்திரங்களைப் பார்க்கும்போதெல்லாம் லதாவுக்கு மாதவனையே நேரில் பார்ப்பதுபோன்ற ஓர் சந்தோஷமும் கரை காணாத அன்பும் உண்டாகும். அதை யாரேனும் கண்டு விடப் போகிறார்களே என்ற திகிலும் ஒருபுறம் பாதிக்குமாதலால், அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் இருப்பாள்.

மாதவன், தங்கள் வீட்டிலேயே இருப்பதாக லதா எண்ணி இருந்தாள். இங்கு நடந்திருக்கும் கலவரங்கள் ஒன்றும் அவர்கள் யாருமே அறியமாட்டார்கள். லதாவின் மாமனாகிய ராம்பிரஸாத் ஒரு தினம் கிராமத்திற்கு வந்த பொழுது, 30 ரூபாயை லக்ஷ்மியம்மாளிடம் கொடுத்தான். இது ஏது என்று கேட்டதற்கு அந்த மனிதன், "என்ன அக்கா! தெரியாதுபோல் கேட்கிறாயே! நீங்கள் வந்த பிறகு மாதவனின் தாயார் செத்துப்போய்விட்டாள். அவன், படிப்பை நிறுத்திவிட்டு, ஊரோடு போய்சேர்ந்துவிட்டான். அந்த அறை காலியாகி விட்டதை, ஏன் சும்மா போடவேண்டுமென்று மாதம் 10 ரூபாய் வாடகைக்கு ஒரு மாணவனை வைத்துவிட்டேன். 50 ரூபாய் அவன்—முன்பணமாகவே—அட்வான்ஸ் கொடுத்தான். எனக்கு அவசரமாக வேண்டியிருந்ததால், அந்த ரூபாயை நான் செலவிற்கு எடுத்துக்கொண்டுவிட்டேன்.

இப்போது இத்தனை நாளாகி விட்டதே; அத்தான் ஒருகால் கோபிக்கப்போகிறாரே என்று என் பணேவியின் கை வளையலை விற்று முதலில் இதைக் கொடுத்தேன்; பிறகு மிகுதியைக் கொடுத்து விடுகிறேன். கோபிக்காதே அக்கா!'' என்று சரியான கயிறு திரித்ததோடு நில்லாமல் சங்கிலி விஷயத்தை அப்படியே அமுக்கி விட்டான்.

அப்போதுதான் மாதவன் வீட்டைவிட்டுச் சென்றுவிட்டது லதாவுக்குத் தெரிந்து, அவன் தாயார் இறந்து விட்டாள் என்றதைக் கேட்டதும் லக்ஷ்மியும் லதாவும் மிகவும் வருத்தமுற்றார்கள். 'ஐயோ! பாவம்! மாதவன் நல்ல பையன். மகா புத்திசாலி. மிகுந்த வணக்கமும் விவேகமும் கொண்ட பையன், தன்சொந்த அறிவினால், சாமர்த்தியத்தினால் இத்தனை படிப்பும் இலவசமாகப் படித்து முன்னுக்கு வந்தான் பாவம். கஷ்டப்படும் காலத்தை மட்டும் அனுபவித்துவிட்டு சுகப்படும் காலத்தில் அவன் தாயார் இறந்துவிட்டது மிகவும் விசனமாயிருக்கிறது. ஊம். யார் விதி யாரை விட்டது'—என்று லக்ஷ்மியம்மாள் கண்ணீரும் விட்டாள்.

லதா வாய்விட்டு எதுவும் சொல்வதற்கில்லாமல் உள்ளுக்குள்ளேயே குமுறினாள். லதாவுக்கு மாதவனின் மாத்ரு பக்தியின் எல்லை வெகு நன்றாகத் தெரியுமாதலால், அத்தகைய அன்னையைப் பறி கொடுத்துவிட்டு அவர் என்ன துடிக்கின்றாரோ! இச்சமயம் அவருக்கு அருகிலிருந்து ஓர் ஆதரவு சொல்வதற்கும் முடியாத நிலைமையில் இந்தக் குக்கிராமத்தில் வந்து மாட்டிக்கொண்டோமே! பெரிய குடும்பியாகிய அவரது அன்னையின் மறைவு மாதவனின் இதயத்தையே பிளந்திருக்குமோ! அதோடு மகா அபாக்கியவதியாகிய என்னையுமன்றோ நினைத்து ஏங்குவார். அவர் ஒரு ஊரு; நானொரு ஊரு. மனம் மட்டும் அடித்துக்கொண்டு லாபமென்ன? ஒரு கடிதம் எழுதக்கூட ஸ்வாதீனமற்ற நிலைமையில் அல்லவோ நான் இருக்கிறேன். ஏ கடவுளே! இச் சமயம் அவர் துயரத்தை ஆற்றித் தேற்றி அவருக்கு ஓர் விபத்தும் இல்லாமல் காப்பாற்றவேண்டும்—என்று எண்ணி மனங் கலங்கினாள். மாதவனை, அபாண்டப் பழி போட்டு வீட்டைவிட்டுத் துரத்திய ரகஸியம் அறிந்திருந்தால், லதாவின் மனம் நிலை கொள்ளுமா?

லக்ஷ்மணப் பிரஸாத் வந்தார். அவரும் அப்போதே மாதவனின் தாயாரின் மரணத்தைக் கேட்டு விசனித்தார். உபசாரக் கடிதமொன்று எழுதும்படியாக லக்ஷ்மியம்மாள் சொல்லியதற்கு ராம் பிரஸாத் குறுக்கிட்டு, "போ அக்கா! உனக்குக் கௌரவம் அகௌரவம் இன்னதெனத் தெரியவேயில்லை. உன் வீட்டில் இனாமாக இடம் வைத்துக்கொண்டு, வேலைக்காரன் போல் இருந்த ஓர்

# எனது கோரிக்கை

அறிவிற் சிறந்த அன்பர்களே !

எம்பெருமானின் ஜாயமான கடாக்ஷத்தினாலும், பெரியவர்களின் ஆசீர்வாதத்தினாலும், மோகினிச் செல்வியின் அன்பர்களாகிய உங்களின் பேருதவியாலும் நம் மோகினிச் செல்விக்கு இந்த இதழுடன் 15 ஆண்டுகள் இனிது முடிந்து, நாளது 1939-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் 16-வது ஆண்டு ஆனந்தமாயும், மங்களகரமாயும் பிறக்கப்போகின்ற சந்தோஷத்தை வணக்கத்துடன் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த இதழில் மோகினிச் செல்வி, கஸ்தூரி திலகம் அல்லது காணும்ருதம் என்ற உயரிய நாவலைத் தாங்கி வழக்கம் போல் உங்கள் ஆசியைப் பெறுவதற்கு உங்களில்லம் தேடி வருவாள்.

மோகினிச் செல்வியின் அபிவிருத்தியில் பேராவல்கொண்டு பேருதவி செய்யும் உங்களுடைய இதய பூர்வமான அன்பிற்கு முன்பு நான் சொல்லவேண்டுவதென்ன இருக்கிறது ? ஆயினும் உங்கள் ஆதரவை என்றும்போல் 16-வது ஆண்டிலும் மோகினிக்கு அளித்து, அவளை உத்ஸாகமூட்ட வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டிய எனது கடமையைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் பேருதவியே அவளுடைய ஜீவநாடி என்பது நீங்களறியாததல்ல. இப்போதே 16-வது ஆண்டின் சந்தாவை அனுப்பி, எமக்குப் பேராதரவளித்துள்ள சகோதர சகோதரிகளுக்கு, எனது மனமார்ந்த நன்றியறிதலையும், வந்தனத்தையும் செலுத்துகிறேன்.

நிற்க, வருடாவருடம், வருட இறுதியில் நாம் ஒரு தனிப் புத்தகம் பிரசுரிக்கும் வழக்கப்படி, சென்ற வருடம் உங்கள் உள்ளத்தை உருக்கிக் கண்ணீரைப் பெருக்கி, உணர்ச்சியைக் கிளறிய உளுத்த இதயத்தை அளித்தோம். இம்முறை, முற்றிலும் உங்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்துச் சந்தோஷத்தையடையக்கூடிய ஹாஸ்யரஸப் பிரதானத்துடன், பல அருமையான விஷயங்களைக் கொண்ட "வத்ஸகுமார்" என்ற புதிய நாவலை இம்மாதத்து இதழுடன் வெளியிட்டிருக்கிறோம்.

அழகிய சித்திரத்துடன் கூடிய மேலட்டையுடன் உள்ள இப் புத்தகத்தின் விலை அணு எட்டு; சந்தா நேயர்களுக்கு அணு ஆறுதான். அன்பர்கள், இப் புதிய புத்தகத்திற்கும் சந்தாத்தொகையுடன் சேர்த்து, மணியார்டர் அனுப்பி, எமக்கு அபாரமான ஆதரவை அளிக்கும்படி வேண்டுகிறேன்.

உளுத்த இதயத்தின் பின் உதயமாகிய மகிழ்ச்சி உதயத்தை உங்களில் இன்னும் வாங்காதவர்கள் இருப்பின், அதையும் வாங்கி எமக்கு ஊக்கத்தையும், உத்ஸாகத்தையும் கொடுக்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றியுள்ள

**வை. மு. கோதைநாயகி**

---

# நமது அச்சாலயம்

சென்ற ஆண்டின் நவம்பர் இதழில், நமக்குச் சொந்த அச்சாபீஸிருப்பதால், முன்பு கைவசமில்லாத பல நாவல்களின் மறு பதிப்புகளைக் கூடியசீக்கிரத்தில் வெளியிடுவதாகத் தெரிவித்தோமல்லவா? இதுவரை அடியிற்கண்ட நாவல்களின் மறுபதிப்புகள் தயாராயிருக்கின்றன வென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். நேயர்கள் தங்களுக்கு வேண்டிய நாவல்களுக்கு முன்பணம் அனுப்பித் தபாற்செலவின்றிப் பெற்றுக்கொள்ளக் கோருகிறோம்.

| | |
|---|---|
| ராதாமணி (2-பாகங்கள்) | அனாதைப் பெண் |
| நவநீதகிருஷ்ணன் | கதம்பமாலை |
| மங்களபாரதி | நளினசேகரன் |
| கௌரீமுகுந்தன் | மூன்று வைரங்கள் |
| சோதனையின் கொடுமை | படாடோபத்தின் பரிபவம் |
| உத்தமசீலன் | பிச்சைக்காரக் குடும்பம் |
| இன்பஜோதி | ப்ரேமபரபா |
| ராஜமோஹன் | அன்பின் சிகரம் |

நமது அச்சாபீஸில், சந்தா நேயர்களும் மற்றையோரும் தத்தமக்கு அச்சிட வேண்டிய விஷயங்களை அனுப்பினால், சுத்தமாகவும் விரைவிலும், குறைந்தவளவு செலவில், செய்து கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். அன்பர்கள் கவனிக்கவும்.

கிரவுன் தியேட்டரில் 26-11-38 முதல்

வை.மு.கோதைநாயகி அம்மாளின்

# அனாதைப்பெண்

பி. யு. சின்னப்பா    டி. ஏ. சுந்தராம்பாள்

எம். கே. ராதா

இவர்கள் நடித்ததை

எல்லாரும் கண்டு களிக்க ஆவலுடன் எதிர்பார்ப்பது இதுவே!

---

புக்கிங்களுக்கு எழுதவும்:—

அனாதைப்பெண் :: சந்திரகாந்தா

JUPITER PICTURES LIMITED TIRUPUR

ஜுபிடர் பிக்சர்ஸ்

லிமிடெட்.,

திருப்பூர்

## ராஜாஜி புகழ்ந்தது

நடிப்பின் சிகரத்தை
அடைந்த சிறுமிகள்
தோன்றும்
சமூகப் படம்.

உங்கள் உள்ளத்தை
கொள்ளை கொள்ளும்
இனிய கானம்
நிறைந்தது.

தேசீய உணர்ச்சி ததும்பும் சிறந்த படக்காட்சி

சேலம் மதுவிலக்கு பிரசாரம், திருச்செங்கோடு காந்தி ஆச்ரமத்தில் கைராட்டை சுற்றும் காட்சிகள் முதலியவைகளைக் கண்டு களியுங்கள்.

# விமோசனம்

(தமிழ்ப் பேசும் படம்)

சென்னை சிறுமிகள் சங்கீத வித்யாசாலை
மாணவிகள் நடித்தது

சங்கீத டைரக்ஷன் :
**ஸ்ரீமதி எஸ். ஆர். ரமணி, எல்.டி. (மியூசிக்)**

டைரக்டர் : **மார்க்கோனி**

ஸ்டூடியோ : **ஜயா பிலிம்ஸ் ஸ்டூடியோ**

கதை, வசனம், பாட்டு : " சசி "

---

விவரங்களுக்கு :—

**ஹிந்துஸ்தான் பிலிம்ஸ் லிமிடெட்.,**
**123, பிராட்வே, மதராஸ்.**

தமிழில் இதுவரை வெளிவந்த படங்களில்

முதன்மை வாய்ந்த, முழு ஹாஸ்யப் படம் !

# யூத் லீக் அல்லது வாலிபர் சங்கம்

நடிகர்கள் :

| | |
|---|---|
| மாதிரிமங்கலம் | கோபாலகிருஷ்ணன் |
| நடேசய்யர் | பேபி ருக்மிணி |
| லக்ஷ்மணன் | டி. எஸ். சுபத்ரா |

முதலியோர்

டைரக்ஷன் : ஏ. என். கல்யாணசுந்தரம் எம். ஏ.

தயாரிப்பது : ஸாகர் மூவிடோன் கம்பெனி.

வாலிபர் சங்கம், உங்களது இதயத்தைக் கவரக்கூடிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, வேடிக்கை, சிரிப்பு, சாதுர்யம், ஹாஸ்யம் எல்லாம் நிறைந்தது.

பழைய மூடப் பழக்கங்களின்மீது வாலிபருக்கு ஏற்படும் புரட்சியைப்பற்றிய சமத்காரமான கதை.

தற்கால நிலைமைக்குத் தக்கபடி காதலித்துக் கல்யாணம் செய்து கொள்வதைப் பற்றியது.

## கிரிஸ்மஸ் வாரத்தில்

# சென்னை வெலிங்டன் டாக்கீஸில்

## அகில இந்திய முதல் வெளியீடு

| படம் வேண்டுவோர் :— | பிரதேச உரிமைகளுக்கு :— |
|---|---|
| கபூர்சண்ட் அண்டு கம்பெனி | ஸாகர் மூவிடோன் கம்பெனி |
| சிக்பேட், பங்களூர் ஸிடி | 68, நேபியன்ஸீ ரோட், பம்பாய்.6 |

# கர்ப்பினுல்

(ரிஜிஸ்டர்டு)

ஸ்திரீகளின் கர்ப்ப சம்பந்தமான கோளாறுகளை நிவர்த்தி செய்து, தேகத்திற்கு வலுவை அளிக்கக்கூடிய உயர்ந்த டானிக்.

வைத்தியர்களால் சிபார்சு செய்யப்பட்டது.

32 வேளை மருந்து அடங்கிய மாதிரி புட்டி. ரூ. 2/- முன் பணம் அனுப்பினுல், தபாற்செலவின்றி அனுப்பப் படும்.

இது சம்பந்தமான இனும் புத்தகத்திற்கு எழுதவும்.

## விஜயா பார்மஸி.,

கொச்சி

புதிய பதிப்பு தயார்! உடனே முந்துங்கள் !!

இம்மாதிரி பதிப்பு இதற்குமுன் தமிழில் வெளிவந்ததில்லை!

# "அனுதைப் பெண்"

டாக்கி நாவலின் அழகிய உயரிய பதிப்பு

"அனுதைப் பெண்" டாக்கியிலிருந்து இப்பதிப்பில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு 36 ஆப்டோன் படங்கள் உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனுல், புத்தகத்தின் விலையை மாத்திரம் அதிகரிக்க வில்லை யென்பதை நேயர்கள் கவனிப்பார்களாக!

இந்தப் புஸ்தகம் உங்கள் கைக்குப் பூஷணம்!
மனதுக்கு ஆனந்தம்! யாவர்க்கும் இனியதோர் விருந்து!

விலை ரூ. 1-4-0 தான்.

நாவலைப் படித்துப் படத்தைப் பாருங்கள்

# இதுவரை யாரும் அளிக்காத

# நூதன வெகுமதி

அன்பர்களின் உதவிக்கு நன்றிசெலுத்தல் கடமை யல்லவா ?

16-வதாண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, புதுவருஷ சந்தாவை செலுத்தி, புதிதாக ஒருவரை சந்தாதாரராகச் சேர்த்து அனுப்பும் நமது சந்தா நேயருக்குப் புது விதமான வெகுமதி யளிக்க முன்வந்துள்ளோம். அதாவது :—அங்ஙனம் உதவும் அன்பரின் முழு விலாசத்துடன் 100 தாள்கள் கொண்ட " லெட்டர் பேபர் பாட் " ஒன்றை முற்றிலும் இனமாக அளிப்பதாகத் தீர்மானித்துள்ளோம்.

குறிப்பு :—வேறொரு பக்கத்தில் தெரிவித்துள்ளபடி புதிய சந்தாசேர்த்து அனுப்பி, எட்டணா விலையுள்ள புத்தகத்தை இனமாக அடைந்தால், அவர்களுக்கு ஷை நூதன வெகுமதி கிடையாதென் பதைக் கவனிக்கவும். புத்தகம் அல்லது லெட்டர்பேபர் பாட் இவ் விரண்டில் ஒன்றுதான் இனம்.

---

*

?

* போன்விழா *

?

*

# பணம் அனுப்பும்போது உங்கள் சந்தா நெம்பரை மறக்காமல் எழுதுங்கள்

## புதிய சந்தா நேயர்களுக்கு !

16-வதாண்டுக்குச் சந்தாவைச் செலுத்திய பலர் தங்களுக்கு 15-வது ஆண்டில் வெளியான 3 நாவல்களையும் (வானக்குயில், ஜீவியச்சுழல், மாலதி) சந்தாவிலேக்கே கொடுக்கும்படி கேட்டுக் கொள்வதால், அவர்களின் அவாவைப் பூர்த்தி செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால், வேண்டுவோர் உடனே ரூ **1-8-0** அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

**உளுத்த இதயம், மகிழ்ச்சி உதயம், வத்ஸகுமார்**

இம் மூன்று நாவல்களுக்கும் ஒரு ரூபாய் (தனிவிலை ரூ 1-6) முன்பணம் அனுப்பினால் தபாற்செலவின்றி அனுப்புவோம்.

கற்பனை சித்திரம் !

கர்தல் களஞ்சியம் !

**ம ந் தா கி னி**

காதல், சோகம், உண்மைத் தேசப் பணி, தியாக வாழ்வு முதலியவற்றை நன்கு விளக்கிக் காட்டும் அருமையான நாவல்.

வை. மு. கோதைநாயகி அம்மாள் முன்னுரையுடன்

**விலை அணு 8**

**வத்ஸா கம்பெனி,**
திருவல்லிக்கேணி,
சென்னை.

**திரு. ராகவாசாரியர்**

இயற்றிய நூல்கள்

| | | |
|---|---|---|
| துருவ வெண்பா | 0 | 8 |
| சம்பு ராமாயணம் | 0 | 10 |
| நீதி மஞ்சரி | 0 | 5 |
| திருமால் வெண்பா | 0 | 3 |
| சிவபிரான் துதி | 0 | 4 |
| ராஜ ராஜேச்வரி | (அச்சில்) | |

ரூ. 1—8 முன்பணமனுப்புவோருக்கு 5 புத்தகங்களும் தபாற் செலவின்றி அனுப்பப்படும்.

**ஜகன்மோகினி ஆபீஸ்,**
திருவல்லிக்கேணி,
சென்னை.

ஏழைப் பையனுக்கு அத்தான், தன் கௌரவத்தை விட்டு உபசாரக் கடிதம் ஒன்று எழுதுவதாவது? அம்மாதிரி எழுதினால் அவர்களுக்குத் தலை துள்ளிவிடும். அப்படிப் பார்த்தால் தோட்டக்கார சுப்பனின் மனைவி செத்துவிட்டாளே! அவனுக்கும் ஒரு உபசாரக் கடிதம் எழுதவேண்டியதுதான். வேலையில்லை போயேன். வேண்டுமாயின் பசங்களுக்குப் பிரைவேட் சொல்லிக் கொடுத்த தோஷத்திற்காக லதாவின் கல்யாணப் பத்திரிகையை அவனுக்கு அனுப்புங்கள். அதுபோதும்" என்று ஹிதோபதேசம் செய்தான்.

இம்மாதிரி சொல்லியதையே பிரதானமாக எடுத்துக்கொண்ட லக்ஷ்மண பிரஸாத் "ஆமாம்; வாஸ்தவந்தான். நம்ம அந்தஸ்து எங்கே! அவன் அந்தஸ்து எங்கே? எதுவும் வரம்பு மீறி, செய்யக் கூடாது. ராமு சொல்வது சரிதான்" என்று முடிவு கட்டிவிட்டார். பிறகு யார் என்ன பேச முடியும்? மாமன்மீது லதாவுக்கு அடக்கமுடியாத கோபம் வந்தது. என்ன செய்வாள் பாவம்! வரம்புமீறி ஒன்றும் செய்ய மனம் இடங் கொடுக்காதே!

லக்ஷ்மண பிரஸாத் உத்ஸாகத்துடன், "ராமு! சமயத்திற்குத்தான் நீ வந்து சேர்ந்தாய். ரொம்ப சந்தோஷமாயிற்று. இன்று மாலை ஆறு மணிக்கு சம்பந்தி வீட்டார் நிச்சயதார்த்தம் செய்ய வருகிறதாக இப்போதுதான் தந்தி வந்தது. அதற்கான ஏற்பாடுகளை உடனே செய்துவிடு. நான் மற்ற காரியங்களைக் கவனிக்கிறேன். என்ன லதா! உன்பாடு கொண்டாட்டந்தான். பேஷான கணவன் கிடைத்துவிட்டான். மூன்று லக்ஷ ரூபாய்க்கு ஸ்திதி எறைச்சலிடுகிறது. பிள்ளையாண்டானுக்கு 22 வயதுதான் ஆகிறது. சர்வ கலாசாலை பட்டங்கள் இல்லாவிட்டால் குடி முழுகி விடவில்லை. சாதாரணமாக 10 கிளாஸ் வரையில் படித்திருக்கிறான். ஊரோடு கண்ணியமாய் இருப்பவர்கள். உன் அதிர்ஷ்டந்தான் சட்புட் என்று முடிந்துவிட்டது" என்று தகப்பனார் சொல்வதைக் கேட்கும்போதே லதாவின் வயிற்றில் புளி கரைத்தது போலாய் விட்டது.

"எனக்கு ஒரு விவரமும் தெரிவிக்காமல், இத்தனை ரகசியமாய் சீக்கிரத்தில் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்து நிச்சயதார்த்தம் நடக்கும் வரையில் வந்துவிட்டதா! ஆ! இனிமேல் என்ன இருக்கிறது. மாதவா! மாதவா! நீ என் இதயக் கோவிலில் வீற்றிருக்கும் பாக்கியத்தைத் தவிர வேறொன்றும் யான் பெறவில்லை" என்று நினைக்கும்போது அவளை அறியாது துக்கம் பொங்கிவிட்டது. சரேலென்று அங்கிருந்து எழுந்து போய்விட்டாள்.

# 12

மாதவன் எத்தனைதான் மனத்தைத் தேற்றிக்கொண்டாலும் சாந்தி பெறும் வகையுமில்லை. எத்தனை வழியில் யோசனை செய்தாலும் தனக்கு பணம் கிடைக்கும் மார்க்கமும் தோன்றவில்லை. என்ன செய்வதென்று யோசித்துக் குழம்பிப் போய்விட்டான். தன் பிதாவுக்கும் தனக்கும் இத்தனை ஒற்றுமையில்லாதிருப்பினும், தன் கடமையைச் செய்யும் பொருட்டு ஒரு கடிதம் எழுதினான்.

அதற்கு அவன் பிதா சற்றும் தாக்ஷிண்யமோ, அறிவோ இல்லாமல் கண்டிப்பாயும், வெடுக்கென்ற முறையிலும் "உன் தாயார் மரணத்தறுவாயில் 'மாதவா! உன் உடன்பிறந்தோர்களை நீ பிச்சைஎடுத்தாவது காப்பாற்று. கைவிடாதே; எந்தவிதமான தியாகத்தையும் செய்து நல்ல பெயருடன் குடும்பத்தைத் தாங்கு. உன் தந்தையின் மாதிரிதான் உனக்குத் தெரியுமே. உன் தலைமீதுள்ள சுமையை நீயே இறக்கியாகவேண்டும் காப்பாற்று" என்று ஹிதோபதேசம் செய்ததை நீ மறந்துவிட்டாயா? உன் தாயாரின் சொல்படியே பிச்சை எடுத்தாவது, தங்கைகளின் மானத்தைக் காப்பாற்று. என்னை வீணுகத் தொந்திரவு செய்யவேண்டாம். உன்னை விற்றாவது உன் உடன்பிறந்தோரைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிற வீரன் அல்லவா நீ!" என்று கையும் மெய்யும் துணிந்து எழுதிவிட்டார்.

அந்தோ! இத்தனை குழந்தைகளைப் பெற்ற பாவி இம்மாதிரி எழுதியதைப் படித்த உத்தமனான மாதவனின் மனம் எப்படித்தான் பதறி இருக்கும்? கொதித்த மனத்துடன் ஆர அமர யோசனை செய்தான். அவனுக்கு இருக்கும் ஆத்திரத்தில் தன் தகப்பனாரின் கண்முன்பு, அவரிடமிருந்து ஒரு துரும்பும் சகாயம்பெறாது தானே இருவருக்கும் கல்யாணத்தை நடத்திக் காட்டி ஜெயிக்க வேண்டுமென்ற ரோஷமும், பிடிவாதமான எண்ணமும் உதித்து விட்டன.

பேத்திப் பாட்டியின் யோசனையும், தொணதொணப்பும் ஒரு புறம் செல்லெரிப்பதுபோல் அவனை அரிக்கின்றது. பத்திரிகைக்குச் சித்திரம் எழுதுவதில் மாதம் பத்து, பதினைந்து, இருபது என்று வந்தால் அது குடும்பச் செலவிற்கே போதவில்லை. ஆகையால், அவன் எந்த வழியாவது செய்துதான் தீரவேண்டுமென்று குழப்பத்துடன் முடிவு கட்டியவாறு படுத்திருக்கையில், பெத்திப் பாட்டி அங்குப் பிரஸன்னமானாள்.

"ஏண்டாப்பா! மாதவா! நான் பின்னும் ஒருதரம் சொன்னால் கிழத்தொணப்பு என்கிறாய்! நெருப்பை மடியில் கட்டிக்கொண்டிருப்பதுபோல், எத்தனை நாளைக்கு இந்தப் பெண்களை நான் கட்டிக் காப்பேன். இதோ பாரு! மாதவா! உன் அழகுக்கும், உன் படிப்புக்கும், உன் குணத்திற்கும், கட்டாயம் பெரிய வரதக்ஷிணையுடன் பெண் கொடுக்கக் காத்திருக்கிறார்கள் என்று இப்போதுதான் கல்யாண மாமா வந்து சொன்னான். அதை நிச்சயம் செய்துவிட்டால் கவலையே இல்லை; என்ன சொல்கிறாய்?" என்று கேட்டாள்.

மாதவன் :—பாட்டி! என் விதி என்னை எப்படி எப்படி ஆட்டுகிறதோ அம்மாதிரி எல்லாம் நான் ஆடித்தானே தீரவேண்டும். ஒரு தம்பிடி ஜீவேஜிக்கு வழி இல்லாமலும், ஸ்திரமான சம்பாத்தியம் இல்லாமலும், பெரிய குடும்பத்தை மட்டும் ரக்ஷிக்கும் நிலைமையில் இருக்கும் எனக்குப் பெண் கொடுப்பதாயும், வரதக்ஷிணையும் கூடக் கொடுப்பதாயும் சொல்லும்போது அதிலுள்ள ரகசியம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்துதான் இருக்கிறது. பெண்ணுக்கு ஏதாவதொரு ஊனமில்லாவிடில், இத்தனை வரதக்ஷிணையும், ரெட்டைச் சீரும் செய்யும் சக்தி இருப்பவர்கள் பெரிய பணக்கார மாப்பிள்ளையைத் தேடாதிருப்பார்களா?

பாட்டி :—ஏண்டாப்பா! நம்ப சமயத்துக்கும் காலத்துக்கும் தகுந்தாப்போலத்தானேடாப்பா எல்லாத்தையும் கவனிக்கணும். நீ இப்போ ஒரு வார்த்தை சொன்னா போதும். கல்யாண மாமா அதை முடித்து வைத்துவிடுவான்; என்ன சொல்கிறாய்?--என்றாள்.

மாதவனின் மனம் படும் சங்கடத்தைக் கூறத் திறமா? தான் கல்யாணம் செய்து கொள்ளாது பிரம்மச்சாரியாக இருந்தாலும் அவனுக்கு மிக்க சந்தோஷமாயும், கவலையற்றதன்மையாயும் இருக்கும். தன் லதாவை மறக்கமுடியாது தவிப்பதோடு, இன்னொரு பெண்ணையும் தான் மணப்பதென்றால், அது லேசானதா? என்ன செய்வது? அவன் மனத்தை அவனாலேயே சமாதானம் செய்யமுடியாது தத்தளித்தான். மாத்ரு வாக்கைப் பரிபாலிக்கும் பொருட்டும், தன் கடமைகளைச் செய்யும் பொருட்டும் தான் எந்த விதமான தியாகத்தை வேண்டுமாயினும் செய்து தீரவேண்டியது தான் தனது முதல் கடமையாகும்; அதோடு தகப்பனாருக்கும் ஒரு புத்தி கற்பிக்கவேண்டும் என்ற ரோஷமும் கூட உதித்ததால் போராடும் அவனுடைய இதயத்திற்கு விரோதமாகவே, 'சரி' என்று ஒப்புக்கொண்டு, தலையாட்டிவிட்டான். அம்மாதிரி ஒப்புக்கொண்ட சமயம் தன்னைத்தான் கொலை செய்துகொள்வதாக அவனுக்குத் தோன்றியதேயன்றி, கல்யாணமாகத் தோன்றவே இல்லை.

பாட்டி மிகுந்த சந்தோஷத்துடன் "ஏண்டாப்பா! பெண்ணை நீ பார்க்க வேண்டாமா? அவா வீட்டுக்குப் போகலாமா?" என்றாள். மாதவன் சலிப்புற்ற குரலில், "பாட்டீ! நீ பார்த்து முடிவு கட்டிவிட்டால், அதுபோதும். இன்னும் நான் பார்ப்பதற்கு என்ன இருக்கிறது? அதொன்றும் வேண்டாம். தாலி கட்டும் சமயம் மட்டுந்தான் நான் வருவேன். மற்றவைகளை நீயே முடித்துவிடு" என்று கூறிவிட்டான். அவன் மனமும் அதோடு உடைந்துபோய்விட்டது.

## 13

நல்லதாயினும் நாலுபேர்கள் கொண்டாடுகிறார்கள். கெட்டதாயினும் அதே வாயால் திட்டித் தூற்றுகிறார்கள். எல்லோரும் வியக்கும்படிக்குப் பெரிய தியாகத்தைச் செய்தால், அதையும் ஜனங்கள் பல விதமான உதாரணங்களுடன் சந்தோஷப்பட்டும், பாராட்டியும் பேசுவார்கள்.

அதுபோல் அவ்வூரிலுள்ள அத்தனை ஜனங்களும் மாதவன் உடன்பிறந்தாரிடம் அபாரமான அணைகடந்த அன்பு கொண்டு செய்த பெரிய தியாகத்தைப் பாராட்டியும், அவனது தந்தையை நிந்தித்தும், தூஷித்தும், திட்டாமலும் சும்மா இல்லை. அன்னிய மனிதனைப் போல் விவாகத்தன்று காலையில் இளைய மனைவியுடன் 'ஜம்' என்று வந்திறங்கிய மனிதனை, யார்தான் தந்தை என்று கூற முடியும்.

மாதவனின் மனம் கலங்கித் தவிக்கும் தவிப்பை இன்னும் கிளறி விடுவதுபோல் லதாவின் கல்யாணக் கடிதமும் இவனுக்குக் கிடைத்துவிட்டது. அந்தோ! இரண்டு பேருடைய அன்பின் சிதைவும், காதலின் முறிவும், ஒரே நாளில்,—ஒரே லக்கினத்தில் ஒரே வேளையில்—முடிவுபெற வேண்டுமென்ற தலைவிதியை எண்ணி எண்ணி மாதவன் ஏங்குவதேபோல், மாதவனின் கல்யாண மென்பதை அறிவிக்கா திருந்துவிட்டதால், லதா அந்த முறையில் தவிக்காது, "என் விவாகத்திற்குக்கூட மாதவன் இந்தச் சாக்கை வைத்துக்கொண்டு பார்க்க வரவில்லையே! இனி, எப்போது அந்த உத்தம வீரசிகாமணியைக் காண்பேன்?" என்று விசனித்துத் துடிக்கிறாள்.

மாதவன், மனம் அனலிடையிட்ட மெழுகுபோல் உருகி, கண்ணீர் பெருகித் தவித்தவாறு, கல்யாண மணையில் உட்கார்ந்திருக்கிறான். மெஷின்போல் நடந்து, தாலியைக் கட்டினான். "அந்தோ! இதே காரியத்தை என் கண்மணி லதாவுக்கு நான் செய்யும் பாக்கியம் பெற்றிருந்தால், என் மனமும் என் லதாவின் மனமும் எத்தனை சந்தோஷத்தை யடையும்? எத்தனை ஆனந்தத்தை யடையும்" என்று நினைக்கும்போது, அவனை மீறிய துக்கம் பொங்கிவிட்டதால், அப்படியே சுருண்டுபோய் துவண்டு விழுந்துவிட்டான்.

இந்த விசனத்தைக் கண்ட எல்லோரும் அவன் தாயாரை எண்ணிக் கலங்குவதாக நினைத்து அவனோடு தாமும் சேர்ந்துகொண்டு கண்ணைத் துடைக்கவும் மூக்கைச் சிந்தவும், உபசார வார்த்தைகள் சொல்லவும் ஆரம்பித்தார்கள். "லதாவுக்கென்று நான் எழுதிய அந்த அன்பின் சித்திரங்கூட என் வசமில்லாது விற்றுத் தின்னும் படியான தலைவிதி வந்து விட்டதே! அதாவது என்னிடமிருந்திருந்தால், நான் இந்தச் சமயத்தில் என் ஞாபகமாகக் கொடுத்திருப்பேனே! அதற்கும் பாக்கியம் செய்யாத மகா பாவியாகி விட்டேனே!" என்று தனக்குள் குமுறுகிறான்.

எல்லாக் காரியமும் முடிந்த பின்னர் இனி எதைச் சொல்லித்தான், எண்ணித்தான் என்ன உபயோகம்? காரியமெல்லாம் முடிந்தது. தந்தியைக் கண்டு இங்கு வந்த பிறகு மாதவன் அவர்களில் யாரையும் பார்க்கவே யில்லை. சங்கிலியின் பெருங் கிலி ஒன்று குறுக்கே இருப்பதால், அவன் கடிதம் எழுதக்கூடப் பயந்து வாளாவிருந்து விட்டான். தங்கைகளை விவாகமான உடனே அவர்கள் புக்ககத்திற்கு அழைத்துக்கொண்டுபோய்விட்டார்கள். தங்கைகளைப் பிரியும்போது மாதவனின் கண்களில் ஜலம் கொட்டிவிட்டது. தன் தாயார் இருந்து செய்யவேண்டிய காரியத்தைத் தான் செய்யும்படியாகிவிட்டதே என்று துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

நல்ல புத்திமதிகளைப் போதித்து மாமியார் வீட்டில் சமத்தாயும், புத்திசாலித்தனமாயும், சோம்பலில்லாத உழைப்புக் குணத்துடனும், பணிவாய் நடக்கும்படியும், புருஷனுக்கு மனங் கோணாது நடக்கும்படியும் தாயைப்போல், தானே அவர்களுக்குப் புத்தி சொல்லியனுப்பினான்.

போகும் பிசாசு சும்மா போகாது என்பார்கள். அதுபோல் மாதவனின் பிதா அன்னியரைப்போல் கல்யாணத்திற்கு வந்துவிட்டுப் போகும்போது கல்யாணத்திற்கு வாங்கிய சாமான்களில்

மிகுதியுள்ளதை இங்கிருக்கும் நிலைமையை அறவே மறந்து வாரி மூட்டை கட்டிக்கொண்டு போய் விட்ட ரகசியத்தை பிறகே மாதவன் அறிந்தான். காரியம் மிஞ்சிப்போய்விட்ட பிறகு அறிந்தென்ன பயன், அறியாதென்ன பயன்? எல்லா விதியுடன் இதுவும் ஒரு அற்ப புத்தி; அப்பன் செய்யும் கொடுமையின் விதி என்று தேறினன். மாதவன் 'தன் மனைவி எப்படி இருப்பாள் கருப்பா, சிகப்பா!' என்று கூட அவள் முகத்தைப் பார்த்தவன் அன்று. விவாகமாகிய மறுதினமே அவன் தன் வீட்டுக்குப் போய்விட்டான்.

மாதவன் வேலைக்காக பல இடங்களில் அப்ளிகேஷன் போட்டிருந்ததில் ஒரு சித்திரப்பட ஸ்டுடியோவிலிருந்து, மாதம் 40 ரூபாய் சம்பளத்தில் முதலில் சில மாதம் வேலை செய்தால், பிறகு சம்பளம் உயர்த்துவதாகவும் உடனே வந்து சார்ஜ் ஒப்புக்கொள்ளும்படியும் கடிதம் வந்தது. அதைக் கண்டதும் மாதவனின் அத்தனை துக்கத்திலும் ஏதோ ஒரு ஜோதி பளிச்சென்று உதயமாகியது போன்ற சந்தோஷம் உண்டாகியது.

உடனே மாதவன் பட்டணத்திலேயே இடத்தைப் பார்த்துக் கொண்டுபோய்விடத் தீர்மானித்தான். ஆனல், பெத்திப் பாட்டி பட்டணவாஸத்தில், பறத்தீட்டு அதிகமென்றும், ஆசாரக் குறைவு என்றும், அதனல் தான் வரமுடியாது என்றும் பெண்டாட்டியுடன் போகும்படியும் கூறிவிட்டாள். அதற்குமேல் அவன் என்ன செய்யமுடியும்? உரலுக்குள் தலையை விட்ட பிறகு உலக்கை விழப் போகிறதே என்று பயப்பட முடியுமா? அதே நிலைமை மாதவனுக்கும் உண்டாகியது.

மனைவியைக் கொண்டு விடும்படி மாமனருக்குக் கடிதம் எழுதி வரவழைத்துக்கொண்டு, உடனே அவ்வூர் குடித்தனத்தையே எடுத்துவிட்டு, பட்டணத்திலே ஒரு வீடு வாடகைக்கு ஒருசிநேகிதன் மூலம் அமர்த்திக்கொண்டு புறப்பட்டுவிட்டான்.

மாதவனுடைய மனைவியின் குணத்தைப் போன்ற அழகு ஒருவருக்குமே இல்லை என்று அவ்வூர் ஜனங்களே கொண்டாடுவார்கள். அவள் பிதா லக்ஷாதிபதி இல்லை எனினும், திரண்ட செல்வமும், செல்வாக்கும், சந்தானமும் பெற்ற பெரிய குடும்பி. அழகுக் குடும்பம் என்று அவர் குடும்பத்தை ஊரார் சொல்வது வழக்கம். அவருக்கு 5 பெண்கள். அவர்களின் அழகுக்காக முறையே தேவ கன்னிகைகளின் பெயர்களாகிய ரம்பை, ஊர்வசி, திலோத்தமா, மேனகா, சகுந்தலா என்பன போன்ற அழகிய பெயர்களையே இட்டு வந்தார்கள்.

திலோத்தமா மூன்றாவது பெண். அவளே மாதவனின் தர்ம பத்தினியாக அமைந்தவள். இச் சிறுமிகளும் அண்டை அயல் வீட்டுச் சிறுமிகளும் ஆதியில் தீபாவளிப் பண்டிகையின்போது பட்டாசு, பாணம் முதலியன வெடித்து விளையாடுகையில், திடீரென ஏற்பட்ட விபத்தின் விளைவாக ஆனை வெடியின் சப்தம், திலோத்தமாவின் இரு செவிகளையும் கொண்டு போய்விட்டதோடு, தீப்பிடித்துக்கொண்டு முகத்திலும், கைகளிலும் விபரீதமான ரணம் ஏற்பட்டுவிட்டது.

அந்த கண்டத்தில் இறந்திருக்கவேண்டிய திலோத்தமா தப்பித்தவறி வெகு மாதங்கள் கழித்துப் பிழைத்தாள். அதே விபத்தில் சிக்கிய அவளுடைய தங்கை மேனகா உயிரை நீத்தாள். திலோத்தமா பிழைத்தாள் என்கிற சந்தோஷம் அவள் பெற்றோர் களுக்கு ஒரு சிறிது இருந்தபோதிலும் அவளுடைய அழகும், மனிதர்களுக்கு முக்கியமான அவயவங்களில் ஒன்றான செவிகளின் உணர்ச்சியும் அந்தப் பயங்கர விபத்திற்குப் பலியாகப் போய்விட்ட விசனம் தாங்கவே முடியாது போய்விட்டது.

பெற்றவர்களுக்கே அவளுடைய தோற்றம் மிகவும் விகாரப் பட்டுப் போய்விட்டதென்றால், வேறு கூறவேண்டுமா? திலோத்தமாவின் அழகு குன்றி, காதும் செவிடாகிய பிறகு அவளே "நாம் என் பிழைத்தோம்" என்று வருத்தப்பட ஆரம்பித்தாள். இனி, என்ன அழுதும் என்ன பலன்? எத்தகையோருக்கும் முடி போட்டுப் பிணைத்து வைக்க ஈசனும், உலகில் ஈசன் வகுத்ததே போன்று ஏற்பட்டுள்ள கல்யாணத் தரகர்களும் காத்திருக்கையில் என்ன குறைவு?

"என்னைப் பார்த்தால் என் கணவன் என்ன நினைப்பானோ? அவனது ஆனந்தமான குரலைக் கேட்கும் பாக்கியமும் பெறாத பாவி யாகி விட்டேனே!"—என்று சதா ஏங்கும் திலோத்தமாவுக்கு, கணவனின் மன்மதாகாரமான வடிவழகைக் காணக் காண அவள் துக்கம் அதிகரித்ததே யன்றிக் குறையவில்லை. வாயைத் திறக்காது பதுமையைப் போல் அவனுடனும், குழந்தைகளுடனும் பிரயாணமானாள்.

மாதவன் குடும்பத்துடன் ஊராரிடம் சொல்லிக்கொண்டு ஊருக்குப் புறப்படும்போது, அவன் மனம் பட்ட வேதனையும் தாயின் பிரிவு அன்றுதான் ஏற்பட்டதுபோன்ற உணர்ச்சியும்சகிக்க முடியாது அணைகடந்துவிட்டது. தாயின் மரணத்தன்று இருந்த துக்கத்தைவிட அன்றே அதிகரித்துவிட்டது. எத்தனை புலம்பினால்தான் என்ன, தன் தாயார் இனி தன்னுடன் வரப்போகி

றாளா? அந்தப் பாக்கியம் என்றோ எரிந்து போய்விட்டதல்லவா?

மாதவன், தன் மனைவி குரூபி என்று மட்டும் எண்ணி இருந்தான். இப்போதுதான் அந்தப் பெண்ணின் காதில் டமாரம் அடித்தாலும் கேட்காது; அதிர்வெடி போட்டாலும் கேட்காது என்று தெரிந்துகொண்டதும் ஒருபுறம் சகிக்க வியலாத சங்கடமும் மறுபுறம் தாங்கமுடியாத சந்தோஷமும் உண்டாகியது. தான் எந்தக் காரணத்தைக் கொண்டும் அவளோடு பேசவில்லையே என்று அவள் குறைப் படமாட்டாள். தான் புலம்புவதும் அவள் செவியில் படாது. இதுவே அவனுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்ததற்குக் காரணமாயிற்று.

அவளுடன் வாயே திறக்கவில்லை. மூட்டை முடிச்சுகளுடன் புறப்பட்டு ரயிலிலும் ஏறிவிட்டான். முன்பு தந்தியைக் கண்டு ரயிலில் வந்த உணர்ச்சியையும், பிறகு ஊருக்குச்சென்று வந்த உணர்ச்சியையும், இப்போது செல்லும் உணர்ச்சியையும் அதே ரயிலில் உட்கார்ந்துகாண்டு மாறி மாறி எண்ணமிட்டவனாய்ச் செல்லத் தொடங்கினான்.

## 14

பெரிய பணக்காரருடைய மகளுக்குக் கல்யாணமென்றால், பரிசுக்குக் கேட்க வேண்டுமா? வெள்ளியும், தங்கமும் ஸில்கும் ஏராளமாகக் குவிந்ததோடு தற்கால நவ நாகரிகத்திற்கு ஏற்றதுபோல், சிலர் கிராமபோன் பெட்டி, சிலர் பிளேட்டுகள், சிலர் அழகிய பொம்மைகள், சிலர் மேஜை விரிப்புகள், சிலர் நிலைக்கண்ணாடி, சிலர் மின்சார மேஜை விளக்குகள், சிலர் வெள்ளி பிரேம் போட்ட படங்கள், சிலர் போட்டோ காமிரா, புஷ்பத்தொட்டிகள் இம்மாதிரி பல விதமான பரிசுகள் லதாவுக்கு வந்தன.

அவைகள் ஒன்றும் அவள் மனத்தைக் கவரவில்லை. ஓர் பெரிய பிரபு வெள்ளி ப்ரேம் போட்டு ஓர் அழகிய சித்திரத்தைப் பரிசாகக் கொடுத்தபோது அவள் தேகமே ஒரு துள்ளு துள்ளியது. "இப் படம் எனக்கென்று மாதவனால் எழுதப்பட்ட அதே படம். இப் பிரபுவினிடம் எப்படி இந்தப் படம் கிடைத்தது! இதென்ன வேடிக்கையாயிருக்கிறதே! ஒருவேளை மாதவனே இதை மறை

முகமாக இவரிடம் கொடுத்து, எனக்கு அளிக்கும்படிக்குச் செய்திருப்பாரா! இதெல்லாம் ஏதோ பெரிய மர்மமா யிருக்கிறதே! இதை யாரிடம் கேட்டு அறிய முடியும்?" என்று பெருத்த குழப்பமும் யோசனையும் அவளுக்கு உண்டாகிவிட்டன.

தன்னுடைய பரிசுகளை எல்லாம் எடுத்து வைக்கையில், அந்தப் படத்தைத்தான் அவள் கண் கொட்டாமலும், ஆனந்தமும் துக்கமும் கலந்த உணர்ச்சியுடனும் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கலங்கினாள். அதைப் பார்க்கப் பார்க்க ஆதிகாலத்துக் கதை முற்றும் அவள் கண்முன்பு காட்சி கொடுத்து, அவளைப் பின்னும் வதைக்கவாரம்பித்தது. மாதவனின் உருவமே அப் படத்தில் முழுவதும் தெரிவதுபோன்றதோற்றம் உண்டாகிய தாகையால் அவளுடைய மனோவெழுச்சி உச்ச ஸ்தாயியை எட்டிவிட்டது.

வீடோ, கல்யாணவீடு; சமயமோ, பலரும் கூடியிருக்கும் சமயம். ஆகையினால் தன்னை யார் கண்டு என்ன எண்ணி விடுவார்களோ என்ற கவலையுடன் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, அதை மட்டும் தன் பெட்டிக்குள் வைத்துப் பூட்டி விட்டாள். அதுவே தன் ஆருயிர் மாதவனின் காதல் பரிசு என்று அவள் கருதினாள்.

விவாகமாகி சில நாட்களாகிவிட்டன. அவளும் தன் புக்ககம் போகவேண்டிய சமயம் வந்துவிட்டது. தங்களுடைய புருஷருடன் தனிமையில் கல்யாணமான மறுதினமே புறப்படும் தைரியமும், பழக்கமும் இக்காலத்துப் பெண்களுக்குக் கேட்கவேண்டுமா? முற்காலத்தைப்போலவா மாமியார் வீட்டுக்குப் பெண் போகிறாள் என்றால் ஒரே அழுகை; அமர்க்களம்; பெற்ற தாய் தகப்பன் முதல் மூக்கைச் சிந்துவார்களேயானால், பெண்ணைப்பற்றிக் கூற வேண்டுமா? ரயிலின் விம்மலுக்குச் சரியாக அந்தப் பெண்ணின் விம்மலும், அழுகையும் போட்டியிடும். இதையோர் வேடிக்கையாகப் பலரும் பார்ப்பார்கள்.

அக் காலம் இப்போது மலையேறிவிட்டதல்லவா? கல்கத்தா, கராச்சி, டில்லி, ஸிம்லா, மலேயா முதலிய எந்த இடமாயினும் தயாராகப் பெண்கள் கிளம்பும் இக் காலத்தில் லதா மட்டும் விதிக்கு விலக்கானவள் என்று காட்டிக்கொள்ள முடியுமா? அவளுடைய அந்தரங்கத்தில் பலமான பாறையொன்று இதயத்தை அழுத்திய போதிலும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், வெகு சாமர்த்தியமாய் நடந்துகொண்டு கிளம்பிவிட்டாள். உள்ளுக்குள் செய்யும் வேதனையை அந்த பரமாத்மாதான் அறிவார்.

தாயும் தகப்பனும் வழி அனுப்பினார்கள். தம்பதிகள் மட்டும் வெகு உத்ஸாகத்துடன் கிளம்பியதுபோலவே பிறர் கண்களுக்குத்

தோன்றினர். கல்யாணப் பிள்ளை அதிக படிப்பில்லாத பேர்வழியே அன்றி, பார்ப்பதற்கு ஷோக் செய்து கொள்வதில் குறைந்தவனன்று. நாட்டுப்புறவாஸியாயினும் தலை கிராப்பும், புல் ஸூட்டும், வாயில் ஸிகரெட்டும் ஆடம்பரமாக இருந்தன. கண்ணுக்கும் அழகாகத்தான் இருந்தான். ஆதலால், லதாவுக்குச் சரியான ஜோடி என்று கூறாமல் பொது ஜனங்கள் என்ன நினைப்பார்கள்?

இரண்டாவது வகுப்பு டிக்கட்டுகள் இரண்டு வாங்கி, முன்பே ரிஸர்வ் செய்திருந்தார்கள். ஸ்டேஷனில் வண்டி வந்து நின்றதும் தாறுமாறாக ஜனங்கள் கூச்சலிட்டுக்கொண்டும் மூட்டை முடிச்சுகள் குழந்தைகள் முதலியவற்றைத் தூக்கிக்கொண்டும் ரயிலில் ஏறப்போட்டியிடுவதும், இறங்குகிறவர்களுக்குக் கூட வழி விடாது சண்டையும் சச்சரவுமாகிய தடபுடல் இருந்தது.

இரண்டாவது வகுப்பு வண்டியில் லதாவும் அவள் கணவனும் ஏறுவதற்காக வண்டி அருகில் வருகிறார்கள். அதற்கு அடுத்த மூன்றாவது வகுப்பு வண்டியிலிருந்து மாதவனும் அவன் புதிய மனைவியும் இறங்குகிறார்கள். அவன் இறங்குவதற்கும் லதா வண்டியில் ஏறுவதற்கும் ஒரே நேரமாய் அமைந்ததால், சடக்கென்று லதா, மாதவனைப் பார்த்துத் தடைகட்டிய நாகம்போல், பிரமித்துப்போய் "மாமா! மாதவனு!" என்று வாய்க்குள் சொல்லிக் கொண்டாள்.

அதே சமயம் வண்டியிலிருந்து குழந்தைகளையும் மூட்டைகளையும் இறக்கிக்கொண்டிருந்த மாதவனும் மின்னல் கொடி போன்ற லதாவின் பிம்பத்தைக் கண்டு விட்டதும் கையிலிருந்த சாமான் நழுவிக் கீழே விழுவதும் தெரியாது திகைப்பூண்டை மிதித்தவன்போல் "லதா! என் இதய ராணியா! என் ஆத்ம தேவதையா!" என்று எண்ணியவாறு சிலைபோல் நின்றுவிட்டான்.

லதா பிரமித்து நின்றதை அவள் புருஷன் முதலில் கவனிக்கவில்லை. மாதவனின் மனைவி திலோத்தமா கவனித்துவிட்டாள். "இத்தகைய ரூப சுந்தரியும் உலகிலிருக்கிறாளா?" என்று வியப்புக் கடலில் மூழ்கியபடியே, அவள் தன் புருஷனை அத்தனை ஆவலாகப் பார்ப்பானேன் என்கிற ஓர் எண்ணமும் உண்டாகியது. லதாவின் புருஷன் "உம். ஏறு; வண்டியில் ஏறு" என்று லதாவின் பின்புறத்திலிருந்து கூறியதால், லதாவின் முகத்தையும் அவள் கண்களில் ததும்பும் நீரையும் முதலில் கவனிக்க முடியவில்லை.

'ஏறு' என்று தன் கணவன் சொல்லிய பிறகே லதா சடக்கென்று ஏறிக்கொண்டு ஜன்னலால் மாதவனைப் பார்த்தாள். அவள் தான் மாதவனை அடையவில்லையே என்ற பெருந் துயரத்தைவிட

மாதவனுக்குப் பக்கத்திலிருக்கும் அவன் மனைவியைக் கண்டதும் அவள் நிற்கும் மாதிரியிலிருந்து அவனுக்கும் விவாகமாகிவிட்ட தென்று அறிந்து கொண்டு, "அந்தக் கோர ஸ்வரூபமா, அழகை யெல்லாம் தன் மூளையினால் கடைந்து திரட்டி உருவமாக எடுக்கும் ஓர் சித்திரக்காரனுக்குக் கிடைத்தது. அந்தோ! அவர் மேனி எப்படித்தான் இளைத்துவிட்டது. உம்....விதியே! விதியே! உன் தாண்டவ லீலையின் சக்திதான் என்னே?" என்று தனக்குள் தாங்கமாட்டாது எண்ணமிட்டுத் தவித்தபடியே உட்கார்ந்தாள்.

இருவரும் இரு புது ஜோடிகளாக இருக்கையில், யார்தான் என்ன பேசமுடியும்? புதிய கல்யாண மாப்பிள்ளையாகையால் அவன் என்ன நினைப்பானோ என்ற பயம் இருவருக்கும் போராடு கிறது. மாதவனின் கண்ணீரை அவனால் அடக்கி அடக்கிப் பார்த்தும் அடங்கும் வழியாக இல்லாது நிரம்பிவிட்டது.

"ஒரு வேளை நம் புருஷருக்கும் இந்தப் பெண்ணுக்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமோ அதனால் இருவர் நெஞ்சும் இத்தகைய பாடு படுகிறதோ? ஐயோ! இவர்கள் ஜோடி சேர்ந்திருந்தால், எத்தனை பொருத்தமாயும் சந்தோஷமாயும் இருக்கும்? ஒருவேளை இந்த அழகியை இவர் நேசித்திருப்பது உண்மையாயின், மகா கோர ஸ்வ ரூபியும், அதோடு செவிடியுமான என்னை நிமிர்ந்து பார்க்கவும் இவர் மனம் சம்மதிக்குமோ? அந்தோ! இவருடைய வறுமை யன்றோ இம்மாதிரி ஒவ்வாத காரியத்தை முடித்து வைத்தது" என்று திலோத்தமா தன் கணவனுக்காக எண்ணி விசனித்ததில் கண்ணீர் முட்டிவிட்டது. தன் கணவன் பிரமித்து நிற்பதை யறிந்து தானே மூட்டைகளையும் சாமான்களையும் கீழே இறக்கி வைத்துவிட்டு, குழந்தைகளைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

லதாவின் புருஷனும் அகஸ்மாத்தாக, லதாவை மாதவன் பார்ப்பதையும், திலோத்தமா பார்ப்பதையும் கவனித்து விட்டான். மாதவன், தான் அதிக நேரம் பார்த்தால் அவள் புருஷன் என்ன நினைப்பானோ! தன்னால் வீண் கஷ்டம் லதாவுக்கு இருக்கக்கூடா தென்ற நோக்கத்துடன் இதய சாகரத்திலிருந்து பொங்கி வரும் அணைகடந்த அன்பு வெள்ளத்தை வெகு பிரயாசையுடன் சமா ளித்துக்கொண்டு, தலையைக் குனிந்துவிட்டான்.

லதாவின் புருஷனுடைய கண்கள் சிவக்க வாரம்பித்தன. லதா வும் தலை குனிந்துகொண்டு வெளித் தோற்றத்தைப் பார்ப்பது போல் பார்த்துக்கொண்டே இருந்தாள். இதற்குள் 5 நிமிடங்க ளாகி விட்டன. வண்டியும் ஊதிக்கொண்டு கிளம்பிவிட்டது. இந்த ரயில் கிளம்பியதானது மாதவனின் உயிரை அப்படியே உறிஞ் சிக்கொண்டு போவதுபோல் தோன்றியது. லதாவுக்கோ, எமனே

தன்னைத் தூக்கிக்கொண்டு போவதுபோல் தோன்றியது. ஊர். "இனி எப்போ காண்பேனோ என் அருமைக் கனியை?" என்று இருவரும் எண்ணி விட்ட பெருமூச்சானது ரயிலின் 'பும்' என்ற பெரு மூச்சையும் எதிர்த்து நின்றது.

தலை மறையும் வரையில் பிளாட்பாரத்தை விட்டுப்போகும் நினைவே மறந்த மாதவன் ரயில் கண்ணுக்கு மறைந்த உடனே திக்பிரமை கொண்டவன்போல் நின்று விட்டான். காதலர்களின் கனிந்த இதயத்தின் துடிப்பைப் பிறர் எடுத்துக் கூற முடியுமா? நால்வரின் உணர்ச்சிகளும் நாலு வகைகளில் போராடின.

## 15

புதுக் குடித்தனத்தில் சுவையோ, ஸாரமோ, ஜீவனோ ஏதாவது இருப்பதாக மாதவனுக்குத் தோன்றின லன்றோ? வேலைக்குச் சென்று ஒப்புக்கொண்டது முதல் ஆபீஸுக்குச் செல்வதும், ஒழுங்காக தனக்குள்ள வேலைகளைச் செய்வதும், ஆயாசத்துடன் அலுத்துப்போய் வீட்டிற்கு வருவதும், குழந்தைகளுடன் குலாவி அவர்களைச் சந்தோஷப்படுத்தி விளையாடுவதும், பீச்சுக்கு அழைத்துக்கொண்டு போவதும், 8 மணி வரையில் பீச்சில் மணலில் படுத்துத் தன் விசனந் தீரப் புலம்புவதும், பிறகு வீட்டிற்கு வருவதும், சாப்பிட்டு விட்டுக் குழந்தைகளுடன் படுப்பதும் அவன் கடனாகக் கொண்டான்.

மனைவியுடன் ஒரு வார்த்தை கூடப் பேசி யறியமாட்டான். அவனுடைய தம்பிகளும் தங்கைகளுமே இருவருக்கும் துவிபாஷிகளாக விளங்கினார்கள். எல்லா அவயவங்களும் சரியாக விருந்தாலே உலகம் மதிப்பதில்லை; குரூபியாயின் யார் லக்ஷ்யம் செய்யப் போகிறார்கள்? காதும் செவிடாயுள்ள திலோத்தமா யாரிடத்தில் தான் பேச முடியும்; எந்த விஷயத்தைத்தான் அறிய முடியும்? தன் புருஷனின் அந்தரங்கத்தை ஆனவரையில் அறிந்துகொள்ளும் பொருட்டு எண்ணித் தவித்தாள்; ஆனால், அதற்கு மார்க்கம்? வேலை செய்யும் எந்திரம்போல் அவள் அமைந்தாள்.

லதாவும் அவள் புருஷனும் இரண்டாவது வகுப்பு வண்டியில் அமர்ந்து ஏகாந்தமாய்ச் சென்றார்கள் என்று பெயரேயன்றி, லதாவின் புருஷனாகிய ஜகதீசன் இன்னொரு கோடி ஜன்னல் அருகில்போய் உட்கார்ந்தான். லதாவின் மனக் கலக்கத்தில்

அவள் முதலில் எதையும் கவனிக்கவில்லை. ஒருவிதமாக ரயில் பிரயாணம் முடிந்ததெனினும், தன் புருஷன் மாதவனையும் தன்னை யும் பார்த்துவிட்டானே! அதனால் ஒரு வேளை பேசாது தூர விருக்கிறானோ என்ற எண்ணம் உண்டாகி, அவளுக்கு உள்ளுக்குள் பயமாகவே இருந்தது.

புதியதாய்ப் புக்ககம் சென்ற பெண்ணாகையினால் தடபுடல் கொண்டாட்டங்கள் மற்றவர்களால் நடத்தப்பட்டதேயன்றி, தன் கணவன் தன்னுடன் முகங் கொடுத்துப் பேசாததும், அவன் மிகவும் கடுமையாக விருப்பதும் லதாவுக்கு மிகுந்த கலக்கத்தை உண்டாக்கின. அவளாக ஏதேனும் வலுவில் பேசினால், "இதைக் கேட்க நான் தகுதியுள்ளவனன்று; உன் மனத்தையுருக்கும் மனித னிடம் சொன்னால் நன்றாக விருக்கும்" என்று குத்தலாகப் பேச வாரம்பித்ததோடு, அவளை வார்த்தைக்கு வார்த்தை குற்றங் கண்டு பிடித்து, சில சமயம் அடித்தும் திட்டியுங் கூட உபத்திரவிக்கத் தொடங்கியதால், லதாவின் மனம் உடைந்துபோய் விட்டது. வேதனை தினே தினே விருத்தியாகி, நரகலோகம் போல் தோன் றியது. என்ன செய்வாள் பாவம்!

அவள் உண்மையில் மாதவனைக் காதலித்தது ஒரு குற்றமே யன்றி, அவள் மனம் அக்கிரமமாக மாதவனை யடையவோ, தன் கணவனுக்குத் துரோகம் செய்யவோ, அவனை வித்தியாசமாக எண் ணிப் பழிக்கவோ அவள் சற்றும் விரும்பவில்லை. ஏதோ பூர்வ ஜன்மாந்திரத்தின் பாபம் இம்மாதிரி ஓர் சம்பவம் தன் வாழ்க்கையில் நிகழ்ந்துவிட்டதை மறந்துவிட வேண்டுமென்று பிரயத்தனம் செய்கிறாளேயன்றி, அவ் வெண்ணத்தை வளர்க்கவேண்டுமென்று கனவிலும் அவள் கருதவில்லை.

தன் மனத்திலிருப்பதைப் பிறர் அறியாதவாறு அடக்கியும், மறந்தும் தன் பதியின் நிழல்போல் சேவைசெய்து அவன் மனங் கோணாது நடக்க அவள் முழுமனத்துடன் பிரயத்தனப் பட்ட தெல்லாம் வீணாகிவிட்டன. தினம் தன் புருஷன் கூறும் பாணம் போன்ற சொற்களும், கொடுக்கும் அடியும் குத்தும் தன்னையன்றிப் பிறர் அறியாதவாறு அடக்கியே வெகு சாந்தமும், பொறுமையும் வகித்துவந்தாள்.

பெரிய மனிதர் வீட்டுச் செல்லப்பெண்ணாகவிருந்தும் புருஷனி டம் அடியும் உதையும் திட்டும் வாங்குகிறாள் என்று பிறரறிந்தால், அதனால் எத்தனை அவமானம் உண்டாகும். அதோடு தன்னை வெகு அன்பாய் வளர்க்கும் தாய்தந்தையர்கள் கேட்டால், என்ன விச னப்படுவார்கள் என்று நினைக்கும்போது, தான் ஏன் பிழைத்திருக்க

வேண்டும் என்ற விசனம் உண்டாகி அவளை வதைக்கும். கப்சிப் பென்று வெளியாருக்கு எதையும் காட்டிக்கொள்ள மாட்டாள்.

அடிக்கொரு தரம் அவளைத் "தாய் வீட்டிற்குப் போய்விடு" என்று உபத்திரவிப்பதைச் சகியாமல் விசனப்பட்டுக்கொண்டிருந்தாள். இதே விசனத்தில் அவளுக்கு மூளை கலங்கிவிடும் போலாகி விட்டதால், அவளையும் அறியாத சங்கடத்துடன் தன் நிலைமையை முற்றும் பெரிய கடிதமாக எழுதி அதை, தான் ஒரு பத்திரிகையில் கண்ட மாதவனின் ஆபீஸ் விலாசத்திற்குத் துணிந்து அனுப்பி விட்டாள். ஒருவிதமான மனவெறி பிடித்தத் தன்மையில் அவளை மீறிய துக்கமும் வெறுப்புங் கொண்டு அவ்வாறு எழுதி விட்டாள். பிறகு, "ஐயோ! என்ன அசட்டுத்தனம் செய்து, எழுதிவிட்டோம்? இது பிறருக்குத் தெரிந்தால் என்னவாகும்? அதோடு மாதவன் முன்போல் தனித்த மனிதனல்லவே? அவளுக்குத் தெரிந்துவிட்டால், அவன் கதியா தாகும்?" என்ற கவலை அவளைக் கொன்று தின்ன வாரம்பித்தது.

## 16

மாதவன் ஆபீஸுக்குச் சென்று வேலை செய்யும்போதும் வீட்டிலிருக்கும் குழந்தைகள்மேல்தான் அவனுடைய எண்ணம் போராடும். தான் முகத்தைப் பார்க்கா திருப்பினும், தனக்கு வாய்த்திருக்கும் பெண்டாட்டிச் சற்றும் மனங்கோணாது வெகு உத்ஸாகத்துடனும் அக்கரையுடனும் குழந்தைகளை ஆசையாய் வளர்த்துக் குடும்பத்தைச் செட்டும் சீராயும் நடத்தும் மாதிரியில் மாதவனை யறியாது அப்பெண்ணின்மீது பச்சாத்தாபமும் ஒருவிதமான இரக்கமும் உண்டாகியது. எனினும் அவளை மனைவியாக எண்ணிப் பிரேமை காட்டிப் பேச ஒரு நிமிஷங்கூட அவன் மனம் இடங்கொடுக்கவே இல்லை.

ஆபீஸில் சித்திரவேலை செய்யும்போதெல்லாம் ஆதியில் தான் செய்யும்போது அருகிலேயே லதா நின்றுகொண்டு தமாஷ் செய்வதும், 'இந்த வர்ணம் சரியில்லை. அந்த வர்ணம் போடுங்கள்' என்றெல்லாம் சொல்லி உதவி செய்யும் பழங்காலக் கதைகளை கண்முன்பு தோன்றும். அச்சமயத்தில் அப்படியே சில வினாடிகள் பிரமை பிடித்து நிற்பான். பிறகு, தன் தொழிலைச் செய்வான்.

இம்மாதிரி தத்தளித்துக்கொண்டிருக்கும் சமயம் ஆபீஸுக்கு அவனுக்கோர் கவர் வந்தது. அக் கவரின் விலாசக் கையெழுத்தைப் பார்த்ததும் "இது லதாவினுடைய கையெழுத்துதான் ; அதற்குச் சந்தேகமே இல்லை. லதா ! லதா ! என்ன அருமையான பெயர். எனக்கு எதற்காகக் கடிதம் எழுதியிருப்பாள் ? என்ன எழுதியிருப்பாள் ?" என்று பலவிதமான உணர்ச்சிகளுடன் உடனே அதை உடைத்தான்.

ஆனால், தன்னோடுகூட பலர் வேலை செய்யுமிடத்தில் இதைப் படித்தால், தன்னுடைய உணர்ச்சிகளை அவர்கள் தெரிந்துகொண்டால் விகாரமாகிவிடுமென்று எண்ணிக் கடிதத்தை ஜேபியில் போட்டுக்கொண்டான். வழக்கத்திற்கு முன்பாகவே வேலைகளை முடித்துக்கொண்டு நேரே வீட்டிற்கு வந்தான். மனம் இருக்கை கொள்ளவில்லை. கட்டிலில் படுத்தபடியே கண்ணீர் பெருகக் கடிதத்தைப் படிக்க வாரம்பித்தான்.

"மகா ராஜ ராஜஸ்ரீ, மாமா அவர்களுக்கு அபாக்கிய வதியாகிய லதா அனேகங் கோடி வந்தனம் செய்து எழுதும் விண்ணப்பம்.

'மாதவா! மாதவா! மாதவா !' என்று நான் எத்தனை முறையிட்டாலும் அம் மாதவனின் மாயையில் என் முறையீடு காதில் கேட்கவே இல்லை. அவன் செவிடன் தான் என்று கண்டிப்பாய் நினைக்கும்படி வெறுப்பும் எனக்கு உண்டாகிவிட்டது. என்னை அந்தப் பரந்தாமன் இத்தனைத் துன்பத்தில் ஆழ்த்திக் கொலை செய்வான் என்று நான் கனவிலும் கருதவில்லை.

மாமா ! என்னுள் அழுந்திக் கிடக்கும் சங்கடத்தை வெளியிடாது மென்று இன்று பார்த்தும் என்னால் சகிக்க முடியவில்லை. அதை வெளியிடாவிட்டால், என் மூளையே கலங்கிப் போய்விடும்போல் நிச்சயமாகத் தோன்றி விட்டது. மூளை குழம்பிய சமயத்தில் நான் என்ன சொல்லிவிடுவேனோ எப்படி நடந்துவிடுவேனோ என்ற பயங்கரத்தை நினைக்கும்போதே என் சரீரமே நடுங்குகிறது. ஆதலால், சுவருடனாவது சொல்லி ஆறு என்ற பழமொழிப்படிக்கு உன்னிடமே, என் நெஞ்சை அள்ளி வதைக்கும் பாரத்தைக் கூறத் துணிந்து இதை எழுதுகிறேன்.

கடவுள் ஏனோ நம்மைப் பிறப்பித்தார் என்று நான் நினைத்து உருகுவதுபோலவே நீயும் பலகாலும் உருகு

வாய் என்று நினைக்கிறேன். அன்று ரயில்வே ஸ்டேஷனில் நம்மை ஏன் கடவுள் சந்திக்கச் செய்தாரோ தெரியவில்லை. உன் பக்கலில் நின்ற பெண்ணை உன் புது மனைவி என்பதை அறிந்து என் உள்ளம் கொதித்தது. அரூபிக்கெல்லாம் அழியாத ரூபத்தைக் கொடுத்துச் சித்தரிக்கும் உனக்கு அமைந்த மனைவியை எண்ண சித்திரக்காரனுக்கு நேர்ந்த விதி என்றே சொல்லவேண்டும்.

மாமா! நாம் இருவரும் வளராது குழந்தைப் பருவமாகவே இருந்திருந்தால், உன்னை நான் பார்த்ததும் என்னை நீ பார்த்ததும் ஓர் பெருங் குற்றமாகத் தோன்றி இம்சை செய்யாதிருக்கும் அல்லவா! என் சிறிய பிராயம் முதல் என் மனத்தை உனக்குக் கொடுத்துவிட்டது உண்மையாயினும், நான் புத்தி அறிந்த பிறகு எனக்கு வாய்த்துள்ள கணவனை நான் தெய்வமாகவே எண்ணி வருகிறேன். எத்தனையோ பகீரதப் பிரயத்தனம் செய்து நான் என் மனக் கிளர்ச்சிகளை உள்ளடக்கிக் கொண்டு நடந்தும் என் பர்த்தாவுக்கு என்மீது அன்று ரயில்வே ஸ்டேஷனில் ஏற்பட்ட சந்தேகமும் மனக் கசப்பும், வெறுப்பும், அதனால் என் சரீரத்தில் ஏற்படும் தழும்புகளும் மனத்தில் பாயும் கொடிய பாணங்களும் இன்னும் ஓய்ந்தபாடில்லை.

நான் நெறிதவறி நடக்கச் சற்றும் எண்ணியவளன்று. கடவுள் சாக்ஷியாக என் கணவருக்குப் பணிவிடை செய்யக் காத்திருந்தும் அவர் மனத்தில் சந்தேக விதை எப்படியோ ஊன்றிவிட்டது. என் முகத்தைப் பார்த்து ஒரு பேச்சும் பேசுவதில்லை. வாய் எடுத்ததற்கு எல்லாம் 'உன் தாயார் வீட்டுக்குப் போய்விடு. உன் கள்ளக் காதலனிடம் போய்விடு' என்று சொல்லும் வார்த்தையை என்னால் சகிக்க முடியவில்லை.

மாமா! இந்த ரகஸ்யம் யாருக்கும் தெரியவேண்டாம். நான் எந்தச் சமயம் எந்த இடத்தில் சவமாக இருப்பேன் என்பது எனக்கே தெரியாது. அதைத் தவிர, இனி எனக்கு வேறு வழி இல்லை. என்னுடைய முடிவு இவ்வளவுதான் என்று என் இதயத்தில் ஏதோ ஒன்று சொல்கிறது. கடவுளின் சித்தமும் அப்படித்தான் இருக்கும்போலும்!

மாமா! உன்னை நான் மறந்துவிட வேண்டுமென்று எத்தனை பிரயத்தனப்பட்டாலும் எனக்காக நீ எழுதிய

படத்தைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குப் பழய கதைகளே ஞாபகத்திற்கு வருகின்றன. எப்படியோ அந்தப் படத்தை மட்டும் தந்திரமாய் நீ அனுப்பி உன் மனக் குறையைத் தீர்த்துக்கொண்டாய். ஆனால், நானோ பராதீனப் பதுமையாக இருக்கிறேன். என் தாயார் கொடுத்த சங்கிலி என்னுடைய சிறு பிராயம் முதல் நானே போட்டுக்கொண்டிருந்ததால், அதுவே உன்னிடம் எப்போதும் இருக்கட்டும் என்ற நோக்கத்துடன் தான் நான் பலவந்தமாகக் கொடுத்தேன். அதுதான் என் அன்பின் பரிசு. அதைத்தான் நீ உன் புது மனைவியின் கழுத்தில் போட்டிருப்பாய் என்று நம்பி சந்தோஷப் படுகிறேன்.

மாமா! நீ என் பெற்றோரைக் கண்டால்கூட அவர்களிடம் என் குறையைக் கூறாதே. என்னைப்பற்றி எந்தப் பேச்சும் எடுக்காதே. எனது கடைசி வந்தனத்தையும், முதல், கடைசி இரண்டுமான கடிதத்தையும் உனக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

என் துயரத்தையே கூறிக்கொண்டு போனதில் உன் தாயின் மரணத்தை விசாரிக்க மறந்துவிட்டேன். உம். நீ கொடுத்து வைத்தது இவ்வளவுதான். உன் தாயார் கொடுத்துவைத்ததும் இவ்வளவுதான். நான் ஏதேதோ எழுதிக்கொண்டே போகிறேன். குற்றங்களிருப்பின் மன்னித்துவிடு. உன் மனைவிக்கு எனது மனப்பூர்வமான ஆசீர்வாதம்.

இங்ஙனம்,
உன் பிரிய
லதா"

இந்தக் கடிதத்தைப் படிக்க எடுத்தது முதல் ஒரு வரியையும் முற்றிலும் படிக்கமுடியாது கண்ணீர் வெள்ளம்போல் வந்து அவ் வரிகளையே முற்றுகைப் போட்டுக்கொண்டு விட்டதால், 5 நிமிடத்தில் முடிக்கும் கடிதத்தை அரைமணி படித்தும் சமாளிக்க முடியவில்லை.

ரயில்வே ஸ்டேஷன் விபரீதத்தினால் என்ன நேர்ந்துவிடுமோ என்றுபயந்து பயந்து நடுங்கிக்கொண்டிருந்ததற்குத் தகுந்தாற் போல் அவளுக்குத் துன்பமாகவே முடிந்துவிட்டதை எண்ண யெண்ண அவனால் துக்கத்தைச் சகிக்கவே முடியவில்லை. மீண்டும் மீண்டும் கடிதத்தைப் படித்தான். கண்ணில் ஒற்றிக்கொண்டான்,

மார்புறத் தழுவினான். "என்னவிதமாக லதாவின் குறைகளைத் தீர்க்க முடியும்? கடவுளே! எனக்காவது எந்தவிதமான துன்பம் நேரிடினும் நேரட்டும். என் கண்மணி லதாவின் குறையை நான் எவ்விதம் சகிப்பேன்?

ஹா! லதா! லதா! என் ப்ரேம லதா! இன்ப லதா! புஷ்ப லதா! ஹேம லதா! பாவி என்னால் நீ அடையும் பலன் இதுதானா? என்ன விசித்திரம்! என்னுடைய ஆருயிர் லதாவுக்காக நான் எழுதிய சித்திரத்தை மகாபாவி நான் விற்றுவிட்டேனே. அதை அவளுக்கு யார் கொடுத்திருப்பார்கள்? எப்படி கொடுத்திருப்பார்கள்? இது பெரிய வேடிக்கையிலும் வேடிக்கையாக விருக்கிறதே. என் லதாவிற்காக எழுதிய சித்திரம் அவளிடமே சேர்ந்திருக்கிறதென்றால் அதைவிட ஆனந்தம் வேறு என்ன வேண்டும்? அந்த விவரத்தை எவ்விதம் அறிவது?....ஹா! ராம்பிரஸாத் அடித்துக் கொண்டுபோன சங்கிலியின் விவரம் நான் நினைத்தபடியேதானாகியிருக்கிறது. உம். நல்ல வேளை! இந்த விஷயத்தை விகல்பமாக அவர்களிடம் சொல்லாமலிருந்தானே அதுவே பெரிய உபகாரம்" என்று பலவிதமாக யோசித்துக் குழப்பத்தில் மூழ்கிவிட்டான்.

வழக்கம்போல் குழந்தைகளுடன் விளையாடாமலும், பீச்சுக்குச் செல்லாமலும் கடிதத்தைப் படித்துக் கண்ணீர் விட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்த திலோத்தமாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. "யாரிடமிருந்து கடிதம் வந்திருக்கும். என் இம்மாதிரி புலம்புகிறார்?" என்ற பெரிய சந்தேகமும் குழப்பமும் உண்டாகிவிட்டன. ஆனால், அதை எப்படித்தான் கேட்பாள் பாவம்! அவள் குடும்பத்திற்கு வந்தநாள் முதல் இதுவரையில் நேரில் நின்று பேசி யறியமாட்டாளாகையினால் அதற்கும் அஞ்சினாள்.

குழந்தைகளும், 'அண்ணா பீச்சுக்கு வரவில்லையே' என்று எதிர்பார்த்தார்கள். பிறகு, கூப்பிட்டும் பார்த்தார்கள். தனக்கு உடம்பு சரியில்லை என்று கூறிவிட்டான். எனினும் குழந்தைகளுக்கு என்ன தெரியும்? அவர்கள் மனக்கவலையுறப் போகிறார்களே என்று உடனே பாசம் வந்து மூடிவிட்டது. அதனால் பீச்சுக்குக் கிளம்பி, குழந்தைகளுடன் சென்றான்.

பீச்சில் குழந்தைகளை விளையாடவிட்டுவிட்டு மாதவன் மணலில் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணிப் பெருமூச்சுவிட்டவாறு படுத்திருந்தான். அங்கும் இருக்கை கொள்ளவில்லையாகையால், குழந்தைகளுடன் திரும்பி வீட்டிற்கு வந்து குழந்தைகளை விட்டுவிட்டு, நேரே முன்பு படத்தை விற்ற தனிகரின் வீட்டிற்குச் சென்றான்.

இவனைக் கண்டதும் அவர், "வாப்பா! மாதவா! என்ன சமாசாரம்? வேறு சித்திரம் ஏதாவது எழுதி இருக்கிறுபா?" என்று கேட்டார்.

மாதவன் :—என் குடும்பத்தின் அலங்கோலந்தான் தெரிந்திருக்கிறதே! மனதே சரியாயில்லை. சித்திரம் எழுதி எத்தனையோ நாளாகிவிட்டது. அந்தப் பித்தம் என்னவோ என் மனத்தைவிட்டுப் போகவில்லை. முன்பு உங்களிடம் விற்ற அந்தச் சித்திரத்தைக் கண்ணுல் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன். தயவுசெய்து சற்று காட்டமுடியுமா?—என்று வணக்கத்துடனும், அவன் மனத்தில் அழுந்திக் கிடக்கும் ஆசை முற்றும் காட்டியுங் கேட்டான்.

தனிகர் :—அடாடா! அதை இனிமேல் யாருமே பார்க்க முடியாதே. எனக்கு உயிருக்கு உயிரான சித்திரத்தை எனது ஆப்த நண்பராகிய லக்ஷ்மண பிரஸாத்தின் மகள் லதாவுக்கு விவாகப் பரிசாகக் கொடுத்துவிட்டேன். ஏனெனில், பழயபடி பரிசுகள் கொடுக்காமல் அனேகர் புதிய மாதிரியில் கொடுத்தார்கள். அதனுல் நானும் புதியமாதிரியான பரிசாகக் கொடுக்க எண்ணி, அதை அவளுக்குக் கொடுத்துவிட்டேன்—என்ருர்.

இதைக் கேட்ட மாதவனின் ஆனந்தத்திற்கும் ஆச்சரியத்திற்கும் எல்லையே இல்லை. "இது மனிதச் செயலில்லை. கடவுளின் செயல்தான் என்பதில் சந்தேகமே இல்லை. என் லதாவின் பொருளை அவளிடம் சேர்ப்பித்துவிட்டக் கடவுளை நான் எத்தனை தரம் வணங்கினுலும் போதாது" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு, விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

## 17

லதா, கடிதத்தை அனுப்பிய பிறகு மனக் கவலையுடன் சோர்ந்துபோய் அதனுல் எந்தவிதமான ஆபத்தும் நேராத வண்ணம் காப்பாற்றவேண்டும் என்று சதா கடவுளைத் தியானித்தபடியே இருந்தாள். அவள் புருஷனின் கோபம் சற்றுந்தணியவே இல்லை. அவளைப்பற்றித் தனக்குள்ள சந்தேகங்களையெல்லாம் அவளுடைய பிதாவுக்கு எழுதி அவளை அழைத்துக்கொண்டு போகும்படிச் செய்துவிட வேண்டுமென்ற ஆத்திரத்துடன் கடிதம் எழுதியும் விட்டான்.

அதைத் தபாலுக்குப் போடுவதற்காகத் தயாராக இருந்த சமயம் தபால்காரன் "ஸ்ரீமதி லதா தேவிக்கு!" என்ற ஒரு பெரிய கவர் கொண்டு வந்தான். எப்போதும் லதாவுக்கு அவள் தாய் தகப்பன் எழுதும் கடிதம் அவன் பேருக்கே வருமாகையால், இது ஸ்பெஷலாக லதா தேவிக்கு என்று புதிய கையெழுத்துடன் வந்ததால், அவன் சந்தேகம் பன்மடங்கு அதிகரித்துவிட்டது. கடிதத்தைத் தானே வாங்கிக்கொண்டு ஆத்திரம் பொங்கியவாறு தன் அறைக்குச் சென்று "சண்டாளீ! இன்றோடு உன் முடிவு கிட்டிவிட்டது. பகிரங்கமாகக் கடிதம் வருவதற்கும் ஆரம்பித்து விட்டதா! இருக்கட்டும். ஒருகை பார்த்துக்கொள்கிறேன்" என்று உறுமியவாறு கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

"என் உயிரினும் இனிய அன்புருவாகிய ஆசை சிநேகிதை லதாவுக்கு உன் பிரிய தோழி திலோத்தமா அனேக ஆசீர்வாதம் செய்து எழுதுவது.

க்ஷேமம். க்ஷேமத்திற்கு எழுதவும்.

லதா! உன் அருமைப் பெயரைச் சொல்லி ஆனந்தமாய் அழைத்து எத்தனை யுகங்களாகிவிட்டன. நாம் ஒன்றாகப் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்தின் இன்பத்தையும், உணர்ச்சியையும் நான் கனவிலும் மறக்கவில்லை. நீயும் அப்படியே மறக்காதிருப்பாய் என்றுதான் நம்புகிறேன். எனக்குத் தீபாவளி சமயத்தில் ஏற்பட்ட பட்டாசின் வெடி விபத்தினால் நாங்கள் ஊரைவிட்டுப் போன பிறகு என் இரு செவிகளும் செவிடாகி, முகமே விகாரப்பட்டு விட்டதை நீ அறிவாய். அன்று முதல் நான் அவமானத்தினால் கிராமத்தை விட்டே வராது இருந்துவிட்டேன்.

லதா! வறுமையின் கொடுமையால், கடமையின் கட்டாயத்தால், உடன்பிறந்தோருக்காக தியாகமூர்த்தி என்று வியக்கத்தக்க சித்திர நிபுணர் ஒருவர் என்னை மணந்துகொண்டு தன்னுடன் குடும்பம் நடத்த அழைத்து வந்தார். நான் வண்டியில் இறங்கியபொழுது நீயும்,—உன்னுடன் இருந்தவர்தான் உன் புருஷர் என்று நினைக்கிறேன்—அவரும் அதே வண்டியில் ஏறவும் சரியாக இருந்தது. உன்னைப் பார்த்ததும் ஓடி வந்து உன்னைக் கட்டி அணைத்துக்கொள்ள ஆசை தூண்டியது.

ஆனால், உனக்கும் கணவர் அருகில் இருக்கிறார். எனக்கும் என் கணவர் அருகில் இருக்கிறார். அவர்

அன்னையைப் பறிகொடுத்துவிட்டு, சதா கண்ணீர்விட்ட வண்ணமே இருக்கிறார். அதோடு ஓர் பெரிய சித்திர நிபுணருக்கு மூதேவிக்குச் சமதையாகிய நான் மனைவி யாகியதாலும், தாயையும் இழந்து, பரதேசிக் குழந்தை களுடனும் குரூபியான மனைவியுடனும் இவ்வூருக்கு வந்திறங்கியதாலும் துக்கம் அவரால் தாங்க முடியாது அழுகையே வந்துவிட்டது.

அவர் புலம்பிக்கொண்டு துயரப் பதுமைபோல் நிற்கையில் நான் எப்படி உன்னிடம் வருவது? அதோடு நான் ஒரு செவிடி. இரு காதுகளும் இல்லாதவள். நான் உன்னோடு பேசலாமே யன்றி, நீ என்னுடன் எப்படி உன் கணவன் முன்பு இரைந்து பேசுவாய்? அப்படிப் பேசினால் அவர் என்ன நினைப்பாரோ! என் கணவர்தான் என்ன நினைப்பாரோ என்று எல்லாவற் றையும் யோசித்து, மௌனமாகவே கண்ணீர்விட்டுக் கலங்கியவாறு நின்றுவிட்டேன்.

லதா! நீயும் என்னைப்போலவே யோசனையில் மூழ் கிக் கண்ணீர் விட்டதை நான் குறிப்பாலறிந்து கொண் டேன். இதற்குள் நமக்கு எமன் போன்ற வண்டியும் பறந்துவிட்டது. எப்படியிருந்தாலும் உனக்கு ஒரு கடித மாவது எழுதி என் மனக்குறையை ஆற்றிக்கொள்ள முயன்று நம சினேகிதையின் மூலம் உன் விலாசத்தை யறிந்து இதை எழுதுகிறேன்.

லதா! இக் கடிதம் எழுதவும் பயந்துகொண்டுதான் எழுதுகிறேன். இதைப் பார்த்து உன் கணவரும், மற்றை யோரும் கோபிப்பார்களோ என்று பயந்து இத்தனை நாள் பேசாதிருந்தேன். நேற்று கனவில் உன்னைக் கண்ட வுடன் என்னால் தாளமுடியாது இதை எழுதுகிறேன். இந்தச் செவிடியின் மீது பழைய அன்பை மறந்திருக்க மாட்டா யென்றும் நம்புகிறேன். அடிக்கடி உன் யோக க்ஷேமத்தை எழுது. கடவுள் கிருபை இருந்தால் எப்போ தாவது சந்திக்கமாட்டோமா என்ற நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

வேணும் ஆசீர்வாதம்.

உன் பழைய சினேகிதை,

திலோத்தமா"

அக் கடிதத்தைப் படிக்கப்படிக்க அவன் மனத்தில் கூறத் திறமற்ற ஆச்சரியமும், அடக்க முடியாத ஆனந்தமும் பொங்கிப் பொங்கி வருகின்றன. 'என்ன ஆச்சரியம். ஐயோ! பழியோரிடம் பாவமோரிடமாகவன்றோ நம் ஆத்திரத்தில் ஆய்விட்டது. ஒரு சினேகிதை செவிடு என்றதற்காக அவள் வெட்கி அருகில் வாராதிருந்ததால், நாம் என்ன விபரீதம் செய்துகொண்டு லதாவை அடித்தும், திட்டியும் அனியாயமாய் இம்சித்து விட்டோம். ஐயோ! பொறுமையின் இருப்பிடம் என்றால் லதாவுக் கன்றோ பொருந்தும்! சீச்சீ! இந்தக் கண்மூடித்தனமான சண்டாளக் கோபமும் அக்கிரமமும் கூடியன்றோ என்னைப் பித்தனுக்கி விட்டன!" என்ற அனுதாபமும் இரக்கமும் அவனை மீறி வந்துவிட்டன. "ஹா! இக்கடிதம் இன்னும் பத்து நிமிடம் கழித்து வந்திருக்குமாயின் நான் கண்மூடித்தனமான த்வேஷத்துடன் எழுதிய கடிதம் லதாவின் பிதாவுக்குப் போயிருக்கு மல்லவா? அம்மாதிரி போயிருக்குமாயின் என்ன கதியாகும்? மகா மானியாகிய லதா தற்கொலை யல்லவோ செய்து கொள்வாள்? ஹா! கடவுளே! இச்சமயம் என் புத்தியை மாற்றி மீத்திவிட்டாய்" என்று பலவாறு எண்ணியபடியே தான் எழுதிய கடிதத்தைச் சுக்கல் நூறுகக் கிழித்து நேரே குப்பைத் தொட்டியில் போட்டான்.

அப்போது மாலை 5 மணி இருக்கும். லதா விளக்கேற்றி விட்டு ஸ்வாமிக்கு முன்பு கண்ணீர் பெருகியவாறு நின்று "தாயே! ஜகன்மாதா! என் கஷ்டத்தைத் தீர்த்து என்னை உன் பொன்னடியில் சேர்த்துக் கொள்ளக்கூடாதா! என் கவலையைத் தீர்த்து, என் காலத்தை நீ என்றுதான் முடித்து என்னைக் காப்பாற்றப் போகிருய்? என்னல் இந்தச் சங்கடத்தை சகிக்க முடியவில்லையே! இன்னமும் நீ வாளாவிருந்தால் நான் தற்கொலைசெய்து கொள்வதைத் தவிர வேறு மார்க்கமில்லை. என்னப்பனே! தீன சரண்யா! உன் திருவுள்ளம் இரங்கி என்னைச் சீக்கிரம் இவ்வுலகத்திலிருந்து பிரித்து விடமாட்டாயா!" என்று கண்ணீர் பெருக வாய் விட்டும் கூறி வேண்டுகிருள்.

கடிதத்துடன், "லதா! லதா!" வென்று ஓடிவரும் அவள் புருஷன் லதாவின் இந்த பிரார்த்தனையைக் கேட்டும் அவள் விசனிப்பதைப் பார்த்தும் மனம் உருகிப் பதறிப் போய், "லதா! லதா! மகா பாவி என்னை மன்னித்துவிடு. இதோ இப்போதே கடவுள் உனக்கு நற்காலத்தைப் பிறப்பித்துவிட்டார். நான் வீண் சந்தேகத்திற் கெல்லாம் மனத்தைப் பறிகொடுத்து அறிவிழந்துபோய் உன்னைப்படாத பாடும் படுத்திவிட்டேன். லதா! இதோ உன் சினேகிதை திலோத்தமா எழுதியிருக்கும் கடிதத்தைப்பாரு. வா; வா. லதா! சீக்கிரம் வா

இந்தா !" என்று, என்றும் கண்டறியாத அன்புடன் கூறியவாறு, லதாவே வியக்கும்படி அவளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டான்.

•

பகவானை வேண்டிப் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கும் லதாவுக்குத் தன் கணவன் கூப்பிடுவதும் பேசுவதும் அணைத்துக் கொண்டதும், திலோத்தமாவின் கடிதம் என்றதும் ஒன்றுமே புரியாமல், திகைத்து ப்ரமித்துவிட்டாள். திலோத்தமாவென்ற சினேகிதையே தனக்குக் கிடையாதே. இதென்ன வேடிக்கை! மாதவன் ஒருகால் அனுப்பி யிருப்பானோ? தன் பெயரை மாற்றிக்கொண்டு திலோத்தமா வென்று எழுதி இருப்பானோ என்ற குழப்பம் வந்து விட்டது.

இவள் மிரள மிரள விழிப்பதையும், பயப்படுவதையும் கண்ட ஜகதீசன் லதாவைக் கட்டியணைத்தபடியே தன்னறைக்கு அழைத்துச் சென்று அவளைத் தேற்றி உட்காரச் செய்து, "லதா! இனி பயப்படாதே. நான் செய்த முட்டாள்தனத்தையும், உன் பரிசுத்தத்தையும் உணர்ந்துவிட்டேன். இதோ கடிதம்! படி; படி" என்று அவளிடம் கொடுத்தான்.

ஒருகால் இது மாதவன் எழுதியதோ என்கிற ஓர் ஆவல் இருப்பதால் வாயைத் திறக்காமல் பேந்தப் பேந்த விழித்தபடியே கடிதத்தைப் படிக்கலானாள். அதைப் படித்த அவளுக்கு அதன் மர்மம் ஒன்றுமே தெரியவில்லை. "இது மாதவனின் கையெழுத்து அல்ல. பெண்பிள்ளையின் கையெழுத்தாக விருக்கிறது. இதிலுள்ள விஷயங்கள் முற்றும் எனக்கு மிகவும் புதிதாக விருக்கின்றன. அந்தோ! மாதவனின் மனைவிதான் என்று இவ்வரியைப் படிக்கும் போதல்லவா தெரிகிறது.

மாதவா! மாதவா! நீ மாதவம் செய்துதான் இத்தகைய உத்தமியை அடைந்திருக்கிறாய். அக் கடிதத்தை அம்மாதரசி படித்திருக்கவேண்டும். அவளே இந்தக் கற்பனைக் கதையைச் சிருஷ்டித்துக் கடிதமெழுதி என்னையும் உன்னையும் காப்பாற்றி இருக்கவேண்டும். அந்தோ! காது சேவிடானால் என்ன? குணம் சாணை பிடித்த வைரமாக வன்றோ மின்னுகிறது" என்றெல்லாம் கடிதத்தைப் படிக்கும்போதே மனத்தில் எண்ணியவாறு கண்ணீர் பெருக்கினாள்.

ஜகதீசனை அவன் சினேகிதன் அவசரமாகக் கூப்பிட்டதால், "லதா! நான் வெளியே போய் வருகிறேன்; உன் ஆப்த சினேகிதையை நீ மறக்காமல், அவள் செவிடு என்று அலக்ஷ்யம் செய்யாமல், உடனே கடிதம் எழுதி, இன்று தபாலுக்கே அனுப்பிவிடு. இந்தா கவர்!" என்று கூறிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

லதாவின் மனம் அடைந்த நிம்மதியான சந்தோஷத்தைக் கூறவேண்டுமா? இக்கடிதத்தை மாதவன் அறியாது போட்டிருக்கிருளோ, அன்றி அறிந்துதான் போட்டிருக்கிருளோ தெரியவில்லை. நான் அக் கடிதத்தில் அவளைப்பற்றிக் கேவலமாய் எழுதியதைக் குறிப்பிட்டு எழுதுவதுபோலன்றே வெகு குணத்துடனும், சாந்தமாயும் எழுதி இருக்கிருள். அந்தோ! குரூபித்தனத்தைக் கண்டு மட்டும் நான் குறை கூறிவிட்டேனே. அவளுக்கிருக்கும் அறிவும் சாந்தமும், குணத் தழகும் எனக்கு வருமா? மாதவா! மாதவா! நீயே பாக்கியசாலி. என் துயரத்தை ஒரு கடிதத்தின் மூலமே பறக்கச் செய்த புனிதவதியை அடைந்த நீயே தன்யவான்.

மாதவா! நீ எழுதும் சித்திரத்தில் வெளியழகை ஆயிரம்பங்கு காணலாம். உன் மனைவியின் இதயத்தின் அழகைப்போல் காண முடியாதல்லவா! எந்த வாயால் உனக்குத் தண்டனையாக அவள் கிடைத்தாள் என்று சொன்னேனே, அதே வாயினுல் உன் புண்ணியவசம், உன் தாயார் செய்த அணைகடந்த அன்பின் ஆசீர் வாதம் அப் பெண் ரத்தினம் கிடைத்தாள் என்றெல்லாம் மனத்தில் பலவிதமாக எண்ணி இன்பப் பெருக்கில் மிதந்தவாறு வெகு விரைவில் கடிதத்தை எழுதிக் கவரில் போட்டு, மாதவன் விலாசத்திற்கே அனுப்பிவிட்டாள். அதன்பிறகே அவள் மனம் நிம்மதி அடைந்தது.

## 18

"லதாவுக்கு நான் எந்தவிதமாக பதிலெழுதி அவள் துயரத்தைத் தீர்க்கமுடியும்? அவளுடைய கடிதத்தில் தற்கொலை என்ற பாகம் என்னைக் கலக்கிக் கொன்று தின்கிறதே. எந்த நிமிடம் லதா இறந்துவிட்டாள் என்பதைக் கேட்போமோ! தெரியவில்லையே! கடவுளே! என்னைச் சோதித்ததெல்லாம் போதாதென்று இந்த விதமும் சோதிக்கவேண்டுமா! என்னுல் ஒருவருக்கும் சுகமில்லை எனினும் துக்கமாவது, ஆபத்தாவது இல்லாதிருக்கும்படிச் செய்யமாட்டாயா? நான் எப்படியாவது ஒரு பிரயாணம் அவ்வூருக்கே நேரில் சென்று எந்தவிதமாகவாவது லதாவைப் பார்த்துத் தேறுதல் கூறி வரலாமென்றுல், குழந்தைக்குக் கடுமையான ஜுரம் அடிக்கிறதே. எவ்விதம் அதைவிட்டுப் போவது?" என்று மாதவன் குழம்பித் தவித்தான். இரண்டு நாட்கள் குழந்தையின் ஜுர வேகம் அதிகமாகவே இருந்ததால், ஊரைவிட்டுப் போகமுடியாதிருந்தது.

"குழந்தைக்கு எப்படி இருக்கிறதோ? லதாவின் கதி எவ்விதம் இருக்கிறதோ!" என்ற கவலையில் தோய்ந்த மனத்துடன் ஆபீஸில் இருக்கையில் லதாவின் கடிதம் அவனுக்குக் கிடைத்ததைக் கண்டதும் ஒருபுறம் துக்கமும், ஒருபுறம் ஆனந்தமும், ஒருபுறம் திகிலும் ஒன்றுகூடி அவனைக் கலக்கிவிட்டன. உடனே கடிதத்தை அங்கேயே உடைத்துப் படித்துவிட மனம் தூண்டியதால், டிபன் சாப்பிடும் தனி அறைக்குச் சென்று, படிக்க ஆரம்பித்தான்.

"என் அருமை மாதவா!

மாதவா! என்கிற பெயரை உனக்கு உன் தாயார் தீர்க்கமாக யோசனை செய்துதான் வைத்திருக்கிறாள் என்பதை இப்போதே அறிகிறேன். என் துன்பங்களை எல்லாம் உனக்கு நான் எழுதிவிட்டுத் தவித்துக்கொண்டிருக்கையில், எனக்கு உன் மனைவியின் கடிதம் என் குறைகளைத் தீர்க்க வந்த சமய சஞ்சீவி போன்று கிடைத்து, உடனே என் துன்பத்தை நீக்கிவிட்டது. என் கணவரின் கையிலேயே அக் கடிதம் கிடைத்தது. அவர் படித்துப் பார்த்துவிட்டு ஓடிவந்து, என்னிடம் தான் தப்பிதம் செய்து என்னை வருத்திவிட்டதற்காக வருந்தியும், கண்ணீர் விடுத்தும் என்னைக் கட்டி அணைத்துக் கொண்டு, என்னிடம் அக் கடிதத்தைக் கொடுத்தார்.

கடிதத்தைப் படித்ததும் நான் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. அக் கடிதத்தை நீ அறிந்துதான் உன் மனைவி அனுப்பினாளோ, அன்றி அறியாமலேயே உன்னிடம் உள்ள அணைகடந்த அன்பினால் அவ்வுத்தமியே அனுப்பினாளோ தெரியாது. ஆதலால், நீ பார்க்கும் பொருட்டு அதன் காப்பியும் ஒன்று வைத்திருக்கிறேன்.

மாதவா! நீ மா தவம் செய்துதான் அப் புண்ணிய வதியை மணந்திருக்கிறாய் என்பதை என் உள்ளம் எண்ணியெண்ணி பொங்கிப் பூரிக்கிறது. வெளி அழகில் என்ன இருக்கிறது? வெளி அழகில் ரதிபோலிருப்பவர்கள் உள்ளுக்குள் விஷம் போன்ற குணத்துடன் செய்யும் கொடுமையைக் காட்டிலும் உள் அழகுதான் பயன் கொடுப்பது என்ற தத்துவத்தை இப்போதுதான் உன் மனைவியின் மூலம் அறிந்தேன். அந்த ரகஸியத்தை அறியாது, அவளைப்பற்றிக் குறை கூறி முன்பு எழுதி விட்டதற்காக நான் அவ்வுத்தமி திலோத்தமாவிடம் மன்னிப்புக் கோருகிறேன்.

மாதவா! இந்த ரகசியங்கள் இதோடு நிற்கட்டும். நாம் என்றாவது சந்தித்து நேரில் பேசும் காலம் வரும்; அப்போது பார்க்கலாம். இதோடு இருக்கும் கடிதத்தை உன் மனைவியிடம் கொடு. அவள் செவிடு என்றும், குரூபி என்றும் அவளை நீ அலக்ஷியம் செய்யாதே! அவளே உன்னுடைய பொக்கிஷம். நீ தேடற்கரிய நிதி குணக் குன்று; குறையிலா மாணிக்கம். அவளிடம் நீ செலுத்தும் அன்பானது வெறும் அன்பல்ல. அதுவே உன் பரிதாப கரமான குடும்ப விருக்ஷத்திற்கு வார்க்கும் தண்ணீர் போன்ற தாகும். அவளால்தான் உன் குடும்பத்தின் வளர்ச்சி ஏற்பட முடியும்.

மாதவா! என் புருஷர் வெளியில் சென்றிருக்கிறார். வருவதற்குள் நான் இதை எழுதி விடும்படி உத்தர வாதலால், வேகமாக எழுதுகிறேன். பிழைகளிருப்பின் மன்னிக்கவும். பர்த்தாவின் நிழல் போன்ற உத்தமி உனக்குக் கிடைத்திருக்கையில், இனி உனக்கு ஒரு குறைவுமில்லை. வீண் எண்ணமும் ஏக்கமும் கொண்டு தவிக்காதே! என் குறை தீர்ந்து கஷ்டம் வடியச் செய்த அவ் வுத்தமிக்கு எனது வந்தனங்கள் உரித்தாகுக.

இங்ஙனம்,
உன் பிரிய
லதா."

அதைப் படிக்கப் படிக்க மாதவனின் உள்ளம் இன்னதென்று விவரிக்க வியலாத விதம் உணர்ச்சி மயமாய்ப் பொங்கிப் பூரிக்கிறது. தன் மனைவி, லதாவுக்குக் கடிதம் எழுதி ஓர் பேராபத்தைத் தடுப்பாள் என்று அவன் கனவிலும் கருதாது, அவளை ஓர் ஜடப் பொருளுக்குச் சமமாக எண்ணி இருந்ததற்கு நேர்மாறாக இம் மாதிரியோர் உயர்ந்த காரியத்தை அவள் செய்திருக்கிறாள் என்றதை அறிந்ததும் மாதவனின் தேகமே நடுங்கி சிலிர்த்தது.

உடனே தன் மனைவி எழுதிய கடிதத்தைப் படித்தான். அவ்வளவுதான். அப்போதுதான் திலோத்தமாவின் அறிவின் விசாலமும், உத்தமமான எண்ணத்தின் போக்கும், அவள் தன்மீது வைத்துள்ள அணைகடந்த அன்பின் வெள்ளமும், அவள் தன் குல விளக்காய் ஜ்வலிக்கும் தன்மையும் பளிச்சென்று அகக் கண்ணில் தெரிந்ததும் அதே திலோத்தமாவின் குரூபித்தனம் எல்லாம் நீங்கப்பெற்று, தன் சித்திரத்திற்கு ஒப்பாக அப் பாவை மின்னுவது போன்ற ஓர் தோற்றம் உண்டாகியது. லதா, திலோத்தமாவுக்கு எழுதிய கடிதத்தையும் படித்தான்.

"உத்தம சிகாமணியே! உவமையில்லாப் பெண் ரத்தினமே! என் உயிரினும் இனிய மானத்தையும், என் பிராணனையும் காக்கும் அம்ருத தாரையைப் போன்ற உன் கடிதத்தினால் பட்டுப்போன மரம் போன்ற என் வாழ்வும் துளிர்த்தது. உன்னுடைய சரித்திரச் சுருக்கத்தைப் படிக்க மிகவும் விசனப்படுகிறேன். கடவுள், உன் வெளிப் புலனை அடக்கி உள் புலனைப் பிரகாசிக்கச் செய்திருக்கிற மகிமையை யறியாது, உன்னைப்பற்றி முன்பு நான் கேவலமாக எழுதியிருந்தும்,

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்." —திருக்குறள்

என்றபடி, நீ எனக்கு உபகாரம் செய்த பெருந் தன்மைக்கும், உயர்ந்த நோக்கத்திற்கும் உன்னிடம் நான் மன்னிப்பு வேண்டி வந்தனம் செய்கிறேன். அருமைச் சிநேகிதையே! மாதவன் உன்னை அடைய பெரும் பாக்கியம் செய்திருக்கிறானென்றே நான் நிச்சயமாகச் சொல்லுவேன். பகவான் உங்களை ஒரு குறைவு மின்றிக் காப்பாராக. நான் அவ்வூருக்கு வரும்போது உன்னை நேரில் வந்து பார்க்கிறேன். என்னை மன்னித்து, அன்பு அளிக்கவும்.

இங்ஙனம்,
உன்னைக் கனவிலும் மறவாத
லதா."

இதையும் படித்துப் பேரானந்தத்தை அடைந்த மாதவன் குழந்தையின் உடம்பைச் சாக்காகக் கூறி, லீவு எடுத்துக்கொண்டு ஆபீஸிலிருந்து கிளம்பிவிட்டான். அவனது பொங்கித் தவிக்கும் அன்பின் வேகமானது, காட்டு வெள்ளத்தையும் வெல்லும் சக்தி வாய்ந்ததாய் இருந்தது.

## 19

திலோத்தமா, தன் புருஷன் அன்று கடிதத்தைப் படித்துவிட்டுக் கலங்கியதை வெகு உன்னிப்பாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாளாதலால், அவன் பீச்சுக்குச் செல்கையில், அக் கடிதத்தைத் தன் பெட்டியில் வைத்துவிட்டுச் சென்றதைக் கவனித்தாள். அவன் சென்ற பிறகு, திருட்டுத்தனமாக அக் கடிதத்தை எடுத்துப் படித்துவிட்டு விஷயங்களை அறிந்துகொண்டு, அப்படியே பெட்டியில் வைத்தாள்.

உடனே வெகு சாமர்த்தியமாய் அன்றைய தபாலுக்கே லதாவுக்குக் கடிதம் எழுதி அனுப்பிவிட்டாள். அக் கடிதத்திற்குத் தனக்குப் பதில் வருமாவென்ற எதிர்பார்ப்பும், அத்தகைய அழகிய வனிதையைக் காதலித்த தன் புருஷனுக்குக் கோர ஸ்வரூபமாகிய தான் கிடைத்த விசனமுமே அவள் மனத்தில் போராடிக் கொண்டிருந்ததால், இதற்கு முன்பாவது மாதவனின் எதிரில் நின்று பேசாவிடினும் தலை குனிந்து செல்பவள், இப்போது அதுவும் செய்ய வெட்கி, வெகுவாய்க் குன்றிப்போய்விட்டாள்.

ஜுரம் அடிக்கும் குழந்தையைத் தூளியில் விட்டு ஆட்டிக் கொண்டே ஒரு சிறிய தாலாட்டுப் பாடிக்கொண்டிருந்தாள். ஆத்திரமுறும் மனத்துடன் ஓடிவந்த மாதவன் முற்றிலும் புதிய மனத்தினனாய் மாறிப்போய், திலோத்தமாவின் சங்கீதத்தைக் கேட்டுப் பிரமித்தான். "திலோத்தமா இத்தனை அழகாகப் பாடவும் திறமைப் பெற்றிருக்கிறாள் என்றதையும் இத்தனை நாளாக நான் அறியாது முட்டாளாகி விட்டேனே!" என்று எண்ணியபடியே, சில வினாடிகள் கதவின் பின்னாலேயே நின்றான்.

அவன் மனம் நிலையிடங்கொள்ளவில்லை. உடனே மெல்லக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்ததை எப்படியோ திலோத்தமா பார்த்துவிட்டு, சரேலென்று ஓட வாரம்பித்தாள். அவளுடைய மனோ உணர்ச்சியின் வேகம் எத்தனை உச்ச ஸ்தாயியிலிருக்கிறதென்பதை அறிந்த மாதவனின் விழிகளில் இன்பக் கண்ணீர் அருவிபோல் ஓட ஆரம்பித்தது. உடனே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, திலோத்தமாவை ஓடவிடாது இறுகச் சேர்த்துக் கட்டி அணைத்துக்கொண்டு முகத்தோடு முகம் பதித்துத் தன் கண்ணீரால் அவளை நீராட்டிவிட்டான்.

வாய் பேச முடியவில்லை; பேசினால்தான் எப்படிக் கேட்கும்? இந்த எதிர்பாராத சம்பவத்தினால் திலோத்தமா ஒன்றுமே தோன்றாது பிரமித்துப் போய்விட்டாள். இப்படியும் ஒரு காலம் தன் வாழ்நாளில் வரப்போகிறதே இல்லை என்று தீர்மானமாக நம்பியிருந்த திலோத்தமாவுக்கு அவள் இதயமே அதிக சந்தோஷத்தால் உடைந்துவிடும் போன்ற சம்பவம் நடந்து விட்டதும், அவளால் தாங்கமுடியாமல், தேம்பித் தேம்பி அழுதவாறு மாதவனின் தோள்மீது சாய்ந்தவள் அப்படியே பிரக்ஞையற்றுப் போய் விட்டாள் எனலாம்.

இருவருடைய கண்களும் கண்ணீர் பொழிவதில் போட்டியிட்டன. "கண்ணே! உன் அருமையை அறியாது மோசம்போய் விட்டேனே! உன் குணத்தின் அழகு ஒன்றே கோடி விலை பெறுமே! அதன் அழகை யறியாது மகா அபராதியாகிவிட்டேன், என்

லதாவைக் காத்த உன் சாமர்த்தியத்தை என்னென்பேன் ?" என்று தனக்குள் மகிழ்ந்தவாறு, லதாவின் கடிதத்தைக் கொடுத்தான்.

திலோத்தமா தலையைக் குனிந்தவாறே அதைப் படித்துப் பேரானந்தத்தை யடைந்தும், பேசத் தெரியாமல் திகைத்துப்போய் ஆனந்தக் கண்ணீர் பெருக மீண்டும் மாதவனின் அன்பு ததும்பும் அணைப்பிற்குள் ஐக்யமானாள்.

என்றும் இல்லாமல் இன்று, மாதவன் தன்னை மீறி அணை கடந்து ஓடும் அன்பு வெள்ளத்துடன் திலோத்தமாவைக் கட்டியணைத்து முகத்தோடு முகம் பதித்துக் கண்ணீர் பெருக நிற்கும் காட்சியைத் தூரவிருந்து கண்ட குழந்தைகள், "அடீடீ! இதோ பாரு! அடேய்! அடேய்! இங்கே வா! இங்கே வா! அண்ணாவும் மன்னியும் பேசமாட்டாளே, இப்போ பாரு கட்டிண்டிருக்கா! வேடிக்கே! வேடிக்கே!" என்று அவர்களும் சந்தோஷத்தில் மெய்ம்மறந்து கூவிக்கொண்டே குதித்தார்கள். இதைப் பார்த்துவிட்ட மாதவனின் உள்ளம், பன்மடங்கு உற்சாகமும் சந்தோஷமும் அடைந்து மலர்ந்தது. இவர்களுடைய ஆனந்தத்திற்குக் கடும் வெப்பத்தைக் கொடுக்கக் கூடாதென்று சூரிய பகவானும் மேகத்துள் மறைந்து சில்லென்ற காற்றை அள்ளி வீசச்செய்தான்.

## 20

மேலும் சில மாதங்கள் சென்றன. லதாவுக்கு ஓர் பெண் குழந்தை பிறந்தது. இம் மூவருடைய முதல் எழுத்துக்களையும் கூட்டி, அவர்களின் ஞாபகார்த்தமாய், அந்தக் குழந்தைக்குப் பரிபூர்ணமான சந்தோஷத்துடன், "மாலதி" என்று பெயர் வைத்தார்கள். ஜகதீசனிடமிருந்து, லதாவுக்கு புத்திரி பிறந்ததாக இவர்களுக்கு கடிதம் வந்தது. அதைப் படித்ததும் இவர்கள் அபாரமான சந்தோஷத்தையடைந்து பூரித்தார்கள். மாதவனும் திலோத்தமாவும், லதாவின் அணைகடந்த அன்பின் அடையாளமாகத் தோன்றியுள்ள அக்குழந்தைக்கு, அரிய பரிசுகள் பல அளித்தனர். அதைக் கண்டு, அத்தம்பதிகளின் உள்ளமும் களித்தது.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்; ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். —திருக்குறள்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

"ஜகன்மோகினி" பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை. (கஉ௲அசு)

183028

# ஜகன் மோகினி

ஆசிரியை : வை. மு. கோதைநாயகி அம்மாள்

16-வது ஆண்டு ஆரம்பம்

தொடர் நாவல் வெளிவரும் மாதப் பத்திரிகை

ஜனவரி 1939

ஆங்கில மாதம் முதல் தேதியன்று வெளிவரும்.
எல்லா பத்திரிகை விற்போரிடமும் கிடைக்கும்.

வருஷ சந்தா ரூ. 1—8

ஜீவிய சந்தா ரூ. 25

தனிப் பிரதி அணா 2

## ஜீவியச் சந்தா நேயர்களுக்கு இனாம்

நம் சஞ்சிகையுடன் இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

## ஒரு வருஷ சஞ்சிகையும் இதர நாவல்களும் இனாமாக வேண்டுமா ?

1. மூன்று புதியசந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு, ஒரு வருஷ சஞ்சிகை இனாம்.

2. எத்தனை புதிய சந்தா நேயர்களைச் சேர்த்து முன்பணம் நமக்கு அனுப்புகிறீர்களோ அத்தனை எட்டணா விலையுள்ள நாவல் இனாம்.

உதாரணமாக 4 சந்தா நேயர்களைச் சேர்த்தால், ரூ. 2 விலையுள்ள தியாகக்கோடி இனாம்.

# மாலதி

அல்லது

# அணைகடந்த அன்பு

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய

45-ஆவது நாவல்

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்] [அணா. 8

## ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

### எழுதிய நாவல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| **1925** | | |
| 1. வைதேகி | 2 | 8 |
| **1926** | | |
| 2. பத்மசுந்தரன் | 2 | 8 |
| **1927** | | |
| 3. சண்பகவிஜயம் | 1 | 12 |
| 4. ராதாமணி | 2 | 8 |
| **1928** | | |
| 5. கௌரீமுகுந்தன் | 1 | 12 |
| 6. நவநீதகிருஷ்ணன் | 2 | 0 |
| **1929** | | |
| 7. கோபாலரத்னம் | 0 | 14 |
| 8. மாதவமணி | 0 | 3 |
| 9. சாருலோசனு | 2 | 8 |
| **1930** | | |
| 10. சுகந்தபுஷ்பம் | 1 | 0 |
| 11. வீரவஸந்தா | 0 | 8 |
| 12. சாமளநாதன் | 2 | 0 |
| 13. ருக்மிணிகாந்தன் | 2 | 0 |
| **1931** | | |
| 14. ஸாரமதி | 1 | 12 |
| 15. நளினசேகரன் | 0 | 8 |
| **1932** | | |
| 16. பரிமளகேசவன் | 1 | 4 |
| 17. மூன்று வைரங்கள் | 0 | 8 |
| 18. உத்தமசீலன் | 1 | 4 |
| 19. கதம்பமாலே | 0 | 12 |
| **1933** | | |
| 20. காதலின் கனி | 2 | 8 |
| 21. சோதனையின் கொடுமை | 1 | 8 |
| 22. படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| **1934** | | |
| 23. தியாகக் கொடி | 2 | 0 |
| 24. ஜெயஸஞ்சீவி | 0 | 4 |
| 25. பக்ஷமாலிகா | 0 | 6 |
| 26. புத்தியே புதையல் | 0 | 14 |
| **1935** | | |
| 27. மங்களபாரதி | 2 | 0 |
| 28. பட்டமோ பட்டம் | 0 | 10 |
| 29. சுகுணபூஷணம் | 0 | 4 |
| 30. பிச்சைக்காரக்குடும்பம் | 0 | 8 |
| 31. ஆனந்தஸாகர் | 0 | 8 |
| 32. அம்ருததாரா | 0 | 4 |
| **1936** | | |
| 33. இன்பஜோதி | 1 | 4 |
| 34. ராஜமோஹன் | 1 | 4 |
| 35. அனுதைப் பெண் | 1 | 4 |
| 36. ப்ரேமப்ரபா | 0 | 8 |
| **1937** | | |
| 37. அன்பின் சிகரம் | 0 | 4 |
| 38. சாந்தகுமாரி | 1 | 0 |
| 39. மாயப்ரபஞ்சம் | 1 | 0 |
| 40. சந்திரமண்டலம் | 1 | 0 |
| **1938** | | |
| 41. வாழ்க்கையின் நாதம் | 1 | 4 |
| 42. உளுத்த இதயம் | 0 | 4 |
| 43. மகிழ்ச்சி உதயம் | 0 | 10 |
| 44. ஜீவியச் சுழல் | 1 | 4 |
| 45. மாலதி | 0 | 8 |
| 46. வத்ஸகுமார் | 0 | 6 |


“ஜகன்மோகினி” ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.